# ஐந்தாண்டு அபிவிருத்தி

தஞ்சாவூர் ஜில்லா



915

# ஐந்தாண்டு அபிவிருத்தி

915

## தஞ்சாவூர் ஜில்லா

சென்னை சர்க்கார்
செய்தி இலாகாவின் வெளியீடு
1951

[விலை, அணா 4.

இந்நூலின் இறுதியில் சேர்த்துள்ள ஜில்லாப் படத்தைத் தயாரித்து, அச்சடித்தும் கொடுத்தவர், சென்னை சர்க்கார் சர்வே இலாகாவினர் ஆவர். படத்தின் அளவு மிகப் பெரியதாய் இல்லாமையால், வெகு முக்கியமான குறிப்புகளை மட்டுமே அதில் காட்ட முடிந்தது.

இந்திய சர்க்கார் புதை பொருள் ஆராய்ச்சி இலாகாவினர் (Archælogical Department) புராதனக்கலைகள் சம்பந்தமான பல அழகிய படங்களை வெளியிட அனுமதி தந்துதவினர். அவற்றுள் பெரும்பாலானவற்றை, கடைசி அட்டைப்படத்தில் காணலாம்.

ஸ்ரீ எம். கே. ரங்கசாமி அய்யங்கார் அவர்கள் அளித்த சில படங்களும் இதில் சேர்க்கப் பட்டுள்ளன.

**படங்கள்**

மேல் அட்டை :—

முதல் பக்கம் :

பெரியது—

தஞ்சாவூர் கோயில்.

சிறியது—

விவசாய ஆராய்ச்சிப் பண்ணை—ஆடுதுறை.

கடைசி அட்டை :

தஞ்சாவூர் கோயில், திருச்சி மலைக்கோட்டை, உதகமண்டலம் காட்சி, கோடைக்கானல் ஏரி, ராமேஸ்வரம் கோயில் உட்புறக் கலைக் கூடம், புகளூர் பாலம், மேட்டூர் நீர்த் தேக்கம், பாபநாசம் மின்சார நிலையம், திருவரங்கம் கோயில் சிற்பம், மாமல்லபுரம் சிற்பம், குற்றால நீர்விழ்ச்சி.




மேன்மை தங்கிய சென்னை கவர்னர்
ஸ்ரீ ஸர் கிருஷ்ணகுமார் ஸின்ஹ்ஜி பவ்ஸின்ஹ்ஜி,
கே. ஸி. எஸ். ஐ., பவ்நகர் மஹாராஜா.



கனம் டாக்டர் டி. எஸ். எஸ். ராஜன்
சுகாதார மந்திரி



கனம் ஸ்ரீ எம். பக்தவத்ஸலம்
மராமத்து மந்திரி



கனம் ஸ்ரீ ஜே. எல். பி. ரோச் விக்டோரியா
உணவு மந்திரி



கனம் ஸ்ரீ பி. கோபால ரெட்டி
நிதி மந்திரி



கனம் ஸ்ரீ வி. பெருமாள்சாமி ரெட்டி
கைத்தொழில் மந்திரி



கனம் ஸ்ரீ பி. எஸ். குமாரசாமி ராஜா
முதல் மந்திரி



கனம் ஸ்ரீ கே. மாதவ மேனன்
கல்வி மந்திரி



கனம் ஸ்ரீ பி. பரமேஸ்வரன்
கிராம அபிவிருத்தி மந்திரி



கனம் ஸ்ரீ ஹெச். சீதாராம ரெட்டி
ரெவின்யூ மந்திரி



கனம் ஸ்ரீ கே. சந்திர மௌலி
ஸ்தல ஸ்தாபன மந்திரி



கனம் ஸ்ரீ ஏ. பி. ஷெட்டி
விவசாய மந்திரி



கனம் டாக்டர் டி எஸ்.எஸ். ராஜன் அவர்கள் சுகாதார மந்திரி பதவியை 1951-ம்வூ செப்டெம்பர்மீ 17உ ராஜிநாமா செய்த பிறகு கனம் ஸ்ரீ களா வெங்கடராவ் செப்டெம்பர்மீ 26உயிலிருந்து அப்பதவியில் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

# முன்னுரை

பொது ஜனப் பிரதிநிதிகள் சென்னை ராஜ்ய ஆட்சி முறையை மேற்கொண்டு இப்போது ஐந்தாண்டுகளுக்கு மேலாகிறது. நமது தேசத்தின் சரித்திரத்திலேயே இந்த ஐந்து வருஷ காலமும் ஒரு சோதனைக் கட்டமாகும். முற்கால ஆட்சி முறையின் சின்னங்கள், தற்கால மாறுதல்கள் காரணமாகத் தோன்றும் இன்னல்கள், வருங்கால நல்வாழ்வுக்குரிய பலமான அஸ்திவாரம் கோலவேண்டிய கடமை ஆகிய எல்லாவற்றையும், அரசாங்கம் ஏக காலத்தில் கவனிக்க வேண்டியதாயிற்று.

இத்தகைய சோதனைகளுக்கும் நிர்ப்பந்தங்களுக்குமிடையே, சர்க்கார் தங்கள் ஒரே லட்சியத்தை மறக்காமல் போற்றி வந்துள்ளனர். அதாவது, " எம் கடன் மக்களுக்குப் பணிசெய்து கிடப்பதே " என்னும் உயர்ந்த கொள்கையை அவர்கள் கடைப் பிடித்து வருகிறார்கள். மக்களுடைய நன்மையைக் கோரியும், அவர்களுடைய கட்டளையை நிறைவேற்றவும்தான், ஜனப் பிரதிநிதிகள் அரசாங்க பதவியை வகித்து வருகின்றனர்.

எத்தனையோ காலமாக நாம் கண்டு கொண்டிருந்த இலட்சியக் கனவுகள், கடந்த ஐந்தாண்டுகளில் நனவாகி இருக்கின்றன. மதுவிலக்கு, ஜமீன்முறை நீக்கம், நீதி-நிர்வாகப் பிரிவினை ஆகிய சீர்திருத்தங்கள், நம்முடைய எதிர்கால சந்ததியாருக்கு மிகச் சிறந்த நற்பயன் அளிப்பதோடு, சமூக அமைப்பிலேயே ஒரு புரட்சியை உண்டாக்கும் என்பதில் சந்தேகமில்லை.

மூல சாதனக் குறைவினால் ஏற்பட்ட முடக்கம், மற்றும் எத்தனையோ பெரிய சங்கடங்களுக்கும் இடையே, அநேக அபிவிருத்தித் திட்டங்கள் வெற்றிகரமாக நிறைவேறியுள்ளன. இத்திட்டங்கள் கஷ்டமான உணவு நிலைமையை ஓரளவு சமாளிக்க உதவுவதோடு, பொதுவாகப் பொருளாதாரத் துறையில் ஸ்திரமான நிலையையும் முன்னேற்றத்தையும் ஏற்படுத்தக் காரணமாயிருக்கின்றன.

பிரிட்டிஷார் தங்கள் ஆட்சிக் காலம் பூராவும் நீர்ப்பாசனத்துக்காகச் செலவு செய்த தொகைக்கு மேலேயே, நாம் கடந்த ஐந்தாண்டுகளில், அதன் பொருட்டு இந்த ராஜ்யத்தில் செலவிட்டிருக்கிறோம். 1945–46-ம் ஆண்டில் ஒரு கோடி ரூபாய்க்கும் குறைவாக இருந்த நீர்ப்பாசனச் செலவு, 1951–52-ம் வருஷத்தில், சர்க்காரின் வரவு செலவுத் திட்ட மதிப்பின்படி, 10 கோடி ரூபாய்க்கு மேலாகியுள்ளது. இப்போது நமது ராஜ்யத்தில் மொத்தம் 101 லட்சம் ஏக்கரா நிலங்களுக்குப் பாசன வசதி கிடைக்கிறது.

தவிர, நமது சென்னை ராஜ்யத்தில் மின்சார உற்பத்தி இரு மடங்கு அதிகமாகியுள்ளது. மின்சார அபிவிருத்திக்கான ஐந்து வருஷத் திட்டத்தில் மூன்றில் இரு பங்கு பூர்த்தியாகி விட்டது. இதன் மூலம் சுமார் 1,600 கிராமங்களுக்கு மின்சாரம் சப்ளையாகிறது. கிராமங்களுக்கு மின்சார வசதி செய்துகொடுப்பதில் இந்தியா முழுவதிலும் சென்னை ராஜ்யமே முதன்மை ஸ்தானம் வகிக்கிறது. 1945–46-ம் வருஷத்தில் மின்சாரத் துறையில் அரை கோடி ரூபாய்க்குக் கொஞ்சம் அதிகமாக மட்டும் சென்னை அரசாங்கத்தார் செலவிட்டனர். ஆனால், 1951–52-ம் ஆண்டிலோ, பட்ஜெட் மதிப்பின் பிரகாரம், ஒன்பது கோடி ரூபாய்க்குமேல் செலவிடத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. எனவே, ஐந்தாண்டுகளில், நீர்ப்பாசனத் துறையில் ஏறக்குறைய பத்து மடங்கும், மின்சாரத் துறையில் இருபது மடங்கும், அபிவிருத்தி ஏற்பட்டுள்ளது விளங்கும்.

இத்தனை சாதனைகளுக்கும் பொது ஜனங்களின் பூரண ஒத்துழைப்பே காரணமாயிருந்தது. சர்க்காருடன் மக்கள் மனமுவந்து ஒத்துழைத்ததால்தான், அநேக காரியங்களை நிறைவேற்றுவது சாத்தியமாயிற்று. ஆகவே, இவற்றை எல்லாம் சாதித்த பெருமை, நிச்சயமாக இந்த ராஜ்ய மக்களையே சார்ந்ததாகும். அதாவது, பொது ஜனங்களாகிய உங்களுக்கே அப்பெருமை உரியதாகும்.

கடந்த ஐந்தாண்டுகளில் ஒவ்வொரு ஜில்லாவிலும் ஏற்பட்ட க்ஷேமாபிவிருத்திகளை விளக்கும் வெளியீடுகளில், இப்புத்தகம் ஒன்றாகும். உங்கள் சர்க்கார் என்னென்ன செய்தார்கள் என்பதை இதன் மூலம் உங்களுக்குச் சமர்ப்பிக்கிறோம். இதை அறிந்து கொள்ளவேண்டிய உரிமையும், இதுபற்றித் தீர்ப்பளிக்கும் பொறுப்பும் உங்களுக்கே உண்டு.

பி. எஸ். குமாரசாமி ராஜா

# அறிமுகம்

*பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும்*
*நற்றவ வானினும் நனி சிறந்தனவே*

நாலா திசையிலும் மரகதப் போர்வை விரித்த மாதிரி இருந்த நன்செய் வயல்களினூடே ரயில் வண்டி, கனவேகமாக ஓடிக்கொண்டிருந்தது. நெல் வயல்களை அடுத்தாற்போல், வாழைத்தோட்டங்கள், கண்ணுக்கெட்டிய தூரம் பசுமை விருந்தளித்தன. இவற்றிற்கிடையே வளைந்தும் நெளிந்தும் முத்தாரம் போல் ஓடும் வாய்க்கால்கள் எத்தனை எத்தனை!

தஞ்சை நகருக்கருகே வண்டி வந்துவிட்டதென்பதை, தொலைவில் பெருவுடையான் கோபுர தரிசனம் உணர்த்துகின்றது. சூரிய தேவனின் பொன்னொளிப் படலத்தில், அந்தக் கோபுரம் கம்பீரமாக எழுந்து நின்று, நல்வரவு கூறுகிறது. நம் எண்ணமெல்லாம் மேலோங்கிப் பறக்கின்றன. அப்போது, காலத்திரையில் தீட்டப்பட்ட எத்தனையோ வண்ணச் சித்திரங்கள் நம் மனக்கண் முன் களிநடம் புரிகின்றன.

மாமன்னன் ராஜராஜனின் மகத்தான சேவையை மௌனமாகப் பறைசாற்றிக்கொண்டு நிற்கும் கலைக்கூடம் அந்தக் கோபுரம்! நம் முன்னோருடைய உன்னத நிலையை நினைவூட்டிக்கொண்டிருக்கும் சிறப்புச் சின்னம் அது!

மக்களின் வாழ்வையே கலைமயமாக்க நினைத்த ஒரு லட்சியவாதியின் நிரந்தர சாதனை அது! சுமார் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்த நம் சுதந்திர நாட்டு வளனை யும், மக்களின் சுபிட்ச வாழ்வையும், அரசியல் தலை வரின் சேவை மனப்பான்மையையும் நினைவூட்டிக்கொண்டு வரும் துண்டுகோல் அது!

அற்புதமாக அமைந்த அந்தக் கோபுரத்தின் தனிச் சிறப்பைக் கண்டு நாம் இன்றும் பிரமிக்கிறோம். ஆனால், காலம் செல்லச் செல்ல, நம் நாட்டில் ஏற்பட்ட பல்வேறு இழிவு நிழல்கள் கொஞ்சம் கொஞ்சமாகப் படரலாயின. அந்நிய அரசாங்கம் ஏற்பட்டு, அதன் விளைவாக நம் மக்க ளுடைய பொருளாதார, கலாசார வாழ்வில் தோன்றிய சீர் கேடுகளை, அங்கே நுட்பமாகக் காண முடிகிறது. அதைச் சுற்றியும் பாழடைந்துள்ள அகழிகள், மதில்கள், அருகே யுள்ள அரண்மனை ஆகியவை பண்டைநாள் பெருமையை யும் இடைக்கால இழிவையும் கூறாமல் கூறி வருகின்றன. அப்போதுங்கூட, அறிவொளி அடியோடு மங்கிவிடவில்லை என்பதற்கு, சரஸ்வதிமஹால் நூல் நிலையமே சிறந்த அத்தாட்சி.

பண்டைக்காலப் பெருமை, இடைக்கால இழிவு ஆகிய எல்லாவற்றையும் நன்கு ஆராய்ந்து பார்த்து, மக்களின் சுபிட்ச வாழ்வுக்கு வழி கோலத் திட்டமிட்டது, பொது ஜன அரசாங்கம். பொதுஜன மேம்பாட்டை லட்சிய மாகக்கொண்டு, என்றும் நிலைத்து நிற்கக்கூடிய பல்வேறு திட்டங்களை, சிறிதும் கால தாமதம் செய்யாமல் அவர்கள் நிறைவேற்றி வந்துள்ளனர். எவ்வளவோ இடையூறு களுக்கும் இன்னல்களுக்குமிடையில், முடிந்த வரையில் எத்தனையோ செய்திருக்கிறார்கள் என்பதை எவரும் மறுக்க முடியாது; மறக்கவும் இயலாது.

# நிலவளம்

*விவசாயம், கால்நடைகள் ஆகியவற்றின் அபிவிருத்தியை நவீன விஞ்ஞான முறையில் அமைத்திட அரசாங்கம் முயலும்.*

—இந்திய அரசியல் அமைப்புச் சட்டம்
ஷரத்து—48

அதோ அன்னை காவேரி! தன்னுடைய மக்களைக் காத்துப் போஷிப்பதில் அன்பும் ஆவலும் கொண்டு பாய்ந்தோடி வரும் அன்புத்தாயை வணங்குவோம்! தஞ்சையை இன்றல்ல, நேற்றல்ல, கற்பகோடி காலமாய் 'நெற்களஞ்சியமாக' வளமூட்டி வாழ்வித்து வரும் காவேரி வாழி!

எங்கோ 500 மைல்களுக்கப்பால் குடகிலே பிறந்து, மைசூர் ராஜ்யத்தின் வழியாக சேலம், ஈரோடு, கரூர், திருச்சி வரை வந்ததும், தஞ்சை நாட்டு மக்களிடம் கொண்டுள்ள அளவு கடந்த வாஞ்சையால் அகண்டமாகப் பிரவாகித்து, இருகிளைகளாகப் பிரிந்து இந்த ஜில்லாவையே அணைத்துக்கொள்வது போல் (காவேரி-கொள்ளிடமாக) ஆர்வத்துடன் வரும் அழகை வருணிப்பது அசாத்தியம்.

அன்னை காவேரி எத்தனையோ ஆயிரம் ஆண்டுகளாய் நம்மவரை, நம்முடைய மூதாதையரை, மூதாதைகளின் மூதாதையரைக் காத்தவள். இந்த ஆற்றங்கரையிலே எத்தனையோ சம்பவங்கள் நடந்திருக்கின்றன. சோழர்கள், நாயக்கர்கள், மராத்தியர்கள் ஆகிய எத்தனையோ வம்ச மன்னர்கள் இந்தத் தஞ்சையில் தான் சாம்ராஜ்யம் கட்டி ஆண்டனர். மன்னர்கள் வருவார்கள், போவார்கள்; சாம்ராஜ்யங்கள், சச்சரவுகள், யுத்தங்கள், இப்படி எத்தனையோ விபரீதங்கள் தோன்றலாம். ஆனால் மக்கள் என்றும் இருப்பர். எனவே மக்களை வாழ்விப்பதும், காத்துப் போஷிப்பதும் அன்னையின் கடமை. இந்தக் கடமைக்குச் சின்னமாக இன்றளவும் இருப்பவள் அன்னை காவேரி.

காவேரியும், கொள்ளிடமும், இதர உப நதிகளும் இந்த ஜில்லாவையும் அதன் மக்களையும் காத்துப் போஷிப்பதில் போட்டி போடுகின்றன!

## வளம் கனிந்த நிலம்

தஞ்சை ஜில்லாவின் பரப்பளவு சுமார் 2,397,981 ஏக்கர்களாகும். இவற்றில் 1,366,101 ஏக்கர்களில் உணவு தானிய சாகுபடி நடைபெறுகிறது. சுமார் 24,421 ஏக்கர்கள் காடுகளாகும். 191,608 ஏக்கர்கள் சாகுபடிக்கேற்ற ஆனால் சாகுபடி செய்யப்படாத நிலமாகும். காவேரி டெல்டா மூலம், இந்த ஜில்லாவின் சாகுபடி நிலத்தில் பாதிப் பகுதி பயிராகிறது. இதர பாகத்திற்குக் கிளை நதிகள் மூலமும், உப நதிகள் மூலமும், வாய்க்கால்கள் மூலமும் நீர்ப்பாசன வசதிகள் கிடைக்கின்றன. ஆகக்கூடி சுமார் 87½ சத விகிதம்—முக்கால் பாகத்துக்கு மேல்—ஆற்றுப் பாசனத்தினால் பயிராகிறது. மிகுதி பருவ மழையை எதிர் பார்க்கிறது.

ஆனால் 1946-லிருந்து இந்த ஜில்லாவிலும், இதர ஜில்லாக்களைப்போல், மழையில்லாததன் காரணமாகப் பல பகுதிகளில் பாசன வசதி குலைந்துவிட்டது. ஆற்றுவெள்ளம்

பெருக, பருவ மழையும் அவசியம். தவிர, ராஜ்யம் பூராவுக்கும் பொதுவான முறையில் உணவு நிலையைச் சரிக்கட்ட, அதிக உணவு உற்பத்தித் திட்டப்படி பற்பல நடைமுறைகள் மேற்கொள்ளப்பட்டன.

## நடை முறைத் திட்டம்

ஏரி, குளம் சீரமைப்பு, கிணறு வெட்டுதல் போன்ற இயற்கை வசதிகளைத் திருத்தி அமைப்பதில் மக்கள் சர்க்கார் தீவிரமாக முனைந்தனர்.

அகல உழுவதைக்காட்டிலும் ஆழ உழுதல் பெருநன்மையல்லவா? முதலில் இரும்புக் கலப்பைகளின் அவசியத்தையும் பயனையும் விவசாயிகளிடையே வற்புறுத்தி, குறைந்த உழவில் நிறைந்த உற்பத்தியைக் காணலாம் என்பதை விவசாய இலாகாவினர் செயல் பூர்வமாகக் காட்டினர்.

கடந்த நான்கு வருஷங்களில் விவசாயிகளிடையே இந்த இலாகா சுமார் 900 இரும்புக் கலப்பைகளைக் குறைந்த விலைக்கு விநியோகித்துள்ளது. இதே மாதிரி பசுந்தழை உரத்தை விவசாயத்துக்குப் பயன் படுத்தும் விஷயத்திலும், சர்க்காரின் விவசாய இலாகா வழிகாட்டியுள்ளது.

கடந்த நாலாண்டுகளில் சுமார் $1\frac{1}{2}$ லட்சம் ஏக்கர்கள் பசுந்தழை உரத்தில் சாகுபடியாகியுள்ளது. சுமார் 20,407 டன் பிண்ணாக்கையும், 8,160 டன் ரசாயன உரத்தையும் இந்த இலாகா விவசாயிகளுக்குக் குறைந்த விலையில் விநியோகித்துள்ளது.

இதேபோல் சுமார் 1,810 டன் நல்ல பொறுக்கு விதைகளைக் கடந்த நான்காண்டுகளில் இவ்விலாகா கொடுத்திருக்கிறது. இந்தப் பொறுக்கு விதைகள் சாகுபடியானதன் மூலம் உணவு பொருள்கள் முன்னைக்காட்டிலும் சுமார் 10 சதவிகிதம் அதிகரித்திருக்கிறது.

பிரதான உணவுப் பொருளான நெல் உற்பத்தியைத் தவிர, இதர தானியங்களான ராகி, சோளம், வேர்க்கடலை, எள், வரகு, கரும்பு, தேங்காய், போன்றவை இந்த ஜில்லாவில் சில இடங்களில் ஓரளவு உற்பத்தியாகின்றன.

சுமார் 14,460 ஏக்கர்களில் ராகியும், சுமார் 51,000 ஏக்கர்களில் வேர்க்கடலேயும், 15,800 ஏக்கர்களில் எள்ளும், வரகு தானியம் சுமார் 28,500 ஏக்கர்களிலும், துவரை சுமார் 6,570 ஏக்கர்களிலும், கரும்பு சாகுபடி 1,560 ஏக்கர் களிலும், வாழை சுமார் 12,000 ஏக்கர்களிலும், இதர காய் கறி தானியங்கள் சுமார் 7,000 ஏக்கர்களிலும் விளேகின்றன.

## காலத்திற்கேற்ற ஆராய்ச்சி

நாகப்பட்டினத்தில் கடற்கரையை அடுத்த உவர் நிலத்தில் பயிர்கள் உவரைத் தாங்கி விளேகின்றன. ஆனால், நிறைய விளேயவில்லே. நன்னிலம் தாலுகாவில் நிறைய விளேகிறது. உவரைத்தாங்கும் நெற்பயிரையும் நன்ருக விளேயும் நெற்பயிரையும் சேர்த்து ஒரு பயிர் உண்டாக்கினல்?

உவர் உப்பைத் தாங்கக் கூடியவகையும் நன்ருக விளேயும் வகையும் கொஞ்சங் கொஞ்சமாக நல்ல சூழ்நிலேயில் செழித்து வளர்ந்து ஒரே காலத்தில் பூ வரும்படி வளர்க்கப் படுகின்றன. உவர் நெல்வகை நெல் குரும்பையைச் சிறிதே பிரித்து—கையினல் அல்ல, கருவிகளால்—அதிலுள்ள மகரந்தப்பைகள் அகற்றிவிடப்படுகின்றன. மற்ருெருவகை நெல் (நன்ருக விளேவு தருவது) வளர்ந்து வந்ததிலிருந்து மகரந்தப்பைகள் தக்க காலத்தே இந்தக் குரும்பையில் தூவப்பட்டு மெதுவாக இதழ்கள் மூடிவைக்கப்படுகின்றன. மிகவும் நுணுக்கமான காரியங்கள். பலதரம், பலகாலம் தோல்வி; கடைசியில் வெற்றி. வெற்றி பெற்ற பயிருக்குப் புதுபெயர் இடப்படுகிறது. புதிதாகத் தோன்றிய பயிர் விதைகள் உவரைத்தாங்கி நன்ருக விளேகின்றன.

## முயற்சி திருவினை ஆக்கும்

உவர் நிலத்தில் நன்ருக விளேயும் பயிருக்கு ADT–23 என்று பெயர். ஆடுதுறை ஆராய்ச்சி நிலேயத்திலிருந்து இது 1950-ம் ஆண்டு வெளியிடப்பட்டது.

தனிப்பட்டமுறையிலும், ஒட்டிச்சேர்த்தல் முறையிலும் நூற்றுக்கணக்கான குருவை, சம்பா வகைகளைச் சாகுபடியில் ஆராய்ச்சி செய்து கீழே கண்ட குணங்கள் உள்ள விதைகளை ஆடுதுறை ஆராய்ச்சிப்பண்ணையில் உண்டாக்குகிறார்கள் :—

1. குறுகிய கால அளவிலே விளைவு.

2. அதிக விளைவு.

3. தண்ணீர்த்தட்டுகளையும் அதிகத் தண்ணீரையும் தாங்கி விளைவது.

4. நெல் உதிர்ந்து போகாமல் இருத்தல்.

5. உயர்தர அரிசி கொடுக்கும் பயிர்.

6. நோய்களை எதிர்த்துநிற்கும் திடமான பயிர்கள்.

ஆகியனவே இந்த ஆராய்ச்சி முடிவுகள்.

மற்றொரு பக்கத்தில் நெல் அறுவடைக்குப்பிறகு, பருத்திப் பயிரிடலாமா என்றும் பார்க்கப்படுகிறது. மத்திய அரசாங்க வானிலை இலாகாவின் ஆதரவில் பயிர்களுக்கு உகந்த சூழ்நிலையை உன்னிப்பார்க்க இப்பொழுது சூழ்நிலை ஆராய்ச்சி நிலையம் - அதாவது ஆராய்ச்சித்திடல் - ஒன்றும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

வயல்களில் எந்தெந்தக் காலத்தில் எவ்வளவு தண்ணீர் நின்றால் நல்லது என்பது போன்ற ஆராய்ச்சிகள் மராமத்து இலாகாவும், விவசாய இலாகாவும் கூட்டாகச் செய்கின்றன. அதிக விளைவு—குறைந்த செலவு இவைகளே முக்கியமாக ஆராய்ச்சியின் நோக்கம்.

## ஆடுதுறை காட்டும் வழி

ஆராய்ச்சியோடு கூட அதிக வருமானத்திற்கும் வழி சொல்லிக் கொடுக்கிறது இந்தப் பண்ணை. விவசாயத்தைப் பார்த்துக் கொள்வதோடு கூட, வேலை இல்லாதிருக்கும் காலங்களில் வீண்பொழுது போக்காது எளிதில் பயிரிடக் கூடிய கரும்பு வகைகள், வாழைகள் இன்னும் பல பழ மரங்கள், கறி காய் வகைகள், புல் வகைகள் பயிர்செய்து கொடுக்கும் விதத்தையும் சொல்லிக் கொடுத்து வருகிறது.

ஒட்டுச்சேர்த்த பழச் செடிகளும், நாற்றுகளும், வள்ளிக் கிழங்குகளும், வேர்ப்பதியன்களும் வேண்டிய அளவு உழவர்களுக்குக்கொடுத்து உதவுகிறது; துணைத் தொழில்கள் பல கற்றுக் கொண்டு, தங்களை வளம்படுத்திக் கொள்வது எவ்வாறு என்றும் கற்பிக்கப்படுகிறது.

நிலத்தில் எந்தெந்தக் காலத்தில் எதெதுசெய்ய வேண்டும்? இம்மாதிரி விவரங்களை அவ்வப்போது பக்கத்தில் இருக்கும் விவசாய அதிகாரியைக் கேட்டுத்தெரிந்து கொள்ளலாம்.

அனுபவ ஆராய்ச்சி முடிவுகளை நேருக்குநேர் காட்டி, நம் ஜீவனத்துக்கு அடிகோலுகிறது ஆடுதுறை ஆராய்ச்சிப் பண்ணை. அது மேன்மேலும் சிறந்த முடிவுகளைக் கண்டு, விவசாயிகளுக்கு உற்ற தோழனாகவும், ஆசிரியனாகவும் விளங்கி வருகின்றது.

இந்த ஜில்லாவில் மட்டுமன்றி ராஜ்யம் பூராவும் சுமார் 33 ஆராய்ச்சி நிலையங்களையும், மாதிரிப் பண்ணைகளையும் சர்க்கார் அமைத்துள்ளனர். இன்னும் சுமார் 11 பழ ஆராய்ச்சிச் சாலைகளும், சுமார் 5 பூந்தோட்ட ஆராய்ச்சி ஸ்தலங்களும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இவை எல்லாம் விவசாயிகளின் நலத்துக்காக, உதவிக்காக ஏற்படுத்தப் பட்டிருக்கின்றன / வென்பதை விளக்காமலே தெரிந்து கொள்ளலாம்.

## விவசாயப் பாடசாலை

தஞ்சை ஜில்லாவில் ஆடுதுறை விவசாய ஆராய்ச்சி நிலையம் மட்டுமின்றி, பட்டுக்கோட்டையிலும் ஒரத்த நாட்டிலும் ஆராய்ச்சிப் பண்ணைகள் உள்ளன.

விவசாயத்துறையில் பரம்பரை பரம்பரையாய் ஈடுபட்டுள்ள இந்த ஜில்லாவாசிகள் பலர் சில ஆண்டுகளுக்கு முன்பு உத்தியோகத் துறையில் அக்கரை காட்டி இத்துறையில் அசிரத்தையாயிருந்தனர். இந்த அசிரத்தைதான் விவசாய அபிவிருத்திக்கு விரோதமாகும். உணவு உற்பத்திக்கு இந்நிலை மிகவும் பாதகமானது.

இதை நன்குணர்ந்த மக்கள் சர்க்கார், பாரம்பரியத் தொழிலில், மக்கள் மனம் பூரணமாக ஈடுபடும் நோக்கத்தில் ஒரத்த நாட்டில் ஒரு விவசாயப் பாடசாலையையே ஆரம்பித்தனர்.

1948-ம் ஹு ஜூன் மீ 16-ந் தேதி இந்தப் பாடசாலை ஆரம்பமாயிற்று. இதில் சேரும் மாணவர்களுக்கு முக்கியமான ஒரு நிபந்தனை உண்டு. அதாவது இதில் படிப்பவர்கள், படித்து முடித்த பிறகும் விவசாயத்தொழிலிலேயே ஈடுபட்டிருக்கவேண்டும்; வேறு உத்தியோகந்தேடிப் போய் விடக்கூடாது.

இந்தப் பயிற்சிப் பாடசாலை வருஷா வருஷம் சுமார் 50 மாணவர்களுக்குக் குறையாமல் பயிற்சி அளிக்கும். இந்தப் பாடசாலையைச் சுற்றிலும் சுமார் 150 ஏக்கர்கள் அனுபவ பூர்வமான பயிற்சிக்குப் பயன் படுத்தப்படுகின்றன.

இத்துடன் ஒரு பால் பண்ணையும் அமைக்கப்பட்டுள்ளது. இதன் வளர்ச்சியும் இதனால் உண்டாகக்கூடிய பலனும் இந்த ஜில்லாவுக்கு எதிர்காலத்தில் பெரு நன்மை அளிக்கும்.

## பட்டுக்கோட்டையிலும் ஒரு பண்ணை

சுமார் 30 ஆண்டுகளாகத் தென்னிந்தியாவிலேயே சிறந்த முறையில் பணியாற்றிவரும் ஆடுதுறை ஆராய்ச்சிப் பண்ணைக்குத் துணையாக வாழைப்பழ ஆராய்ச்சி நிலையம் ஒன்றும் ஆரம்பிக்கப்பெற்று, சமீபகாலத்தில் இதன்மூலம் சிறந்த சாதனைகளையும் நம்மவர் கண்டுள்ளனர்.

பட்டுக்கோட்டையிலும் சமீப காலத்தில் ஒரு விவசாய ஆராய்ச்சி நிலையம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஆயினும் முதலில் 5 வருஷங்களிலே நடத்தவேண்டும் என்ற நோக்கத்தில் ஆரம்பமான இந்த ஆராய்ச்சி நிலையம், இன்னமும் வளருகிறது. இந்த வளர்ச்சிக்குக் காரணம் இதன் சிறந்த சாதனைகளேயாகும். சிறப்பாக, சில புதிய துறைகளில் நூதன ஆராய்ச்சி வெற்றியளித்திருக்கிறது.

மேட்டூர் வாய்க்காலில் வருஷா வருஷம் வைகாசி-ஆனி முதல் மார்கழி-தை வரை தண்ணீர் விடுகிறார்கள். இந்தக் காலத்துக்குள் அதாவது 6 மாதங்களுக்குள் விவசாயம் செய்து லாபகரமான கண்டுமுதலைக் காணவேண்டும். இதை எப்படிச் சாத்தியமாக்குவது?

இதுவே பட்டுக்கோட்டை ஆராய்ச்சி நிலையத்தின் முதல் பிரச்னை. இந்தப் பிரச்னையில் நீண்டகால ஆராய்ச்சிக்குப் பிறகு வெற்றிபெற முடிந்தது. இப்பொழுது நல்ல முதல்தர மான விதைகளை இந்தப் பிராந்திய விவசாயிகளுக்கு ஏராள மாக விநியோகிக்கிறது. தவிர பட்டுக்கோட்டைப் பிராந் தியத்தைத் தனித்ததொரு விவசாய ஜில்லாவாகப் பிரித் துள்ளனர்.)

## உற்பத்திப் பெருக்கு

இந்தப் பிராந்தியத்தில் விவசாய இலாகாமூலம் கடந்த நான்கு ஆண்டுகளில் 378 கன இரும்புக் கலப்பைகளும், 8,638 இலேசான கலப்பைகளும் விலைக்கு விநியோகிக்கப் பட்டன.

பிண்ணாக்கு எரு சுமார் 10,000 டன்களும், ரசாயன உரம் சுமார் 6,000 டன்களும் விநியோகிக்கப் பெற்றுள் ளன. இந்தப் பிராந்தியத்தில் அதிக உணவு உற்பத்தித் திட்டப்படி அதிகமாக விளைந்தது சுமார் 5,000 டன் களாகும்.

சுமார் 600,000 ஏக்கர்களில் நெல்லும், கேழ்வரகு சுமார் 5,000 ஏக்கர்களிலும், மக்காச்சோளம் சுமார் 2,000 ஏக்கர்களிலும், எள் 6,000 ஏக்கர்களிலும், வரகு சுமார் 10,000 ஏக்கர்களிலும், இதர வாழை, மா, போன்றவை களும் காய்கறிப்பயிர்களும் சுமார் 8,000 ஏக்கர்களிலும் பயிராகின்றன.

மக்கள் பிரதிநிதிகள் அரசாங்கப் பதவியேற்றதும், விவசாயிகள் தங்களிடமுள்ள உபரி நெல்லை விற்பதற்கு வசதியாக விலையை அதிகரித்தனர். விவசாயிகளுக்குப் போனஸ் கொடுத்தனர். 1946-47-ல் இந்தப் போனஸ்

பணமாகவும் பிறகு பாதி பணமாகவும், பாதி உரமாகவும் கொடுத்து உதவினர். 1947-ல் பங்கீட்டு முறையை நீக்கலாம் என்று ஒரு சார்பினர் கோரியதும், கொஞ்சகாலம் நீக்கிப் பார்த்தனர். இதனுல் கண்ட பலன் விலையேற்றக் கொடுமை; பொருள் எங்கோ மறைந்துவிட்டது; எனவே, மீண்டும் பங்கீடு முறையை அமுலுக்குக் கொண்டுவர நேர்ந்தது.

தஞ்சை உபரி ஜில்லா வாகையால் அங்கேரேஷன் அவசியமில்லை என்று கைவிடப்பட்டது. ஆயினும் ஒரு வரயறைத் திட்டம் வேண்டாமா? எங்கும் பஞ்சமும் பற்ருக்குறையும் பரவியிருக்கும்போது உபரி ஜில்லாவில் அரசாங்கம் என்ன செய்யவேண்டும்? முதலில் அந்த ஜில்லாவின் தேவையைக் கவனித்து குறைவு நேராதபடி பார்த்துக் கொள்ளவேண்டும். தேவைக்கு அதிகமாயுள்ள பொருள்களைப் பற்ருக்குறைப் பிரதேசங்களுக்கு அனுப்பிக்கொடுக்க வேண்டியது தார்மீகநெறி.

தஞ்சை ஜில்லாவிலிருந்து கீழ்க்கண்ட பற்ருக்குறைப் பிரதேசங்களுக்கு அனுப்பப்பெற்ற உணவுப் பொருள் அளவு விவரம்:—

| வருஷவாரியாக | டன் | பற்ருக்குறை ஜில்லாக்கள் |
|---|---|---|
| 1945–46 ... | 213,022 | (1) மதுரை, (2) ராமநாதபுரம், (3) திருநெல்வேலி, (4) திருச்சி, (5) கோவை, (6) தென் ஆற்காடு, (7) வட ஆற்காடு, (8) செங்கல்பட்டு, (9) சென்னை, (10) மலையாளம். |
| 1946–47 ... | 199,724 | |
| 1947–48 ... | 214,266 | |
| 1948–49 ... | 256,789 | |
| 1949–50 ... | 203,337 | |

## விவசாயிகளுக்குக் கடன் உதவி

ராஜாஜி தலைமையில் நம் ராஜ்யத்தை நிர்வகித்த முந்திய மக்கள் சர்க்கார் கொண்டு வந்த கடன் நிவாரண மசோதா மூலம் இந்த ராஜ்ய விவசாயிகளுக்கும், இந்த

ஜில்லா விவசாயிகளுக்கும் குறிப்பிடத்தக்க பல நன்மைகள் ஏற்பட்டன. ஆயினும் இன்றளவும் ஏழை எளிய விவசாயிகளின் கஷ்டங்கள் அடியோடு தீர்ந்தபாடில்லை. இவர்களுக்கு விவசாயத் துறையில் இடைஞ்சல்களின்றி மனப்பூர்வமாக ஈடுபட ஊக்கமளிக்க வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பு. இதற்காக விதைகள் வாங்க, உரம் வாங்க விவசாயக் கருவிகள் வாங்க இந்த விவசாயிகள் படும் வேதனைகண்டு, மக்கள் சர்க்கார் கடந்த நான்கு வருஷங்களில் சுமார் 13,29,640 ரூபாய் கடன் கொடுத்து உதவியுள்ளனர். இவை தவிர விவசாயிகளுக்கு 28,780 விவசாயக் கருவிகளும், 1,201 டன் நிறை இரும்பும், 28 நீர் இறைப்புக் கருவிகளும், டிராக்டர்களும் வாங்கித்தரப் பெற்றன.

இவற்றுடன், டெல்டா பிரதேசத்திலுள்ள எளிய விவசாயிகள் அதிக உற்பத்திப் பெருக்கில் அக்கரை கொள்ளும் வகையில், விவசாயி ஒவ்வொருவருக்கும் ரூ. 200 கடனைக் கொடுத்து உதவியுள்ளனர். இதற்கு வட்டி கூடக் கிடையாது. இந்த இனத்தில் மக்கள் சர்க்கார் சுமார் 5,70,000 ரூபாய் செலவு செய்திருக்கின்றனர்.

விவசாயிகளின் அனுபவ ரீதியான அறிவு வளரவும், நுண்ணிய ஆராய்ச்சி முடிவுகளை அறியவும், விவசாயிகளை ஆராய்ச்சி நிலையங்களுக்கும், மாதிரிப் பண்ணைகளுக்கும் அழைத்துச் சென்று நேரிலேயே அபிவிருத்தி முறைகளைக் காண்பிப்பதில் விவசாய இலாகா கவனங் காட்டுகிறது.

### சிறந்த விவசாயத்துக்குப் பரிசுகள்

உழவர்களுக்கு ஊக்கம் அளிக்கும் பொருட்டு அதிகமாகப் பசுந்தழை உரங்கள் பயிர்செய்து, சிறந்த முறையில் விவசாயப் பண்ணைகள் வைத்திருந்த விவசாயிகளுக்கு உழவுக் கருவிகளாக, உபயோகிக்கப்படும் பரிசுகளாக ஆண்டுதோறும் வழங்கப்பட்ட தொகையின் மதிப்பு ரூபாய் அறுநூறு. கடந்த நாலைந்தாண்டுகளில் 80 பேருக்கு மேல் பரிசுகள் பெற்றிருக்கின்றனர்.

விவசாயிகள் விவசாயத்தையே நம்பியிருக்கக்கூடாது. விவசாயத்தோடுகூட கால்நடைப்பண்ணை, கோழிப்பண்ணை, மீன் வளர்ப்பு முதலிய துணைத்தொழில்களையும் கைக்கொண்டால் வாழ்க்கை வளம்படும் என்பதை, விவசாயிகள் மனதில் பதியவைத்து அந்தத் தொழில்களில் அவர்கள் ஊக்கம் காட்ட, திறமையாகப் இந்தப் பண்ணைகளைப் பாதுகாத்து வருபவர்களுக்கு மொத்தத்தில் ரூ. 100 மதிப்புள்ள பரிசுகள் வருஷந்தோறும் வழங்கப்பட்டன. ஒவ்வொரு தாலூகாவிலும் மாதிரிப்பண்ணை ஒன்று இருக்கப் போகிறது. மாதிரிப்பண்ணை வைத்துக்கொள்ள இசையும் ஒருவருக்கு விலையில் கால்பங்கு தள்ளி உழவுக்கருவிகள், உரங்கள் முதலியன கொடுக்கப்படும். விவசாய இலாகா உத்தியோகஸ்தர்கள் வேண்டும் உதவிகள் புரிந்து உடனுக்குடன் புதுமாதிரியான முறைகளைச் செய்து காண்பிப்பார்கள்.

## நவீன முறைகள்

காலத்திற்கு ஏற்றமுறைகளைக் கைக்கொள்ள வேண்டும் என்ற கொள்கை உழவிற்கு மிகவும் அவசியமாகும்.

விவசாய இலாகா பழங்கால முறைகள் எல்லாவற்றையும் கைவிட்டுவிடச் சொல்லவில்லை. பசுந்தழை உரங்கள் போடுவது பழங்காலத்து முறைதான். கொல்லையில் எரு சேர்ப்பது பழங்கால முறைதான். கொஞ்சம் கொஞ்சமாக நிலைமையைச் சீர்திருத்தினல், அதிகமாகப் பயன் பெறலாம் என்பதையே விவசாய இலாகா சொல்லிக் கொடுக்கிறது.



புதுமுறை இரும்புக் கலப்பைகள் மண்ணை அதிகமாகப் புரட்டுகின்றன. விளைவும் அதிகமாக இருக்கும். நான்கு வருஷங்களில் இந்த மாதிரி 900 விற்கப்பட்டுள்ளன. நாற்றங்கால் விடுத்தலில் நல்லதொரு முறையைச் சொல்லிக் கொடுத்து, 256,950 ஏக்கர்களுக்கு நாற்று விடுத்த வகையில் எட்டு லட்சம் ரூபாய் வரையில் விவசாயிகளுக்குச் செலவு சிக்கனம். கலப்பு எருவின் மேன்மையை எடுத்துக் காட்டியதில், உழவர்களுக்கு இந்த எரு சேர்ப்பதில் மிக்க உற்சாகம் உண்டாயிருக்கிறது. ஒரு டன் எரு தயாரிப்பதற்கு ஒரு ரூபாய் பரிசு தரப்பட்டது. இத்துறையில் 18,500 டன் தயாராகியுள்ளது.

## கால்நடை அபிவிருத்தி

விவசாயத்துக்கு இவை மட்டும் அல்லாமல், கால்நடை அபிவிருத்தியும் மிக முக்கியமானதொரு அம்சமாகும். ராஜ்யம் பூராவிலும் சுமார் 2 கோடி மாடுகளும், 1 கோடி ஆடுகளும் இருப்பதாகக் கணக்கிடப்பட்டுள்ளது.

தஞ்சை ஜில்லாவில் மேய்ச்சல் நிலம் குறைவு; கால்நடை அபிவிருத்தி போதுமானதாயில்லை. எனவே, இத்துறையில் சர்க்காரும், ஜில்லா போர்டாரும் தக்க முயற்சிகள் மேற்கொண்டுள்ளனர். சாலியமங்கலம் பிர்க்காவில் கால்நடை வைத்திய சாலை ஒன்றிருக்கிறது. உம்பளாச்சேரி காளை ஒன்றும், முர்ரா எருமைக் கடா ஒன்றும் அங்கே வைக்கப்பட்டுள்ளன. அடுத்தபடியாக,



உம்பளாச்சேரியிலும் இது போன்ற திட்டமொன்றை ஆரம்பிக்க ஏற்பாடாகியுள்ளது.

தவிர, புதுக்கோட்டையில் விவசாயப் பண்ணையுடன் கால் நடைப் பண்ணை ஒன்றை இணைத்து அபிவிருத்தி செய்வதென தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. அதன் மூலம் தஞ்சை, திருச்சி ஆகிய ஜில்லாக்களுக்கு வேண்டிய சிறந்த ரக கால் நடைகள் கிடைக்க வசதி ஏற்படும்.

## உப்பும் உரிமையும்

உப்பு என்ற வார்த்தையிலேயே மகத்தானதொரு போராட்ட நினைவு எழுகிறதல்லவா? "இயற்கை விளைவான உப்புக்குமா வரி?" என்று அன்னிய அரசாங்கத்தை கேட்டதுடன் நின்று விடாமல், உப்புரிமைக் கோட்பாட்டை, ஒரு போராட்டமாக—மகத்தான தேசிய இயக்கமாக மாற்றிவிட்டார் மஹாத்மா காந்தி.

தண்டி யாத்திரைக்குத் தலைமை தாங்கி காந்தியடிகள் "உப்புரிமைப்" போர் நடத்திய அதேசமயம், இங்கே தெற்கே தஞ்சை ஜில்லாவில்—ராஜாஜி தலைமையில் வேதாரண்யம் உப்புரிமைப் போர் நடை பெற்றதை நம்மால் மறக்க முடியுமா? அந்நியர் ஆட்சியில் இருந்த பல கொடுமைகள் அடியோடு ஒழிந்த மாதிரி உப்பு வரியும் ஒழிந்தது. வேதாரண்யம் உப்புரிமைப் போருக்கு மட்டும் அல்ல, உப்புக்கும் பேர் பெற்றது!

இன்னும் நெய்தவாசல், நாகப்பட்டினம், அதிராம்பட்டினம், தம்பிக்குநல்லவன் கோட்டை, காட்டுமாவடி முதலிய கடற் கரையோர நகர உப்பளங்களும் குறிப்பிடத்தக்கவையாகும். வேதாரண்யத்தின் உப்பள அகலம் சுமார் 5 மைல்கள்; ராஜ்யத்திலேயே இது பெரியது.

## வன வளம்

நாட்டின் விவசாய வளம் அந்த நாட்டு எல்லைக்குள் உள்ள காட்டின் வளத்தைப் பெரிதும் பொறுத்திருக்கிறது.

காடுகளைப் பொறுத்த வரை, இந்த ஜில்லாவில் பெரிய அளவில் குறிப்பிடத்தக்க தெதுவும் இல்லை என்றாலும், குறிப்பிடத் தக்க காடுகள் இரண்டு, மூன்று தாலூகாக் களில் சுமார் 24,000 ஏக்கர்களுக்கே பரவிக்கிடக்கின்றன. முன்பு சோலை நிறைந்திருந்த கிராமங்கள் இன்று பாலை யாக மாறிவிட்டனவே! மழையினால் மண் சத்து கரைந்து போவதைத் தடுப்பன மரஞ் செடி கொடிகளே என்பதை மக்கள் மறந்தனர்.

எனவே அரசாங்கம் மரம் நடுதலின் அவசியத்தை வற் புறுத்தி, தக்க முயற்சி எடுக்கத் தொடங்கியது. ஆண்டு தோறும் வன மகோற்சவம் பயனுள்ள வகையில் கொண் டாடப் படுகிறது. ஆயிரக் கணக்கான மரங்களும் செடி களும் நடப்படுகின்றன.

விவசாயிகளுக்கு இன்னும் பல துறையிலும் நன்மை செய்யும் நோக்கத்தோடு, ஜமீன்தாரி முறை ஒழிப்பு மசோதாவையும், நம் ஜில்லாவில் மிராசு தார்கள் குடியான வர்களிடையே நன் முறையில் உறவு நிலை ஏற்படத் தக்க முறை யில் சீர்திருத்தங்களை யும் சர்க்கார் நிறை வேற்றி யுள்ளனர். அத்துடன் ஜமீன், இனம் கிராமங்களில் நிலவரி குறைக்கப்பட் டிருக்கிறது. இந்த ஜில்லாவில் நிலக் குத்தகைக் குறைப்புச் சட்டத்தின் கீழ் சுமார் 1,200 கிராமங்களும், நிலச் சீர்திருத்தச் சட்டத்தின் கீழ், பட்டுக்கோட்டைத் தாலூகாவில் 135 கிராமங்களும், அறந்தாங்கித் தாலூகாவில் 73 கிராமங்களும் (ஜமீன் ஒழிப்புச் சட்டத்தின் கீழ்) வந்துள்ளன.




தமிழ் நாட்டின் தானியக் களஞ்சியம்
1946
புதிய கால்வாய்—நாசிங்க காவேரி
நிலவளம் பெருக்கும் அணைகள்
காவேரி டெல்டாப் பிரதேசம்
ARABIAN SEA
பொன்னித் திருநாடு பொய்யா வளநாடு
மாடுகட்டிப் போரடித்தால் மாளாதென்று'
ஆடுதுறைப் பண்ணையில் ஆராய்ச்சி



அறியாமை இருளகல இரவுப் பள்ளிகள்



குடிநீர் வசதிகள்



ஹரிஜனங்களுக்கு குடியிருக்க நிலப்பட்டா



மாணவிகளுக்கான விடுதிகள்

# பொது நல வசதிகள்

*மழையையே எதிர்பார்த்து நிற்க வேண்டிய புன்செய் நிலங்களுக்கு, நீர் நிலைகளின் மூலம் பாசன வசதிகளை ஏற்படுத்தினால், நாட்டின் வளம் பன்மடங்கு பெருகுவதோடு, அம் முயற்சியில் ஈடுபடுவோருக்கு அழியாப் புகழும் உண்டாகும்.*

—புறநானூறு
18-ம் பாட்டின் கருத்து

இந்த ஜில்லா வளம் பெருக அன்னை காவேரி மட்டும் அல்ல, மேட்டூர் வாய்க்கால், கொள்ளிடம், வெண்ணாறு, ராஜன் வாய்க்கால், பழவாறு, கீர்த்திமான், வேதாரண்யம் கால்வாய், குடமுருட்டி, வீர சோழன், விக்கிரமன் வாய்க்கால் இப்படியாக இன்னும் பல பேர்களில் ஜில்லா பூராவும் உப நதிகளும், கிளை நதிகளும் இருப்பதால், நீர்ப் பாசன விஷயத்தில் பற்றுக்குறையில்லை.

விவசாயம் வளம் பெருக, நீர்ப்பாசன வசதி நிறையவேண்டும். இந்த விஷயத்தில் இந்த ஜில்லா இயற்கை வசதிகளைப் பெற்றிருப்பது அனைவரும் அறிந்த விஷயமே.

### வடிகால் சீர்திருத்தம்

காவேரிப் பாய்ச்சலில் கடற்கரையை அடுத்த நிலப் பரப்புகள், தாழ்ந்த சமவெளிகள், சாகுபடி நிலங்கள் சற்றேறத்தாழ சமுத்திர மட்டத்திற்குச் சமமட்டமாயிருக் கின்றன. சமமட்டமாய் இருக்கவே, பாய்கால், வடிகால் களில் நீரோட்டம் மட்டுப்படுத்தப்பட்டு மெதுவாகிறது. மெதுவாகிவிட்ட நீரோட்டம் மழைக் காலங்களில் பக்கங் களில் கரை புரண்டு பயிர் நிலங்களைப் பாழ்படுத்தி வந்தது. இதைத் தவிர்க்கச் சற்றேறத்தாழ முப்பது லட்சம் ரூபாய் செலவில் ஒரு திட்டத்தை வகுத்து பாய்கால் வடிகால்களைச் செப்பனிடும் ஏற்பாட்டை அரசாங்கம் ஏற்று முடித் துள்ளது. இந்த நான்கு வருஷங்களில் வடிகால் சீர்திருத் தத்திற்கு, கரைக்கருகாமையில் உள்ள நிலங்களை வாங்கி வசப்படுத்தியது, முதல் வேலை. தேவையான பாய்கால், வடி கால்களைக் குறுகிய இடங்களில் அகலப்படுத்தி, மேடிட்ட இடங்களை ஆழமாக வெட்டி, இரு புறங்களிலும் பலத்த கரைகள் அமைத்தது, இதற்கு அடுத்த வேலை. புது வாய்க்கால்களும் சில இடங்களில் கடலோடு நேரே இணைத்துக் கட்டப்பட்டன. தேவையான இடங்களில் மதகுகளும் பாலங்களும் அமைக்கப்பட்டன. இந்த வேலை களை விரைவில் முடிப்பதற்காக நிலம் வாங்கித் தர ஒரு தனி ரெவினியு பிரிவும் அரசாங்கம் அமைத்துக் கொடுத்து, வேலையை விரைவு படுத்தி முடித்தது.

### வாய்க்கால்களைச் செப்பனிடல்

ரெவினியூ பிரிவில் மொத்தத்திலே 686 ஏக்கர்கள் நில மும் அதிலிருந்த கட்டிடம் முதலியனவும் ரூ. 4,96,666–1–6 செலவில் வாங்கித்தரப்பட்டன. செப்பனிட்ட வாய்க்கால் களின் பெயரும் ஆன செலவும் கீழே குறிப்பிடப்படு கின்றன.—

| | | | ரூ. |
|---|---|---|---|
| அழிஞ்சியாறு ... | ... | ... | 31,511 |
| கழுதை வாய்க்கால், உப்பனாறு | | ... | 66,882 |

| | |
|---|---|
| முடவனாறு, சித்தனைப் பெருமாள் வடிகால் ... ... ... | ரூ. 82,021 |
| பழவாறு, உப்பனாறு வேலைகள் ... | 4,47,358 |
| நாட்டுக்கண்ணி மண்ணியாறு ... | 1,62,235 |
| அய்யாவையனாறு ... ... | 1,05,306 |
| நந்தலாறு ... ... ... | 6,53,911 |
| கனலாறு ... ... ... | 23,084 |
| சக்கிலியன் வாய்க்கால் ... ... | 4,77,904 |
| அடப்பாறு முதலியன ... ... | 5,30,379 |
| வளவனாறு வடிகால் ... ... | 1,19,530 |
| மரக் கோரையாறு வடிகால்கள் ... | 2,20,436 |

இவைகளுடன் நில்லாமல், மேடிட்டுத் தூர்ந்துபோன சிறு வாய்க்கால் பலவற்றைச் செப்பனிடும் பணியில மக்கள் சர்க்கார் கவனங்காட்டினர்; காவேரிப் பிரிவில் உள்ள சுமார் 61 வாய்க்கால்களைச் செப்பனிட ரூபாய் 79,000-மும், வெண்ணாற்றுப் பிரிவில் உள்ள சுமார் 43 வாய்க்கால்களைச் செப்பனிட ரூபாய் 75,000-ம் செலவிட்டுச் சீர்திருத்தம் செய்தனர்.

**பாசன வசதிகள்**

இந்த ஜில்லாவிலே உணவு முனையில் இன்னும் அதிக உற்பத்திக்கான வகையில் நீர்ப்பாசன அபிவிருத்தியை ஒழுங்குபடுத்த, சுமார் 51 திட்டங்கள் வகுக்கப்பெற்றன. இவற்றுக்கு ஆகும் செலவோ ரூபாய் 37 லட்சம் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. தவிரவும், இந்தத்



திட்டங்களுள் ஏற்கனவே 38 திட்டங்கள் மேற்கொள்ளப் பட்டு முடிவடைந்துள்ளன. இவற்றிற்கு இதுவரை ஆன செலவு ரூபாய் 15 லட்சமாகும். இந்தத் திட்டங்கள் நிறைவேறுவதன் மூலம் இப்பொழுது சாகுபடியாவதைக் காட்டிலும் இன்னும் அதிகமாக சுமார் 93,036 ஏக்கர்கள் சாகுபடிக்குள் வரும். இந்தச் சாகுபடி மூலம் சுமார் 41,581 டன் அதிக உணவு உற்பத்தி எதிர்பார்க்கப்படுகிறது.

இவற்றுடன் நதிகள் மூலம் போக்கு வரத்து சவுகரியத்தை ஏற்படுத்துவதற்கும் சர்க்கார் திட்டம் வகுத்துள்ளனர். தற்போது வேதாரண்யம் வாய்க்கால் படகுகள் போக்குவரத்துக் கேற்றதாக சீர்ப்படுத்தப் பெற்றுள்ளது. இதன் மூலம் உணவுப் பொருள் எடுத்துப் போக வசதி ஏற்பட்டுள்ளது.

இந்த ஜில்லாவிலேயே தண்ணீர்ப் பஞ்சத்தில் அடிபட்டுத் தவிக்கும் திருத்துரைப்பூண்டி, அறந்தாங்கி போன்ற பிரதேசங்களுக்குச் சர்க்கார் செய்துள்ள நீர்ப்பாசன சாதனங்கள் குறிப்பிடத்தக்கவை. இப் பகுதிகளில் கிணறுகளைத் தோண்டுவதில் அதிக அக்கரை காட்டப்பெற்றது.

## கிணறுகள் வெட்டும் திட்டம்.

பருவ மழை இல்லாத காலத்தும் பயிர்த்தொழில் வளமாக இருக்கவும், குடிதண்ணீர்ப் பஞ்சம் இல்லாதிருக்கவும் கிணறுகள் வெட்டும் திட்டம் வகுக்கப்பட்டது. கிணறு ஒன்றுக்கு மக்கள் சர்க்கார் ரூபாய் 500 மானியம் வழங்க முன் வந்தது. மானியம் பெறுவோர் கிணற்று நீர் மூலம் குறைந்த பக்ஷம் ஒரு ஏக்கராவது பயிர் செய்யவேண்டும் என்பது நிபந்தனைகளில் ஒன்று.

1946–47-ல் புதிதாக வெட்டப்பெற்ற கிணறுகள் 1257. இதற்காக அளித்த மானியம் ரூ. 76,837–8–0 ஆகும்.

வருஷந் தோறும் புதுப்பிக்கப்பட்ட கிணறுகள் விவரம் :—

1946–47—கிணறுகள் 156 ; செலவு ரூ. 25,080
1947–48— ,, 30 ; ,, 9,200

| | | | |
|---|---|---|---|
| 1948–49—கிணறுகள் | 48 ; | செலவு ரூ. | 23,300 |
| 1949–50— ,, | 101 ; | ,, | 50,000 |
| 1950–51— ,, | 67 ; | ,, | 33,000 |

இந்தப்புள்ளி விவரங்களிலிருந்து மக்கள் சர்க்கார் விவசாயிகளின் நலனில் சிரத்தை காட்டுவது புலப்படும்.

## கொள்ளிடத்திற் கொரு பாலம்

கொள்ளிடத்திற்குக் குறுக்கே சுமார் 70 வருஷங்களுக்கு முன்பு ஒரு பாலம் கட்டப்பெற்றது. 1903-ம் வருஷத்தில் வந்த பெரு வெள்ளத்தால் அப்பாலம் சேத மடைந்து விட்டது. இதனால் தஞ்சைக்கும் தென் ஆற்காட்டுக்கும் இடையில் சாலைத் தொடர்பு கத்தரிக்கப்பட்டு இருந்தது.

கொள்ளிடத்துக்குக் குறுக்கே பாலம் ஒன்று இல்லாக் குறை தீர்க்கப்பட்டு வருகிறது. சிதம்பரத்துக் கருகே கற் பாலம் ஒன்று அமைக்கப்பட்டு வருகிறது. காண்ட்ராக்டர் களின் மேற்பார்வையில் விட்டால் அதிகம் செலவாகிற தென்று தெரியவந்தபடியால், சிரமத்தைப் பாராது, அநா வசியத் தாமதமின்றி சீக்கிரம் முடிக்க சர்க்காரே தம் நேர் பார்வையில் வேலை தொடங்கியுள்ளனர்.

மக்கள் சர்க்கார் புதுப்பாலம் கட்ட ஆரம்பித்து சுமார் பத்து மாதங்களாகிவிட்டன. இப் பாலத்தின் நீளம் சுமார் 1½ மைல். சுமார் 150 அடி நீளமுள்ள 14 கணவாய் களைக் கொண்ட இந்தப் பாலத்துக்கு 22 அடி அகலமுள்ள ரோட்டுப் பாதையும், 5 அடி அகலமுள்ள நடைப் பாதை யும் போடப்படுகிறது. இதற்காகச் செலவாகும் தொகை சுமார் ரூ. 28,50,000 என்றால், மக்கள் சர்க்கார் தற்போ துள்ள நிதிநிலைமையைக்கூடக் கருதாது மக்கள் நலனையே பெரிதாகக் கருதித் துணிந்திருப்பது தெரியவரும். இந்தச் செலவை தஞ்சை, தென் ஆற்காடு ஜில்லா போர்டார்களும் பகிர்ந்து கொள்வார்கள். அவர்கள் முறையே எட்டு லட்ச ரூபாயும், நான்கு லட்ச ரூபாயும் தந்து உதவுகிறார்கள்.

இந்தப் பாலத்தைக் கட்டி முடிக்க மூன்று வருஷங்களா கும் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. கட்டி முடிக்கப்பெற்

றதும் இந்தப் பாலம் தமிழ்நாட்டிலேயே பெரிதாயிருப்பதோடன்றி, சிறந்த போக்குவரத்துச் சாதனமாகவும்இருக்கும்.

ராஜ்யம் பூராவும் இது போன்ற போக்குவரத்து வசதிக்காக சாலைகள் அமைப்புத் திட்டம் வகுத்து, அதற்காக சுமார் 75 கோடி ரூபாய் செலவு செய்யவும் மக்கள் சர்க்கார் தீர்மானித்துள்ளனர். 500-க்கு மேல் ஜனத் தொகையுள்ள கிராமங்கள் அனைத்துக்கும் சாலைகள் அமைய வேண்டுமென்பதே சர்க்காரின் திட்டம். இதற்காக இதுவரை 25 கோடி ரூபாய் செலவாகியிருக்கிறது.



தஞ்சை ஜில்லாவைப் பொறுத்தவரை சாலை இலாகாவை இரு டிவிஷன்களாகப் பிரித்து, கீழ்த் தஞ்சை, மேல் தஞ்சை டிவிஷன்கள் என்று அமைத்துள்ளனர்.

கீழ்த் தஞ்சை டிவிஷனில் சீர்காழி, மாயூரம், நன்னிலம், நாகப்பட்டினம், திருத்துரைப்பூண்டி ஆகிய ஐந்து ரெவினியு தாலுகாக்களும் இணைக்கப்பட்டுள்ளன. ஜில்லா போர்டிலிருந்து சாலை இலாகா மேற்பார்வைக்கு எடுத்துக்கொள்ளப்படும்போது சுமார் 240 மைல் நீளமுள்ள ரோடுகள் கப்பி ரோடுகளாகவும், மற்றவை மண் ரோடுகளாகவும் இருந்தன.

### கிராம ரஸ்தாக்கள்

1948–49-ல் 80 மைல் நீளமுள்ள மண் ரோடுகள் கப்பி ரோடுகளாகவும், 1949–50-ல் 90 மைல் கப்பி ரோடுகளாகவும் மாற்றப்பட்டன.

இந்த ஜில்லாவுக்கு கப்பிகளையும் ஜல்லிகளையும் வெளி ஜில்லாக்களிலிருந்துதான் கொண்டு வர வேண்டும். இவற்றைக் கொண்டு வரும் செலவும் ஏராளம். இந்த இனத்தில் கப்பிக்காக சுமார் ரூ. 2,80,843 செலவும், போக்கு வரத்துக்கான செலவு சுமார் ரூ. 3,47,411-வும் ஜில்லா போர்டுக்காயிற்று.

கீழ்த் தஞ்சை டிவிஷனில் மட்டும் கடந்த 3 ஆண்டுகளில் சுமார் 10 லட்ச ரூபாய்க்கு மேல் ரோடுகளைச் சீரமைப்பதிலும், மண் ரோடுகளைக் கப்பி ரோடுகளாக்குவதிலும் செலவு செய்திருக்கின்றனர்.

கடந்த மூன்று ஆண்டுகளில் சுமார் 77 மைல்களுக்கு மேல் கப்பி ரோடுகளாக மாற்றப்பட்டுள்ளன. திருத்துறைப் பூண்டியிலிருந்து வேதாரண்யத்திற்குச் செல்லும் பாதையில் சுமார் 13 மைல்களுக்கு மேல் 1,73,400 ரூபாய் செலவில் மண் சாலையைக் கப்பி ரோடாக்கி யுள்ளனர்.

மாயூரம் முனிசிபாலிட்டி எல்லைக்குள் சுமார் 2 மைல் நீளத்துக்கு ரூ. 1,31,000 செலவில் 'காங்க்ரீட்' போடப்பட்டிருக்கிறது.

யுத்தப் பிற்காலச் சீரமைப்புத் திட்டத்தின் கீழ் பல புது ரோடுகள் போடப்பட்டுள்ளன.

கிராமாந்தர ரோடுகள் பல; அதாவது (1) ஆக்கூரிலிருந்து மருதம்பள்ளத்திற்கு; (2) கொண்டத்தூரிலிருந்து பாகசாலைக்கு; (3) கொக்கூரிலிருந்து தரங்கம்பாடி-கும்பகோணம் சாலை சந்திப்புக்கு. இன்னும் இந்த டிவிஷனில் உள்ள கிராமாந்தரங்களுக்குத் தொடர்பாகப் புது ரோடுகள் போடப்படுகின்றன.

கிராமச் சாலைகள் அமைப்பு நிதியிலிருந்து சுமார் 33,000 ரூபாய் செலவில் கூத்தூர் ஸ்டேஷனிலிருந்து ஆத்தூருக்கு; உபய வேதாந்தபுரத்திலிருந்து பொறக்குடிக்கு; அலிவலம் ஹரிஜனத் தெருவிலிருந்து மயானக் கரைக்கு; போலகம் கிராம ஹரிஜனத் தெருவிலிருந்து அண்ணமண்டபப் பூந்தோட்டச் சாலையை இணைக்கும் ரஸ்தாவும் அமைக்கப்பட்டுள்ளன.

இவை தவிர வருஷா வருஷம் சிறு சிறு பாலங்கள் அமைக்கவும், சாலைகளிலும், வாய்க்கால்களிலும் மதகுகள் கட்டவும், இவை போன்ற இதர பல வேலைகளுக்குச் சுமார் 1,24,000 ரூபாய் செலவு செய்யப்பெறுகிறது.

## முக்கிய இடங்களுக்கெல்லாம் இணைப்பு

யுத்த பிற்காலச் சீரமைப்புத் திட்டப்படி இந்த ஜில்லாவில் முக்கியமான பல ஊர்களையும் இணைத்து ரஸ்தாக்களும் பாலங்களும் அமைக்கப்பெற்றன. அவற்றில் பாலங்கள் விவரம் :—

கதிராமங்கலம் சமீபத்தில் காவேரி ஆற்றின் குறுக்கே சுமார் 37,000 ரூபாய் செலவில் ஒரு பாலம் ;

கஞ்சனம்-மஞ்சவாடி ரோட்டில் புலவனாற்றின் குறுக்கே ரூ. 23,000 செலவில் ஒரு பாலம் ;

கோனேரிராஜபுரம் கிராம ரஸ்தாவில் நாட்டாற்றின் குறுக்கே ரூ. 19,000 செலவில் ஒரு பாலம் ;

மேற்படி கிராமத்திலேயே கீர்த்திமானாற்றில் சுமார் 13,300 ரூபாய் செலவில் ஒரு பாலம் ;

இவைகள் அனைத்தும் துரிதமாகக் கட்டப்பெற்று முடிவடையும் தருவாயிலிருக்கின்றன.

முத்துப்பேட்டைப் பஞ்சாயத்து எல்லையில் ஜாம்பவான் ஓடையில் ஒரு பாலம் கட்ட ரூ 88,000-க்கு திட்டம் போட்டு அனுமதிக்கப்பட்டு விட்டது. உடனடியாக வேலை தொடங்கும்.

அச்சுதமங்கலம்-மணக்கால் ரோட்டில் பாலம், மதகுகள் அமைக்க ரூ. 82,000 ; கல்யாண சோழபுரத்துக்கு அருகாமையில் பழவாற்றிற்கு ஒரு பாலம் அமைக்க ரூ. 89,000 ; மாங்குடி-பெரியதம்பூர் ரோட்டில் பாலங்கட்ட ரூ. 22,000 ஒதுக்கப்பட்டிருக்கின்றன.

பள்ளிக்கூடங்களுக்கு இடவசதி செய்யும் பொருட்டும், பழையவற்றைப் பழுது பார்க்கும் பொருட்டும், மராமத்து செய்வதற்கும் வருஷ மொன்றுக்குச் சராசரி சுமார் 1,00,000 ரூபாய் செலவிடப்படுகின்றன.

### மேல் தஞ்சைப் பகுதியில்

மேல் தஞ்சை டிவிஷனில் இணைக்கப்பட்டுள்ள ரெவினியு தாலூகாக்கள் பின்வருவனவாகும்: மன்னார் குடி, பட்டுக்கோட்டை, அறந்தாங்கி, பாபநாசம், கும்ப கோணம். தஞ்சை ஜில்லா போர்ட்டிடமிருந்து சாலை இலாகாவின் மேற்பார்வைக்கு வந்த சமயம், ஜில்லா போர் டுக்குச் சொந்தமாக இருந்த 792 மைல் நீளமுள்ள சாலைகளுக்கு 1946–47-ல் பராமரிப்பு செலவு ரூ. 5,30,662.

இந்த டிவிஷனில் குடி தண்ணீர் வசதிக்காக பம்பு கள் அமைக்கப்பட்டுள்ளன. ஜில்லா போர்டு தொழிற் கல்விச் சாலையொன்றின் $1\frac{1}{4}$ லட்ச ரூபாய் பெறுமான முள்ள கட்டிடங்களை சாலை இலாகாவே பராமரித்து வருகிறது.

1947–48-ல் சாலை இலாகாவின் மேற்பார்வையிலுள்ள ஜில்லா போர்டு சாலைகளுடைய பராமரிப்புச் செலவு ரூ. 86,29,741. கிராமச் சாலைகள் அபிவிருத்திக்குச் செலவானது ரூ. 30,311. இவை தவிர 39 மைல்கள் 2 பர்லாங் மண் ரோடைக் கப்பிச் சாலையாக்க, சிறு பாலங் கள் அமைக்க, ஆன செலவு ரூ. 1,03,870.

1948–49-ல் ரோடுகள் பராமரிப்புக்காக ஜில்லா போர்டு நிதியிலிருந்து ரூ. 8,09,148 செலவாயிற்று. 1949–50-ல் ரோடுகள் பராமரிப்புச் செலவு ரூ. 5,06,186 ஆயிற்று.

அடுத்த படியாக ஜில்லா சாலைகள், கட்டிடங்கள், மதகு, பாலங்கள் பராமரிப்பு வருஷவாரியாக:

| | | |
|---|---|---|
| 1946–47 | ... | ரூ. 4,31,990 |
| 1947–48 | ... | ரூ. 2,16,859 |
| 1948–49 | ... | ரூ. 13,57,225 |
| 1949–50 | ... | ரூ. 1,15,869 |

1948–49-ல் காவேரி, குடமுருட்டி ரெகுலேட்டர் தளங் கள் 'காங்க்ரிட்டில்' அமைத்துத் திருத்தப்பட்டுள்ளன. சர்க்கார் போக்கு வரத்துச் சாதனங்களைச் செப்பனிடும் அதே சமயத்தில், ஜில்லா போர்டுகளும் சர்க்காருடன் இணைந்து உழைப்பது குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

## கடல் வழித்துறைகள்

சோழவள நாட்டின் மகோன்னத நிலையும் சிறப்பும் உலகெங்கும் ஒரு காலத்தில் பரவியிருந்ததற்கு முக்கிய காரணங்களாயிருந்தவை காவிரிப்பூம்பட்டினம், நாகப்பட்டினம் போன்ற துறைமுகங்களாகும்.

ஆயினும் இன்று பூம்புகார் எனப்படும் காவிரிப்பூம்பட்டினம் பொலிவிழந்து கிடக்கிறது. காலப்போக்கு இந்தத் துறை முகத்தைத் தூர்த்து விட்டாலும், நாகப்பட்டினம் இன்றளவும் வெளிநாடுகளுடன் வியாபாரத் தொடர்புக் கேற்ற சிறந்த துறைமுகமாகவே இருக்கிறது.

## மின்சார வசதிகள்

சாலைகளும், பாலங்களும் கிராமாந்திரங்களுக்கும் நகரங்களுக்கும் எவ்வளவு அவசியமோ, அம்மாதிரி மின்சார வசதியும் இன்றியமையாததாகும். இத்துறையில் ராஜ்யம் முழுவதுக்கும் பொதுவாகவும், இந்த ஜில்லாவில் சர்க்கார் சில திட்டங்களையும் நிறைவேற்றுவதில் தீவிரமாயுள்ளனர்.

சென்னை மின்சார சப்ளைக் கார்ப்பொரேஷனைத் தங்கள் நேர்பார்வையிலேயே நம் சர்க்கார் மேற்கொண்



டுள்ளது இங்கு குறிப்பிடத்தக்கதாகும். தவிர கடந்த நான்கு ஆண்டுகளில் சுமார் 80 நகரங்களுக்கு மேலும், 1,600 கிராமங்களுக்கும் மின்சார வசதி செய்து தரப்பட்டிருக்கிறது. இந்த மின்சார அபிவிருத்திக்கென இதுவரை 15 கோடி ரூபாய்க்கு மேல் சர்க்கார் செலவு செய்துள்ளனர். நீர்ப்பாசனத்துக்கான

பம்புசெட்டுகள் சுமார் 13,000-க்கும் 1,500 கிராமங்களில் கைத்தொழில் அபிவிருத்திக்கும் மின்சாரசக்தி அளிக்கப்பட்டிருக்கிறது. சென்னை ராஜ்யத்தில் நான்கு பெரிய மின்சார உற்பத்தி நிலையங்கள் உள்ளன. அதாவது பைகாரா நிலையம், மேட்டூர் நிலையம், பாபநாசம் நிலையம், மதராஸ் நிலையம் ஆகிய நான்கும் பிரதானமானவை. இன்னும் சில இடங்களில் சிறிது சிறிதாகவுள்ள நீராவி மூலம் மின்சார உற்பத்தியாகும் (தர்மல்) நிலையங்களும் குறிப்பிடத்தக்கவையாகும். கடந்த ஆண்டில் சுமார் 630 மிலியன் யூனிட் மின்சார உற்பத்தி பயன்படுத்தப் பட்டது. இவற்றில் 70 சத விகிதம் தொழிற் சாலைகளுக்கும், 11 சத விகிதம் நீர்ப்பாசனத்துக்கும், 11 சத விகிதம் சிறு சிறு காரியங்களுக்கும் மற்றவை தெருவிளக்கு போன்றவைகளுக்கும் உபயோகிக்கப்பட்டது.

தஞ்சை ஜில்லாவில் உள்ள பிரதான நகரங்களுக்கு மட்டுமன்றி சுமார் 250 கிராமங்களுக்கும் மின்சார வசதி அளிக்கப்பெற்றிருக்கிறது. கிராமங்களில் நல்ல போக்குவரத்து மட்டும் இல்லை, தேவையான வெளிச்சமும் இருந்தால் தான் பயன்! இந்த ஜில்லாவில் விவசாயம், கைத்தொழில் இரண்டும் இன்னும் அபிவிருத்தியடைய ஆஸ்பத்திரிகள், கல்வி நிலையங்கள் அனைத்தும் மின்சார வசதி பெற சர்க்கார் ஏற்பாடுகள் செய்துள்ளனர்.

தேசிய மயமாக்கும் திட்டம் நிறைவேற, சுமார் 3 கோடி ரூபாய் (நஷ்டஈடு போன்றவகைகளில்) செலவாகும் என்றாலும் எல்லாக் கிராமங்களும் சகல வசதிகளும் பெற்றிருக்கவேண்டும் என்ற நோக்கத்துடன் சர்க்கார் தீவிரமாக இத்திட்டத்தை நிறைவேற்றி வருகின்றனர்.

# கல்வி மறுமலர்ச்சி

*இந்த அரசியல் அமைப்புச் சட்டம் அமுல் நடக்கத் தொடங்கிய பத்து வருஷ காலத்திற்குள், எல்லாக் குழந்தைகளுக்கும் பதினன்கு வயது முடியும் வரையில் இலவசக் கட்டாயக் கல்வி போதிக்க அரசாங்கம் முயலும்.*

—இந்திய அரசியல் அமைப்பு
ஷரத்து—45

உடலுக்கு வலுவளிக்க உணவுப்பொருள் தேவை. மிதமான ஆனால் மிக ருசிகரமான உணவு பதார்த்தங்களைத் தயாரித்து உட்கொள்ளுவதில் தஞ்சை ஜில்லாக்காரர்கள் அதிர்ஷ்டசாலிகள்!

நளபாகம் செய்ய அனுபவம் தேவை. அனுபவத்துக்கு நிறைய அறிவும் தேவை.

விவசாயத்துக்கு நீர்வளம் போலும், உடலுக்கு வலுவூட்ட உணவைப்போலும் அனுபவத்துக்கு வளமூட்ட அறிவு பெருகவேண்டும். இத் துறையிலும் இந்த ஜில்லாவில் பஞ்சமில்லை. 'அறிவுக்கும் புத்தி நுட்பத்துக்கும் தஞ்சை ஜில்லா இந்த ராஜ்யத்திலேயே பிரசித்தமானது,

என்று அன்னிய சர்க்காரின் காலத்தில் எழுதப்பட்ட 'கெஸட்டியரே' கூறுகிறது.

பல நூற்றுண்டுகளுக்கு முன்னர் இந்தப் பிராந்தியத்தில் எத்தனையோ அறிஞர்கள், புலவர்கள், கவிஞர்கள், கலைஞர்கள் வாழ்ந்தார்கள். தவிரவும் இன்னும் பலர் காவியங்களை, கலைநூல்களை வரைந்து அறிவுப் பொக்கிஷத்தை நிரப்பினுர்கள். சங்கீதத்தின் உறைவிடம் தஞ்சை ஜில்லா. திருவையாற்றில் வாழ்ந்து மறைந்த மஹான் தியாகையரின் சேவையை நினைப்பூட்டுந் தோரணையில் இன்றும் திருவையாற்றில் திருவிழா நடத்தத் தஞ்சை மக்கள் மறக்கவில்லை.

## இதோ ஒரு கலைக்கோயில் !

அந்த அறிவுப் பொக்கிஷமே இன்றளவும் நன்முறையில் ஆதரித்துப் பாதுகாக்கப் பெற்றுவரும், 'சரஸ்வதி மஹால்.'

வைத்திய சாஸ்திரமா? வேதாந்த சாரமா? கணித ஆராய்ச்சியா? கால்நடைப் போஷணையா? வியாபாரமா? பொருளாதாரமா? அரசியலா? நெறிநூலா? எது தேவை? அத்தனையும் கிடைக்கும் சரஸ்வதி மஹாலில். அங்கு அறிவுப் பொக்கிஷத்தைப் பொறுத்தவரை 'இல்லை' என்ற சொல்லே இல்லை!

இந்த நூல் நிலையம் தஞ்சை நகரில் அமைந்து எத்தனையோ நூற்றுண்டுகளாய்விட்டன. ஆயினும் இடைக் காலத்தில் இந்தப் பொக்கிஷத்தைச் சரிவர போஷிப்பார் இன்றி நிலைகுலையவிருந்த சமயத்தில், நமது சர்க்கார் தமது நேர் பொறுப்பிலே இதனைப் பரிபாலிப்பதென்று முடிவு செய்தது பெருமைப்படத்தக்கது. தஞ்சை இவ் விஷயத்திலும் அதிர்ஷ்டம் உள்ளதுதான். மக்கள் சர்க்கார் பதவியேற்றதிலிருந்து மாகாணம் பூராவும் வறுமையை எதிர்த்து துணிச்சலுடன் போராடக் கருதியதுபோல, அறியாமையையும் எதிர்த்துப் போராட முன் வந்ததில் அதிசயமில்லை.

## கல்வியில் புரட்சி

மனிதத் தன்மைக்குரிய உயர்ந்த குணாதிசயங்களையும், பரஸ்பர நல்லுறவையும், விசால திருஷ்டியில் வளரவேண்டிய சிறந்த அறிவையும் அளித்தது புராதனக் கல்வி முறை. அன்னிய ஆட்சி வந்த காலத்திலிருந்து அந்த இலட்சியம் மறைந்துபோய், பதவிக்காக விண்ணப்பம் போடும் கல்வி வந்தது. இதன் மூலம் அன்னிய அரசாங்கம் இங்கு நம் உதவிகொண்டே நிலைத்து நிற்கவேண்டிய அவசியம் நேரிட்டுவிட்டது. சுதந்திர உணர்ச்சி, இந்தத் துரதிருஷ்ட நிலையை நீக்கிவிடத் தூண்டி, வெற்றியும் பெற்றது.

எனவே கல்வித் துறையில் அடிப்படை மாறுதல்களை மேற்கொண்டால்தான் விமோசனம் என்ற நிலையை அறிந்து, தாய்மொழி மூலம் எல்லாப் பாடங்களையும் கற்பிக்கும் முறையைக் கட்டாயமாகச் செய்தனர். ஆரம்பக் கல்வி, உயர்தரக் கல்வி, பல்கலைக் கல்வி, தொழில் நுணுக்கக் கல்வி ஆகிய ஒவ்வொரு துறையிலும் சர்க்கார் தீர்க்கமான சீர்திருத்தங்களை மேற்கொண்டனர்.

## ஆதாரக் கல்விக்கு அவசியம்

ஆதாரக் கல்வி தலையெடுத்தது. மக்கள் சர்க்கார் பதவி யேற்றபோது ராஜ்யத்தில் ஆதாரக் கல்விப் பாடசாலைகளோ அல்லது பயிற்சி நிலையங்களோ ஒரு சிலகூட இல்லையெனலாம்.

ஆனால் தற்போது சுமார் 350 ஆதாரக்கல்வி ஆரம்பப் பாடசாலைகள் நம் ராஜ்யத்தில் உள்ளன. ஆதாரக் கல்விப் பயிற்சிப் பள்ளிக்கூடங்கள் 48 இருக்கின்றன. இவற்றில் பயிற்சிபெறும் ஆசிரிய மாணவர்கள் சுமார் 4,240 பேர். தஞ்சை ஜில்லாவில் தற்போதுள்ள ஆதாரப் பள்ளிகள் 14 ஆகும்.

இன்னும் வருகிற வருஷத்தில் இதர பயிற்சிப் பள்ளிகள் அனைத்தும் ஆதாரக்கல்வி முறையை மேற்கொண்டவைகளாக மாறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரம் ஆதாரக் கல்வி முறையை அனுஷ்டானத்துக்குக்கொண்டு வரவேண்டுமென்பதே மக்கள் சர்க்காரின் நோக்கம். ஏனெனில் இந்தக் கல்விமுறை இளம் பிராயத்தில் மட்டும் அல்ல; வாழ்க்கையின் ஒவ்வொரு கட்டத்திலும் பயன் அடைவதற்கான வழிமுறைகளை வகுக்கும் கல்வியாகும்.

ராஜ்யம் பூராவிலும் உள்ள ஆரம்பப் பள்ளிக்கூடங்கள் சுமார் 39,000 என்று கணக்கிடப்பட்டுள்ளது.

தஞ்சை ஜில்லாவில் முன்பு 1,120 ஆரம்பப் பள்ளிக்கூடங்கள் இருந்தன. தற்போதோ 1,850 ஆகப் பெருகியிருக்கிறது. சுமார் 202,000 பேர் தற்போது படித்து வருகின்றனர். 79 கிராமங்களில் கட்டாயக் கல்வி முறை அனுஷ்டானத்தில் இருக்கிறது. ஜில்லா போர்டு இதர தனிப்பட்ட மானேஜ்மென்டு பள்ளிகளும் இவ் விவரத்தில் அடங்கியுள்ளன.

கடந்த 5 ஆண்டுகளில் நடுத்தரக் கல்வித் துறையில் இந்த ராஜ்யத்தில் இரண்டு மடங்கு முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறதென்றால் அது மிகைப்படுத்திக் கூறுவதல்ல.

1945-ல் இந்த ராஜ்யத்தில் நடுத்தரப் கல்விப் பிரிவில் பையன்களுக்கு 599 பாடசாலைகளும், பெண்களுக்கு 146 பாடசாலைகளும் இருந்தன. இப்பொழுது அவைகள் இரு மடங்காகப் பெருகியுள்ளன. தற்போது பையன்களுக்கு 1,130 பள்ளிகளும், பெண்களுக்கு 224 பள்ளிகளும் ஆக மொத்தம் 1,354 பள்ளிக்கூடங்கள் உள்ளன.

## நடுத்தரப் பள்ளிகள்.

நடுத்தரக்கல்விப் பிரிவில் முன்பு ஜில்லா போர்டு பள்ளிகள் 11 தான் இருந்தன. தற்போதோ 24 உள்ளன.

தஞ்சாவூரில் உள்ள ஜில்லா போர்டு கைத்தொழிற் பள்ளி, செயின்ட் பிரான்ஸிஸ் ஜேவியர்ஸ் கைத்தொழிற்பள்ளி, கும்பகோணத்திலுள்ள செயின்ட் மேரிஸ் கைத்தொழிற் பள்ளி, முனிசிபல் கைத்தொழிற் பள்ளி, செயின்ட் சிஸிலிக் கைத்தொழிற் பள்ளி ஆகியவற்றில்

தொழிற்கல்விப் பயிற்சி தரப்படுகிறது. இவைகள் சர்க்கார் நிதி உதவிபெற்று நடைபெறுகின்றன. இவற்றிற்கு இதுவரை ரூ. 50 ஆயிரம் வரை மானியம் அளிக்கப் பட்டிருக்கிறது. ஒவ்வொரு ஜில்லாவுக்கும் ஒவ்வொரு கல்லூரியாவது அவசியம் இருக்க வேண்டும் என்பது மக்கள் சர்க்காருடைய நோக்கமாகும்.



தஞ்சை ஜில்லாவில் கும்பகோணத்தில் சர்க்கார் கல்லூரி திருவையாற்றில் ஒரு கல்லூரியும் நன்முறையில் நடைபெற்று வருகிறது. ராஜ்யத்தில் தற்போது சர்க்காரின் நேர்பார்வையிலும் மானிய உதவியுடனும் நடந்துவரும் கல்லூரிகளின் தொகை 98 ஆகும்.

## தற்குறி இனி தலையெடுக்காது

நமது சர்க்கார் மிகவும் சிரத்தையுடன் மேற்கொண்டுள்ள இன்னொரு விஷயம் முதியோர் கல்வியாகும். இதுவரை தனிப்பட்ட சிலரே இவ்வேலையை மேற்கொண்டிருந்தனர். தற்குறிப் பேர்வழிகள் இரண்டுங்கெட்ட நிலையில் சமுதாயத்தை முன்னேற விடாத இடையூறுகளாவர்.

இந்திய சர்க்கார் இதே விஷயத்தில் நம் சர்க்காரைப் போன்று அக்கரையெடுத்து, வயது வந்தோரிடையே கல்வி பரப்புதலுக்காக 1949-ல் சுமார் $1\frac{1}{2}$ லட்சம் ரூபாய்க்கு மேல் மானியம் அளித்தனர். அடுத்தபடியாக மத்திய சர்க்காரும் மாகாண சர்க்காருமாகச் சேர்ந்து சுமார் 14 லட்சம் ரூபாய் செலவு செய்யத் தீர்மானித்துள்ளனர்.

தற்சமயம் ராஜ்யம் பூராவும் சுமார் 1,166 முதியோர் கல்விப் பள்ளிக்கூடங்கள் இருக்கின்றன. இவைகளில் 24,000 பேர்கள் கல்வி கற்கின்றனர். கிராமக் கல்லூரிகள் 10 இருக்கின்றன. இவற்றில் 3 மாதர்களுக்கானவை. இவற்றில் மொத்தம் 286 பேர்கள் படிக்கின்றனர். இதில் 229 பேர் ஆண்கள், 57 பேர் பெண்களாவர். தஞ்சை ஜில்லாவில் உள்ள முதியோர் கல்விப் பள்ளிகள் 41 ஆகும்.

இளைஞர்களுக்கு ராணுவப் பயிற்சியளிக்கும் தேசீய மாணவர் படை (National cadet corps) அமைப்பை மக்கள் சர்க்கார் திறமான முறையில் மேற்கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கதாகும். 1,959 கல்லூரி மாணவர்கள் அடங்கிய சீனியர் டிவிஷன் ஒன்றும், 4,050 பள்ளி மாணவர்கள் கொண்ட ஜூனியர் டிவிஷன் ஒன்றும் இருக்கிறது. தற்பொழுது 16 கல்லூரிகளிலும், 64 உயர்தரப் பள்ளிகளிலும் தேசீய மாணவர் படை யூனிட்டுகள் இருக்கின்றன.

## அறிவியக்கம் ஆக்கம் பெறுகிறது

முதியோர் கல்வி நிலையங்களில் பயிலும் மாணவர்களுக்கு மட்டுமின்றி, இதர எழுதப்படிக்கத் தெரிந்தோர் அனைவருக்கும் பயன்படும் வகையில் ராஜ்யத்தில் சுமார் 1,580 வாசகசாலைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

இந்த ஜில்லாவின் பாரம்பரியத் தொழிலான வேளாண்மைத் தொழிலை, படிக்கும்போதே மாணவர்களும் தெரிந்துகொண்டால் அவர்கள் படிப்பு வெறும் ஏட்டுச் சுரைக்காயாக இருக்காதல்லவா ?

இதை நன்குணர்ந்த நம் சர்க்கார் ஒரத்தநாடு, திருக்காட்டுப்பள்ளி நடுத்தரப்பள்ளிகளில் விவசாயத் தொழிற் பயிற்சியும், கும்பகோணம் நகரப்பள்ளியில் எஞ்சினியரிங் பயிற்சியும், கும்பகோணம் செயின்ட் ஜோஸப் ஹைஸ்கூலில் சித்திர, ஓவியப் பயிற்சியும், மன்னார்குடி நேஷனல் ஹைஸ்கூல், பொறையார் நாடார் ஹைஸ்கூல் ஆகியவற்றில் உபாத்திமைப் பயிற்சியும் அளிக்கப்படுகிறது. இவற்றுடன் உத்தியோகப் பதவிகளுக்கும் சிலர்

தேவைப் படுமே! அதற்காக மன்னார்குடி பிண்ட்லே ஹைஸ்கூலில் குமாஸ்தாத் தொழிலுக்கான பயிற்சி அளிக்கப்படுகிறது.

சென்னை சர்க்கார் நான்கு எஞ்சினியரிங் காலேஜ்களை யும், அண்ணாமலை சர்வ கலாசாலை ஒரு எஞ்சினியரிங் காலேஜையும் நடத்தி வருகிறது.

தென்னாட்டிலேயே மிகப் பெரிய சர்வ கலாசாலையான சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழகம் நம் ஜில்லாவின் பக்கத்திலிருப்பதுடன், தென்னாட்டின் ஒரே ஒரு (ரெசி டென்ஷியல்) தங்கிப் படிக்கும் வசதியுள்ள பல்கலைக் கழகமாயிருப்பது நம்முடைய அதிர்ஷ்டமாகும்.

## ஆஸ்தானப் புலவர்கள்

பண்டைக்காலத் தமிழ் மன்னர்கள் மொழி வளர்ச் சிக்கு ஆக்கமளிக்க ஆஸ்தான புலவர்களை நியமித்த மாதிரி நமது சர்க்காரும் இன்று தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், சம்ஸ்கிருதம் ஆகிய ராஜ்யமொழிகளில் ஆஸ்தானப் புலவர்களை நியமித்திருப்பது மகிழ்ச்சியுடன் குறிப்பிடத்தக்கதாகும்.

## கலைக்களஞ்சியம்

சமுதாய முன்னேற்றத்துக்கு மொழிவளர்ச்சி இன் றியமையாதது. தாய்மொழியில் சகலநுண் கலைச்சொற் களும் பதங்களும் வரவேண்டும். பிறகுதான் மொழி ஆக் கம் பெறும். இந்த நோக்கத்தில்தான் சர்க்கார் ஆதரவுடன் **கலைக்களஞ்சியம்** ஆரம்பிக்கப்பெற்று இன்று பெருமைப் படத்தக்கமுறையில் பணியாற்றி வருகிறது. தவிரவும் இலக்கியம், நவீனம், விஞ்ஞானம், மருத்துவம், பொரு ளாதாரம் போன்ற பல்வேறு துறைகளையும் வளப்படுத் தும் முறையில் வெளிவரும் சிறந்த நூல்களுக்குப் பரிசும் அளிக்கப்படுகின்றன. இவற்றிலிருந்து நாட்டு நல வளர்ச் சிக்கு மட்டும் அல்ல, கலை வளர்ச்சிக்கும் மக்கள் சர்க்கார் ஆற்றும்பணி தெளிவாகப் புலப்படும்.

# பொது சுகாதாரம்

*மக்களின் போஷாக்கு, வாழ்க்கைத்தரம் முதலியவற்றை உயர்த்தி, பொதுஜன சுகாதாரத்தை அபிவிருத்தி செய்வதை, அரசாங்கம் தனது முதன்மையான கடமைகளுள் ஒன்ருகக் கருதும்.*

—இந்திய அரசியல் அமைப்பு ஷரத்து—47

உண்ண உணவு, உடுக்க உடை, இருக்க இடம் ஆகியவை மானிட வாழ்க்கையின் பிரதான சாதனங்கள்தான் என்ருலும், இவற்றிற்கெல்லாம் ஜீவாதாரமாயிருப்பது சுகாதாரமேயாகும்.

இந்த அனுபவரீதியான உண்மையை யறிந்த மக்கள் சர்க்கார், நோய் வரும் முன் தடுக்கவும், மீறி வந்தால் அதைத் தீர்க்கவும் செய்ய வேண்டிய பணிகள் அத்தனையையும் அதி தீவிரமாக மேற் கொண்டிருக்கின்றனர். இது விஷயமாக, மக்கள் விரும்பக்கூடியதும் சாத்தியமானதுமான எந்த வைத்திய முறையையும் அனுஷ்டிக்க, சர்க்கார் தயங்காதென்று சென்னை ராஜ்ய சுகாதார இலாகா மந்திரி தெரிவித்துள்ளார்.

இந்த ஜில்லாவில் முன்பு சுகாதாரம் சம்பந்தமாக செலவு சுமார் $3\frac{3}{4}$ லட்சமாயிருந்தது; தற்போதோ இந்தச் செலவு 10 லட்சமாக உயர்ந்திருக்கிறது. மாகாணத்தில் 1946-ல் மருந்துகளுக்காக ஆன செலவு சுமார் $1\frac{3}{4}$ கோடி ஆகும். 1949-ல் $2\frac{1}{4}$ கோடிக்கு மேல், 1950-ல் $2\frac{1}{2}$ கோடிக்கு மேல் உயர்ந்து விட்டது. மதனபள்ளி, ராஜமந்திரி, திருச்சி, பெருந்துறை ஆகிய இடங்களில் உள்ள க்ஷயரோக நிலையங்களுக்கு சிகிச்சை கொடுக்கப்படும் மானியங்களும் இரட்டித்து விட்டன.

மாகாணம் எங்கும் ரத்த பாங்கிகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளன; ரத்த சேகரமும் திருந்திய முறையில் நடத்தப் பெறுகிறது. புற்று நோய் சிகிச்சைக்கான ஆஸ்பத்திரி யொன்றும் சென்னையில் ஆரம்பிக்கப் பட்டுள்ளது.

**சம்பள உயர்வு**

டாக்டர்கள், நர்ஸ்கள், மருத்துவச்சிகள், ஸிஸ்டர்கள், கம்பவுண்டர்கள் முதலியவர்களின் சம்பள விகிதங்களும் திருத்தியமைக்கப்பட்டன. அதற்கான செலவும் அதிக மேயாகும். கடந்த நாலைந்து ஆண்டுகளில் நிதி நிலைமை இடங் கொடுக்காம லிருந்தாலும், புதிதாகப் பல வைத்திய சாலைகள் ஆரம்பிக்கப்பட்டு, சுகாதாரத் திட்டங்கள் மேற் கொள்ளப்பட்டுள்ளன.

முன்னெல்லாம் மேல் நாட்டு வைத்திய முறைப்படி பயிற்சி பெற்றோர்கள்தான் நியமனம் பெற்றனர். இப் போது இந்திய வைத்திய முறைப் பயிற்சி பெற்றோருக்கும் இதே அளவு மதிப்பும் நியமனமும் உண்டு; நாட்டு வைத் திய முறையில் சர்க்கார் நிரம்பவும் அக்கரை காட்டு கின்றனர்.

1947-ம் வருஷம் ராஜ்யத்தில் பிரசவ விடுதிகள் 318 இருந்தன. தற்போது 461-க்கு மேல் உள்ளன, ராஜ்யத்தில்.

மலேரியாத்தடுப்பு சம்பந்தமான செலவு 1946-ல் சுமார் 9 லக்ஷம் வரை; தற்போதோ 13 லக்ஷத்துக்கு மேல் ஆகிறது. இந்தியமுறை வைத்தியத் துறையில் உள்ள கிராம வைத்திய

சாலைகள் 624 லிருந்து 712 ஆக உயர்ந்துள்ளன. இவற்றிற்காகும் செலவும் முன்னைவிடப் பல மடங்கு அதிகமாகும்.

## புதிய ஆஸ்பத்திரிகள்

தஞ்சை ஜில்லாவைப் பொறுத்த வரையில், கீழ்க்கண்ட பல கிராமங்களில் புதிய ஆஸ்பத்திரிகள் திறக்கப்பட்டுள்ளன.

ஆலத்தம்பாடி
இடும்பாவனம்
கோடிக்கரை
ஜாம்பவான் ஓடை

இந்த நான்கு கிராமங்களும் திருத்துரைப்பூண்டி தாலுகாவிலுள்ளவை.

ஆயன்குடி.
சுப்பிரமணியபுரம்.

இவை அறந்தாங்கி தாலூகாவில் உள்ளன.

கொத்தமங்கலம்.
ஆண்டிக்காடு.
நம்பிவயல்.

இவை பட்டுக்கோட்டை தாலூகாவில் உள்ளன.

கணபதி அக்ரஹாரம்—பாபநாசம் தாலூகா.
கணபதிபுரம்—நன்னிலம் தாலூகா.

ஆக மொத்தம் இந்த ஜில்லாவில் 11 கிராம ஆஸ்பத்திரிகள் ஆரம்பிக்கப்பெற்றுள்ளன.

பழைய வைத்திய சாலைகள் பல திருத்தி அமைக்கப்பெற்றுள்ளன.

சங்கரம்பந்தல்—மாயூரம் தாலூகா.
கிளியனூர்— ,, ,,
பண்டாரவாடை—பாபநாசம் தாலூகா.
மேலக் காவேரி—கும்பகோணம்.
பூக்காரத் தெரு வைத்திய சாலை—தஞ்சை.

இந்த ஐந்து வைத்திய சாலைகள் திருத்தியமைக்கப்பட்ட இனத்தைச் சேர்ந்தவையாகும்.

## விஸ்தரிக்கப்பட்ட வைத்தியசாலைகள்

அதே சமயத்தில் கிராம வைத்திய சாலைகள் பல விஸ்தரிக்கப்பட்டு நூதன வைத்திய சாலைகளாக மாற்றப்பட்டுள்ளன.

ஆடுதுறை—கும்பகோணம் தாலுகா.
அம்மையப்பன்—நன்னிலம் தாலுகா.
மணமேடு—மாயூரம் தாலுகா.
வலிவலம்—நாகப்பட்டினம் தாலுகா.
தம்பிக்கோட்டை—பட்டுக்கோட்டை தாலுகா.
வடசேரி—மன்னார்குடி தாலுகா.

நகரங்களில் உள்ள ஆஸ்பத்திரிகளிலும் வசதிகளை அதிகமாக்கி யுள்ளனர்.

பட்டுக்கோட்டை தாலுகாவிலுள்ள மதுக்கூர் வைத்திய சாலையை விஸ்தரித்து ஆங்கிலமுறை ஆஸ்பத்திரியாக மாற்றப்பட்டுள்ளது.

தஞ்சாவூர் தலைமை ஆஸ்பத்திரியிலுள்ள படுக்கைகளை 400 லிருந்து 500 ஆக அதிகரித்துள்ளனர். இதே மாதிரி மன்னார்குடி ஆஸ்பத்திரியில் 48 லிருந்து 80-க்கும், மாயூரம் ஆஸ்பத்திரி 30-லிருந்து 45-க்கும், திருவாரூரில் 24-ஐ 30 ஆகவும் அதிகரிக்கப்பட்டுள்ளன. திருத்துறைப்பூண்டியிலும், பட்டுக்கோட்டை ஆஸ்பத்திரியிலும் படுக்கைகள் அதிகமாகியுள்ளன.

கிராம வைத்திய சாலைகளில் வேலை செய்ய, டாக்டர்கள் பஞ்சம் ஏற்பட்டிருக்கிறது. எனினும் இதையும் மக்கள் சர்க்கார் சமாளிக்க முற்பட்டுள்ளனர்.

### கிராம சுகாதாரப் பணிகள்

'போர் (Bhore) கமிட்டி' என்ற வைத்திய சம்பந்தமான ஆராய்ச்சிக் குழுவினரின் திட்டப்படி, 'கிராம வைத்தியத் திட்டம்' ஒன்று வகுக்கப்பெற்றது. இதற்காகத் தஞ்சாவூர் தலைமை ஆஸ்பத்திரியில் பயிற்சி அளிக்கப்படுகிறது.

இதேபோல மருத்துவச்சிகளுக்கான பயிற்சி தஞ்சை சர்க்கார் ஹெட்குவார்ட்டர்ஸ் ஆஸ்பத்திரியில் அளிக்கப்

படுகிறது. கம்பவுண்டர்கள் பயிற்சியும் இங்கு தரப்படுகிறது.

அதிராம்பட்டினத்தில் ஜில்லா போர்டார் நிர்வாகத்தில், உள்ளூர் நன்கொடையாளர்களிடமிருந்து வசூலித்த தொகையைக்கொண்டு, ஒரு பிரசவ விடுதி அமைக்கப்பட்டுள்ளது. சர்க்காரும் இவ்விடுதிக் கட்டிடச் செலவுக்கென ரூ. 18,900 கொடுத்துள்ளனர்.

நாகப்பட்டினத்திலும் ஒரு பிரசவ விடுதி அமைக்க தேவனூர் பிரசவ விடுதி ட்ரஸ்ட் போர்டார் 28,000 ரூபாய் செலவுசெய்து அமைத்து ஜில்லா போர்டு வசம் பராமரிப்பு மேற்பார்வையை விட்டுவிடுவதெனத் தீர்மானித்துள்ளனர்.

திருவாரூரில் குஷ்டரோக சிகிச்சைக்கு வரும் நோயாளிகள் தங்க, ஒரு கொட்டகை அமைக்க உத்திரவாயிருக்கிறது.

தஞ்சாவூர் டவுனிலிருந்து 12 மைல் தூரத்திலுள்ள செங்கிப்பட்டி கிராமத்தில் க்ஷயரோக விடுதி யொன்றை காந்திஜி நினைவு நிதியிலிருந்தும், ஜில்லா போர்டார் அளித்துள்ள ரூ. 10 லக்ஷம் நிதியைக் கொண்டும் அமைக்க ஏற்பாடு செய்திருப்பது விசேஷமாகக் குறிப்பிடத்தக்கதாகும். இதற்காக சர்க்கார் நேர்பார்வையில் ஒரு டிரஸ்டும் அமைக்கப்பட்டு, விடுதி வேலையும் தொடங்கப் பெற்றுள்ளது.

## கூட்டுப் பொறுப்பு

இந்த ஜில்லாவிலுள்ள ஆஸ்பத்திரிகளில் ஓரளவு சர்க்காரின் நேர் மேற்பார்வையிலும் மற்றவை ஸ்தல ஸ்தாபனங்களினாலும் நடத்தப்பெறுகின்றன.

சுமார் 10 ஆஸ்பத்திரிகள் சர்க்கார் நேர் மேற்பார்வையிலும் மற்றபடியுள்ள சுமார் 50 (ஆஸ்பத்திரிகள், கிராம வைத்திய சாலைகள்) ஸ்தலஸ்தாபன மேற்பார்வையிலும் உள்ளன.

மாயூரத்திலுள்ள சர்க்கார் ஆஸ்பத்திரியில் பிரசவ விடுதி அமைக்கவும், சஸ்திர சிகிச்சைப் பகுதி அமைக்கவும்

ரூ. 51,000 செலவில் ஒரு திட்டம் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. இதேமாதிரி மன்னார்குடி ஆஸ்பத்திரியை திருத்தி அமைக்க சுமார் ரூ. 5,000 செலவாயிருக்கிறது.

காலரா அம்மை, பிளேக் போன்ற கொடிய தொத்து நோய்கள் சிகிச்சைக்கென, தஞ்சைத் தலைமை ஆஸ்பத்திரியில் ஒரு தனிப்பகுதி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

சென்னை ராஜ்யத்தில் தற்போது 1,231 வைத்தியசாலைகள் உள்ளன. முன்னைவிட சுமார் 25 உயர்ந்திருப்பதுடன், படுக்கைகளையும், ஏராளமாக அதிகரித்துள்ளனர். முன்னர் சுமார் 17 ஆயிரமாக இருந்த படுக்கைகள் 19,600-க்கு மேல் அதிகரித்துள்ளன.

ராஜ்யத்தில் உள்ள சர்க்கார் வைத்தியசாலைகள் அனைத்திலும், மின்சார வசதிகள் ஏற்படுத்தும் திட்டம் ஒன்று வகுக்கப்பட்டுள்ளது.

இதன்படி தஞ்சை ஜில்லாவில் உள்ள திருத்துரைப்பூண்டி, நாகப்பட்டினம், மன்னார்குடி, மாயூரம், பட்டுக்கோட்டை, கும்பகோணம் ஆகிய ஊர்களில் உள்ள சர்க்கார் ஆஸ்பத்திரிகளில் மின்சார வசதிகளை அளிக்க சுமார் 16,000 ரூபாய் செலவில் தீவிரமான ஏற்பாடுகள் நடைபெறுகின்றன.

## குடி தண்ணீர் வசதி

தஞ்சை ஜில்லாவில் பெரும்பாலான பிரதேசத்திற்கு ஆற்றுப்பாசனத்தின் மூலம் ஜலவசதியிருப்பினும் குறிப்பிட்ட சில இடங்களில் அளவுகடந்த ஜலப்பஞ்சம் உண்டு.

முதலில் ராஜ்யம் பூராவுக்கும் பொதுவாக இந்தத் துறையில் ஆகியிருக்கும் பணிகளைக் கவனிக்கலாம்.

இருபது வருஷத்திற்குள் எல்லா முனிசிபாலிட்டி நகரங்களிலும், ஜலவசதி அளிப்பது என்ற திட்டம்வகுக்கப்பட்டது. இதில் முதல் 5 வருஷத்திட்டத்தை மேற்கொண்டு, முதல் வருஷத்தில் 20 லக்ஷம் ரூபாயும், அடுத்த இரு வருஷங்களில் 40 லக்ஷம் ரூபாயும் அடுத்த இரு வருஷங்களில் 80 லக்ஷம் ரூபாயும் செலவிட அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

இதேபோன்று ராஜ்யம் முழுமைக்கும் கிராம ஜல சப்ளைக்கென 10 வருஷத் திட்டம் ஒன்றும் வகுக்கப்பட்டுள் ளது. கடந்த நாலைந்து வருஷங்களுள் இத்துறையில் செல வினம் அதிகரித்திருப்பதை பின்வரும் விவரங்களால் அறிய லாம். முன் சுமார் 15 லக்ஷம் ரூபாய்களுக்குள்ளேயே ஜல வசதி சப்ளைப் பணிகள் நடந்தன. தற்போதோ 1949–50-ல் சுமார் 43 லக்ஷம் ரூபாய் வரையும் 1950–51-ல் சுமார் 70 லக்ஷம் ரூபாய்களாகவும், 1951–52-ல் சுமார் 90 லக்ஷம் ரூபாய்களாகவும் ஜலவசதி சப்ளை செலவு மதிப்பீடு செய்யப் பட்டிருக்கிறது.

நமது ஜில்லாவில் அறந்தாங்கி ஜலவசதி சப்ளைக்கான செலவு ரூ. 2,46,000-மும், கும்பகோணத்தில் ரூ. 12,61,700 செலவிலும், நாகப்பட்டினத்தில் ரூ. 7,04,100 செலவிலும் ஜலவசதிகளுக்கான பணிகள் நிறைவேறியுள்ளன.

சுகாதாரப் பணியில் மக்களின் நன்மை கருதி நமது சர்க்கார் செய்துள்ள இன்னொரு முக்கிய மாறுதலை விவரிக்காமலிருக்க முடியாது. அதாவது இதுகாறும் 50 ரூபாய் மாத வருமானத்துக்குட்பட்டவர்களுக்கே இலவச வைத்திய சிகிச்சை சர்க்காரால் அளிக்கப்பெற்றது. ஆனால் இனிமேல் 100 ரூபாய் வரை மாத வருமானமுள்ளவர் களுக்கும் இலவச சிகிச்சை அளிப்பதென மக்கள் சர்க்கார் முடிவு செய்திருப்பது மகிழ்வதற்கு மட்டும் அல்ல, பெரும் பான்மையோருக்கு நன்மை பயப்பதுமாகும்.

# கிராமச் சீரமைப்பு

இந்தியாவின் ஜீவன் அதனுடைய ஏழு லட்சம் கிராமங்களில்தான் இருக்கிறது; என்று இந்தக் கிராமங்கள் அனைத்தும் பிறர் கையை எதிர் பாராமல், தம்முடைய தேவையைத் தாமே பூர்த்தி செய்து கொள்ளும் சக்தியும் தகுதியும் பெறுகின் றனவோ, அன்றுதான், இந்நாடு பரிபூரண சுதந்திரம் பெற்ற நாடாக முடியும்.

—மாகாத்மா காந்தியடிகள்

மக்கள் நலனில் அக்கரையுள்ள எவரும், குறிப்பாக பொதுஜன சர்க்கார் இந்த லட்சியத்தை மனத்துட் கொண்டே கிராமாபிவிருத்தி இலாகா என்று தனியாக அமைத்துள்ளனர். கடந்த ஐந்து ஆண்டுகளில் மக்க ளுடன் சர்க்காருக்கு மிக நெருங்கிய ஒத்துழைப்பும், உறவும் ஏற்பட இவ்விலாகாவே காரணமாயிருந்தது.

ஆயிரக்கணக்கான ஆணடுகளுக்கு முன்னிருந்து அன்னியர் இங்கு வந்தாளும் வரை இந்நாட்டில் கிராம ராஜ்யம் நடைபெற்றது. கிராமங்கள் முன் காலத்தில் சுபீட்சத்தின் உறைவிடங்களாய் இருந்தன.

ஆனால் சென்ற சில நூற்றாண்டுகளாக கிராம நலன் கெட்டுக் குட்டிச்சுவராகிவிட்டது. சீர்கேடடைந்த கிராமங்கள் சிறப்படையவேண்டும். சிறப்படைந்தால்தான் நாடு சிறப்படைய முடியும். இதற்காக எத்தனையோ முயற்சிகள் பல நடந்தன. ஆயினும் அன்னிய ஆட்சி மறைந்தபின்னர்தான் கனவு செயலாகப்பரிணமித்தது.

நம் மாகாணத்தில் பொது ஜனப் பிரதிநிதிகள் பதவியேற்றவுடன் இந்தக் கனவை நினைவிலிருத்தி உடனடியாக செயலாக்கும் வகையில் கிராமாபிவிருத்தி இலாகாவை ஏற்படுத்தினர்.

## புதிய ஆற்றல்

இதுகாறும் அரசாங்கத்துடன் நேரடித்தொடர்பு இல்லாதிருந்த மக்கள்—கிராமவாசிகள்—இப்போது சர்க்காரின் ஜீவநாடி என்பதை மக்கள் சர்க்கார் உணர்ந்திருப்பதிலோ, சுயதேவைப் பூர்த்தியுள்ள சுதந்திரக் கிராமத்தை அமைக்க விரும்புவதிலோ, அல்லது இதற்காக வேண்டித் தனி இலாகா அமைத்திருப்பதிலோ அதிசயப்படுவதற்கெதுவுமில்லை.

கிராமவாசிகளை முன்னேற்றப் பாதையில் கொண்டு வந்திருப்பது இந்த இலாகா. அதுவும் கிராம வாசிகளின் மனப்பூர்வமான ஒத்துழைப்புடன் இந்த இலாகா பல சாதனைகளைக் கண்டிருக்கிறது.

## பல துறையிலும் உதவி

முன்னெல்லாம் குடியானவன் 'விதைக்கு எங்கே போவது? என்ன செய்வது?' என்று ஏங்குவான். "இங்கே வாருங்கள், நான் வாங்கித் தருகிறேன்" என்று இலாகா ஊழியர் தாமே முன்வந்து உதவ வரும்போது, இவனுக்கு அவர்களிடம் மதிப்பும், அன்பும் ஏற்படுவது இயற்கைதானே?

" ஐயோ, எழுதப்படிக்கத் தெரியாத கைநாட்டுப் பேர்வழி நான். சப்-ரிஜிஸ்திரார் ஆபீஸில் போய் ரேகை வைக்க

வேணுமே'' என்று அங்கலாய்ப்பார் இன்னெருவர். "பயப்படாதே, நாங்கள் உமக்கு மூன்றே மாதத்தில் எழுதப்படிக்கக் கற்றுக் கொடுத்துவிடுகிரேம்'' என்று வருவார் இன்னெரு ஊழியர். அப்போது இவர் மனம் எவ்வளவு குதூகலமடையும்?

"ஒரு சொட்டுத் தண்ணீர் கிடைக்கவில்லையே'' என்று தவிப்பார் ஒரு கிராமவாசி. "உங்களில் சிலர் வந்தால் போதும். ஒரு கிணறு வெட்டி முடித்துவிடலாம்'' என்று வரிந்து கட்டிக்கொண்டு வருவார்கள் இந்த இலாகா ஊழியர்கள்.

"சாக்கடை நாற்றம் சகிக்கவில்லையே'' என்று மூக்கைப் பிடிப்பவர்களிடம், "நாம் அனைவரும் முயன்ருல் இந்த நாற்றத்தைமட்டுமா, நாட்டிலுள்ள நாற்றம் அனைத்தையும் போக்கிவிடலாமே'' என்று முன்வரும் கிராமாபிவிருத்தி ஊழியர்களின் உதவியை நிராகரிக்க, யாருக்குத்தான் மனம் வரும்?

"'நீங்கள் தினம் அரைமணி நேரம் நூற்ருல் போதும். இதோ ராட்டினம், இதோ பஞ்சு. . . . நூலைப் பெற்றுக் கொண்டு நாங்களே துணிதருகிரேம். அப்புறம் ஏது துணிப் பஞ்சம்? . . . நீங்கள் பத்துப்பேர் சேர்ந்தால் போதும்! ஆளுக்கு ஒரு கூடை கல், ஒரு மண்வெட்டுப் போட்டால் இந்த சாலை செப்பனுய்விடும். . . . . நாங்களும் இதோ ஒரு மண்வெட்டியுடன் வருகிரேம்'' என்று இந்த கிராமாபிவிருத்தி ஊழியர்கள் வரும்போது, எப்படி ஒதுங்கி நிற்க முடியும்?

இம் மாதிரி கிராமவாசிகளை ஊக்கம்கொள்ளும்படி அளவு கடந்து வசீகரித்துள்ள இந்த 'கிராமாபிவிருத்தி இலாகா' உண்மையிலேயே சென்னை சர்க்காரைப் பெருமை கொள்ளச் செய்யும் இலாகாவென்று சொல்லலாம்.

ராஜ்யத்தில் சிறியதும் பெரியதுமாக சுமார் 36,000 கிராமங்கள் இருக்கின்றன.

தற்போது சுமார் 84 பிர்க்காக்களில் ராஜ்ய பூராவிலும் பரந்த அளவில் [பிர்க்கா என்பது பல கிராமங்கள்

கொண்டதொரு பகுதியாகும்] கிராமாபிவிருத்தி இலாகாவின் வேலைகள் நடைபெறுகின்றன. ஆகக்கூடி இந்தப் பகுதிகளில் இணைந்துள்ள கிராமங்கள் சுமார் 2,400 ஆகும்.

இதர கிராமாபிவிருத்திப் பகுதிகளின் வேலைக்கு ஒரு உதாரணம் சொன்னாலே போதுமானதால் சாலியமங்கலம் பிர்க்காவை எடுத்துக்கொள்ளலாம்.

### சாலியமங்கலம் ஒரு வழிகாட்டி

சாலியமங்கலம் பிர்க்காவில் சுமார் 30 கிராமங்கள் இருக்கின்றன. இந்தப் பிர்க்காவில் உள்ளவர்கள் பெரும்பாலோர் விவசாயிகளே.

விவசாய இலாகாவின் ஒத்துழைப்புடன் நல்ல விதைகளை விநியோகிக்கும்படியான 'டிப்போ' ஒன்று ஆரம்பிக்கப்பட்டது. உர வகைகளைப் பாதுகாக்க கொட்டகை ஒன்றமைக்கப்பட்டது. உரம் சேகரிக்கும் விதம், உரப் பாதுகாப்பு வகை, உரக்குழிகளை வெட்டுதல், ஆகிய துறைகளில் பயிற்சி தரப்பட்டது.

உணவுப் பிரச்னை தீர்ந்தால் அடுத்தபடி நிற்கும் பிரச்னை உடை விஷயம் அல்லவா?

இந்த ஜில்லாவில் சுமார் 1,000 கைத்தறிகள் இருந்தாலும், கதர் உற்பத்தி மிகமிகக் குறைவாயிருந்தது.

கிராமவாசிகளிடம் தவணை முறையில் சுமார் 300 கைராட்டைகளைக் கொடுத்து அனைவரையும் நூற்கும்படி செய்தார்கள். நூற்ற நூலைப்பெற்றுத் துணியைக் கொடுத்துதவினார்கள். மாதிரித்தறிபோட்டுக் காண்பித்து, பஞ்சு பட்டை அடிக்கும் பயிற்சியும் நடத்திக் காட்டினார்கள். சுய முயற்சியிருந்தால் சுயதேவைப் பூர்த்தியாகிவிடும் என்பதை நிரூபித்துக் காட்டினார்கள். இந்தப் பிர்க்காவில் உள்ள சுமார் 30-க்கு அதிகமான ஜில்லா போர்டு ஆரம்பப் பாடசாலைகளில் தக்ளி, ராட்டை முதலியவற்றில் நூற்கவும் பஞ்சடிக்கவும், பட்டைபோடவும் பயிற்சி தரப்படுகிறது.

பிறகு வீடில்லாமல் நித்தியகண்ட வாழ்க்கை நடத்தும் ஏழை விவசாயத் தொழிலாளருக்கான ஏற்பாடுகளைச் செய்வதில், சர்க்காரின் கவனம் சென்றது.

## இருப்பிட வசதிகள்

கிராமபிவிருத்தி இலாகாவின் முயற்சியால் சர்க்கார் புறம்போக்கு நிலங்களில் நிரந்தரமான வீடுகளை அமைத்துக்கொள்ள அனுமதித்தனர். மிராசுதார்களிடையேயும் இந்த இலாகாவின் முயற்சியால் மனமாற்றம் ஏற்பட்டு, தமக்குச் சொந்தமான சில இடங்களை வீடில்லாதவருக்கு மனைகளுக்காக வழங்கினர்.

எளிய ஹரிஜனங்களின் குடியிருப்புவசதிக்கென ஒரு கூட்டுறவுச் சங்கமும் ஆரம்பிக்கப்பட்டது. அருந்தவபுரத்தில் சுமார் 150 வீடுகள் அமைக்கப்பெற்று, 'காந்திக்கிராமம்' என விளங்குகிறது. இதற்காக அனுமதிக்கப்பெற்ற செலவு ரூ. 35,000. இதேபோல குடிதண்ணீர் வசதிக்கென செலவிடப்பட்ட தொகை சுமார் ரூ. 37,000-க்குமேல் ஆகும்.

தஞ்சை ஜில்லா நீர்ப்பாங்கான பிரதேசமாதலால் கிராமாந்திரங்களில் நல்ல ரோடுகள் இல்லை. இதனுல் போக்குவரத்து சிரமம் அளவு கடந்தது. ஆனுல் கிராம அபிவிருத்தி இலாகாவின் முயற்சி மூலம் மக்களுடைய ஒத்துழைப்பும் கிடைத்துப் பல இடங்களில் ரோடுகள் அமைக்கப்பட்டன. இந்தப் பிர்க்காவில் மட்டும் இம்மாதிரி ரோடுகள் அமைக்க சர்க்கார் சுமார் ரூ. 5,33,365 செலவு செய்திருக்கிறுர்கள்.

இது மட்டுமல்ல, முதியோர் கல்வி நிலையங்களும், முதியோர்களுக்கான வாசக சாலைகளும் இவ்விலாகாவினுல் அமைக்கப்பட்டுள்ளன. இந்தப் பிர்க்காவில் ஒரு பெரிய வாசகசாலையும், 25 கிளைவாசகசாலைகளும் உள்ளன. தஞ்சை ஜில்லாவில் உள்ள சாலியமங்கலம் பிர்க்காவைத் தவிர சமீபகாலத்தில் வேதாரண்யம் பிர்க்காவும் அனைவரும் பாராட்டும்படியான பணிகளைச் செய்து வருகிறது. இங்கும் மக்களும், கிராமங்களின் புனருத்தாரணத்தில்

அக்கரையுள்ள பிரமுகர்களும் ஒத்துழைத்து வருகின்றனர். கூடிய விரைவில் இதுவும் தலைஞாயர் பிர்க்காவும் சாலியமங்கலம் பிர்க்காவைபோல் முன்னணியில் வந்துவிடும் என்பதற்கையமில்லை.

கிராமக் குடிசைத் தொழில்களைப் பொறுத்த வரை இந்தப் பிர்க்காவில் பாய்முடைதல் குறிப்பிடத்தக்கது.



இதற்கு ஆக்கமளிக்கும் வகையில் ஒரு கூட்டுறவுச் சங்கமும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இன்னும் உள்ள இதர கிராமத் தொழில்களுக்கான உபகரணங்களும் சாதனங்களும் அளிக்கப்பெறுகின்றன. கிராமக் கைத்தொழில் வளர்ச்சிக்குத் தக்க பயிற்சி அளிப்பதற்கு, சர்க்கார் அநேக ஏற்பாடுகள் செய்துள்ளனர்.

## பொருள் வளம் சிறக்க

இவை தவிர இந்த பிர்க்காவில் உள்ள கிராம வாசிகளின் பொருளாதார முன்னேற்றங் கருதி, சுமார் 12 கூட்டுறவு சங்கங்களும், நானுவித உபயோகக்கூட்டுறவு சங்கமும் (Multi-purpose Co-operative Society) அமைக்கப்பட்டுள்ளன.

சாலியமங்கலத்தில் மின்சார விளக்குகள் போடுவதற்கு அடிகோலியது கிராம அபிவிருத்தி இலாகாதான். இவ்விலாகா முயற்சியினுல் ஒரு பொது ரேடியோவும் வைக்கப்பட்டுள்ளது.

சாலியமங்கலம், வேதாரண்யம், தலைஞாயர் ஆகிய இந்த மூன்று பிர்க்காக்களிலும் சிறியதும் பெரியதுமாக சுமார் 180 கிராமங்கள் இணைக்கப்பட்டுள்ளன.

# பஞ்சாயத்து ராஜ்யம்

*கிராமப் பஞ்சாயத்துக்களை அமைப்பதற்கான வழிகோலி, தனித்தனி சுயாட்சி நிலை ஸ்தாபனங்களாகப் பணியாற்றுவதற்கு அவசியமான அதிகார உரிமைகளை அவற்றுக்கு அரசாங்கம் அளிக்கும்.*

—இந்திய அரசியல் அமைப்பு
ஷரத்து—40

பலமான அஸ்திவாரத்தின் மேல் அமைந்தது நம் நாட்டுப் பண்பாடு. அனுபவசாத்தியமான திட்டங்களை உயிர் நாடியாகக் கொண்டே, பண்டைய நாளில் தேசத்தின் நிர்வாக முறை நடைபெற்று வந்துள்ளது. கால தேவனின் திருவிளையாடல்கள் காரணமாக, நாட்டில் எத்தனையோ அரசியல் மாறுதல்கள் ஏற்பட்ட போதிலும், கிராமாந்திரங்களில் பல நூற்றாண்டுகளாய் ஒரு விதமான அமைதி வாழ்வு நிலவி வந்ததென்று கூறலாம். அதற்கு முக்கியமான காரணங்களுள் ஒன்று, பஞ்சாயத்து ஆட்சி. சரித்திர காலத்திலும் சரி, புராதன காலத்திலும் சரி, பஞ்சாயத்துமுறை இருந்ததற்குச் சான்றுகள் பல உண்டு.

# நஞ்சல்ல ; நல்லுணவு



மாய்ந்தான் மதுவரக்கன்



கூட்டுறவுச்சங்க அமைப்பு



பனைவெல்லத் தயாரிப்பு



பால்விநியோகப் பணி



கருத்துள்ள விளையாட்டு

புத்தறிவு தரும் புத்தகசாலைகள் பல



# கிராமங்களில் புதுவாழ்வு



கொள்ளிடத்தின் குறுக்கே பாலம்

பன்னெடு நாள் தேவை நிறைவேறுகிறது



ஜில்லாவெங்கும் அழகான சாலைகள்



ஜாதிபேதமில்லை



சுயதேவைப்பூர்த்தி—சுயமுயற்சி





அபிவிருத்திப் பாதையில்—சாலியமங்கலம்

'ஏரி வாரியர், பொன் வாரியர், பஞ்ச வாரியர்' முதலிய தொடர்கள் இன்று பலருக்கும் புதிதாகத் தெரியலாம். ஆனால் சுமார் ஆயிரம் வருஷத்திற்கு முன்பெல்லாம் இவை சாதாரணமாக வழக்கத்தில் இருந்தவை. அந்நாளைய கிராமங்களில் குடவோலை மூலம் மக்களால் தேர்ந்தெடுக்கப் பட்ட ஊர்ச் சபையாருக்கு, இப்பெயர்கள் வழங்கப் பட்டன. செங்கல்பட்டு ஜில்லாவில் இருக்கும் உத்திர மேரூர் என்னுமிடத்தில் கிடைத்த சாசனமும் இது பற்றிய விவரங்களை நன்குணர்த்துகிறது. திருநெல்வேலியைச் சார்ந்த மானூர் என்னும் இடத்துச் சாசனமும் இதை வலியுறுத்தும்.

பொறுப்பு வாய்ந்த ஒரு சிலரைக் கிராம மக்கள் தேர்ந்தெடுத்து, அவர்களிடத்தில் கிராமத்தின் பலவேறு பொது நலப் பணிகளை ஒப்படைத்திருந்தனர். கிராம சம்பந்தமான எல்லாத் தேவைகளையும் சௌகரியங்களையும் கவனித்து ஆவன செய்யவேண்டியது அவர்களுடைய கடமையாக இருந்தது.

## பண்டைய முறைக்கும் புத்துயிர்

மிகப் பழைய காலம் முதல் நம் அனுஷ்டானத்தில் இருந்து வந்த இந்தப் பஞ்சாயத்து முறை, ஆங்கில ஆட்சியின் போது மிகவும் சீர்கேடடையத் தொடங்கியது. சில ஆண்டுகளுக்கு முன், பொதுவாக ஸ்தல ஸ்தாபன ஆட்சி நிறுவப்பட்டபோது, ஏதோ பெயரளவிலே சில இடங்களில் பஞ்சாயத்துக்கள் நிறுவப்பட்டன. ஆனால் அவற்றிற்குப் போதுமான அதிகாரங்களும் நிதி வசதியும் இல்லாததால், ஜனங்களுக்கு இவற்றால் அதிக நன்மை ஏற்படாமல் இருந்தது.

இந்த நிலையை மாற்ற மக்கள் சர்க்கார் முன் வந்தனர்; பண்டைக் காலச்சிறப்புக்குக் காரணமாயிருந்த பஞ்சாயத்து முறையை இக்காலத் தேவைக் கேற்ப சிறந்த முறையில் திருத்தியமைத்தனர். அதன் பயனாக, சென்னை கிராம பஞ்சாயத்துச் சட்டம், 1950-ம் வருஷம் நிறைவேறியது.

இந்தச் சட்டத்தின் கீழ் அமைக்கப்படும் பஞ்சாயத்துக்கள் கிராம சுயஆட்சிக்கான எல்லாவித வசதிகளுடனும் விளங்கும். கிராம வாழ்க்கைக்கும் கிராமப் பொருளாதாரத்துக்கும் உகந்ததான ஸ்தல நிர்வாக முறையும், அதற்கு வேண்டிய அதிகாரங்களும் பஞ்சாயத்துகளுக்குக் கொடுக்கப்படும். இவைகளின்மீது மேலதிகாரக் கட்டுப்பாடு மிகவும் குறைந்த அளவுக்குத்தானிருக்கும். ஒவ்வொரு கிராமத்தையும், அதன் மக்களுடைய சமூக பொருளாதார, கலாசாரங்களின் தேவைக்கு அவசியமானவற்றில் சுயநிறைவுள்ளதாக நிர்மாணித்து, தாங்களே தங்கள் நிர்வாகத்தை நன்கு பராமரித்து வரும்படி செய்வதே இந்தச் சட்டத்தை வகுத்த மக்கள் சர்க்காரின் நோக்கமாகும். இந்தச் சட்டம் 1951-ம்ஞு ஏப்ரல்மீ முதல்தேதியிலிருந்து அமுலுக்கு வந்திருக்கிறது.

**கட்டாய அமைப்பு.**

ஒரு கிராமத்தின் ஜனத்தொகை 500-க்கு மேலிருந்தால், அங்கு ஒரு பஞ்சாயத்து அமைக்கப்படும். குறைந்த ஜனத்தொகையுள்ள சில கிராமங்களை ஒன்ருய் இணைத்து, அவைகளுக்கு கூட்டுப் பஞ்சாயத்துக்கள் அமைக்கலாம். புதிய சட்டத்தின்கீழ், பஞ்சாயத்துக்கள் அமைப்பது கட்டாயமாக்கப்பட்டிருக்கிறது. முன்போல சிலரின் இஷ்டத்தைப் பொறுத்ததல்ல. ஜனத்தொகை 5,000-க்கு மேலும் வருமானம் 10,000 ரூபாய்க்குக் குறையாமலும் உள்ளவை, முதல் வகுப்பு பஞ்சாயத்துக்கள். மற்றவை இரண்டாம் வகுப்பு பஞ்சாயத்துக்கள். புதுச் சட்டம் அமுலுக்கு வருமுன், ராஜ்யத்தில் மொத்தம் 8,335 பஞ்சாயத்துக்கள் இருந்தன. புதுச் சட்டத்தின்கீழ் இன்னும் 15,830 பஞ்சாயத்துக்கள் அமைக்கப்படவேண்டும்.

தற்போது முனிசிபாலிட்டிகளிலும் ஜில்லாபோர்டுகளிலும் அங்கத்தினர்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகிருர்கள். தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தினர்களில் ஒருவரை அந்த அங்கத்தினர்கள் தலைவராய்த் தேர்ந்தெடுக்கிருர

கள். ஆனால் புதுப் பஞ்சாயத்து சட்டத்தின் கீழ், பஞ்சாயத்து சபை தலைவரும் ரகசிய ஓட்டு மூலம் நேரடியாகப் பொது மக்களால்தான் தேர்ந்தெடுக்கப்படவேண்டும். தேர்ந்தெடுக்கப்படும் அங்கத்தினர்கள் தங்களுள் ஒருவரை உபதலைவராகத் தேர்ந்தெடுக்கவேண்டும். முன்னேற்ற மடையாத வகுப்பினருக்கு மட்டும் 10 வருஷ காலத்துக்கு பஞ்சாயத்துச் சபையில் ஸ்தானங்கள் ஒதுக்கப்படும். சட்ட சபை வாக்காளர் ஜாபிதாவே இந்தப் பஞ்சாயத்துத் தேர்தலுக்கும் உபயோகிக்கப்படுமாகையால், வயது வந்தோர் ஓட்டுரிமை முறையில்தான் தேர்தல் நடைபெறும்.

**கடமைகளும் பொறுப்புகளும்.**

அந்தந்த கிராமத்திலுள்ள ரோடுகளை மராமத்து செய்வதும், புது ரஸ்தாக்கள் அமைப்பதும், தெருக்களுக்கு விளக்குகள் போடுவதும், சுகாதார சாதனங்கள் நிறுவுவதும், பாதுகாப்புள்ள குடிதண்ணீர் விநியோகிப்பதும், அந்தப் பஞ்சாயத்து சபையின் முக்கிய அலுவல்களாகும். இவை தவிர, மக்களின் வசதிக்காக ஆஸ்பத்திரிகள், பிரசவ சிசு சம்ரட்சண நிலையங்கள், மார்க்கெட்டுகள். வண்டிப் பேட்டைகள், ரேடியோக்கள் முதலியவைகளும் ஏற்படுத்தலாம்.

முதல் வகுப்புப் பஞ்சாயத்துகளில் நிர்வாக சம்பந்தமான அவசியம் ஏற்படும் இடங்களில், நிர்வாக அதிகாரிகளை சர்க்கார் நியமிக்கும். சப்-ரிஜிஸ்திரார் காரியாலயம் இல்லாத கிராமங்களில், அந்த நிர்வாக அதிகாரிக்கு ஓரளவு தஸ்தவேஜுகளை ரிஜிஸ்தர் செய்யும் அதிகாரமும் கொடுக்கப்படும். சென்னை கிராமக் கோர்ட்டுகள் சட்டத்தின் சிவில் கிரிமினல் விவகார அலுவல்களை, புதுச் சட்டத்தின் படி, கிராமப் பஞ்சாயத்துக்களே அமுல் நடத்தும்.

பஞ்சாயத்தின் நிர்வாகத்துக்கு வேண்டிய நிதியைச் சேகரிக்க, பஞ்சாயத்து சபைக்கு வரிவிதிக்கும் அதிகாரங்களைச் சட்டம் அளிக்கிறது. இனி, பஞ்சாயத்துக்களின்மீது ஜில்லாபோர்டுக்கு மேலதிகாரம் எதுவும் கிடையாது.

ஜில்லா கலெக்டரும் அந்தப் பிரதேசத்தின் அமைதி, பாது காப்பு, நிர்வாகம் வரையில்தான் தலையிடலாம். இதர விஷயங்களில் ஸ்தல ஸ்தாபன இன்ஸ்பெக்டரின் மூலம், சர்க்கார் மேலதிகாரத்தைப் பெற்றிருக்கும்.

ராஜ்யத்தில் 1949-ம் வருஷ ஆரம்பத்தில் 7,241 ஆக இருந்த சிறிய பஞ்சாயத்து தொகை 7,595 ஆகவும், 414 பெரிய பஞ்சாயத்துக்கள் 474 ஆகவும் மாற்றப்பட்டன.

ரூபாய் 3,000 வருமானத்துக்குள்பட்டவை சிறிய பஞ்சாயத்தாகவும், மேற்பட்டவை பெரிய பஞ்சாயத் தாகவும் வகுக்கப்பட்டுள்ளது.

தஞ்சை ஜில்லாவைப் பொறுத்த வரை தற்போதுள்ள சிறிய பஞ்சாயத்துக்கள் 606 ஆகவும் பெரிய பஞ்சா யத்துக்கள் 24 ஆகவும் ஆகமொத்தம் 630 இருக்கின்றன. பஞ்சாயத்து நிர்வாக மூலம் கிராமங்கள் நல்ல நிலையில் முன்னேற்றமடைய வாய்ப்பிருப்பதுபோல முனிசிபாலிட்டி கள் மூலம் நகரங்கள் முன்னேற வகையுண்டு. தஞ்சை ஜில்லாவில் தஞ்சை நகரம், கும்பகோணம், மாயூரம், திரு வாரூர், நாகப்பட்டினம், மன்னார்குடி ஆகிய ஆறு நகரங் களிலும் நகரசபைகள் நிர்வாகப் பணியாற்றுகின்றன.

தஞ்சாவூர் முனிசிபாலிட்டி ரூ. 75,000 செலவில் 19 ரஸ்தாக்களை தார் ரஸ்தாவாக்கும் வேலைபெற்றது. 1946–47-ம் வருஷத்தில் ரூ. 56,757-லிருந்து 1950–51-ம் வருஷம் சுமார் 1 லட்ச ரூபாய் வரை ரஸ்தா அமைப்புக் கென செலவழிக்கப்பட்டன.

இந்த முனிசிபாலிட்டி 16 ஆரம்பக் கல்விப் பள்ளிகளை நடத்துகிறது. ஆறு முதியோர் கல்விப் பள்ளிகள் நடை பெறுகின்றன. சிவகங்கைத் தோட்டத்தை ஒரு முதல் தரப் பூங்காவாகவும், அதில் ஒரு பொது இலவச வாசக சாலையும் இலவச நூல் நிலையமொன்றும் நடத்தப்படு கிறது. தற்போது 13 இலவச வாசக சாலைகள் இந்த முனிசிபாலிட்டிக்குள் செயலாற்றுகின்றன.

அனாதை சுகாதார விடுதி ஒன்று இந்த முனிசிபாலிட்டி நிர்வாகத்தில் நடத்தப்படுகிறது.

சேரி சீர்திருத்தப் பணியில், கொடிக்காலூர் சுங்காந் திடல், பள்ளர் தெருக்களுக்கும் குருவிக்காரப் பள்ளத் திற்கும் ரோடுகளும், விளக்கு வசதிகளும் அமைக்கப் பெற்றன.

சுகாதாரத் துறையில் 1947 முதல் 50-க்குள் ரூ. 15,000 செலவில் கக்கூஸ்கள் கட்டப்பட்டன. குப்பைத்தொட்டி கள் புதிதாக வாங்கப்பெற்றன. 1948–49-ல் கருந் தட்டாங்குடிப் பக்கத்தில் ஒரு பிரசவ விடுதி திறக்கப் பட்டது. தஞ்சை நகரின் தென் மேற்குப் பகுதியில் ஒரு புதிய ஆஸ்பத்திரி முனிசிபாலிட்டியாரால் திறக்கப் பட்டது. விளக்கு வசதியைப் பொறுத்தவரை 1946–47 முதல் 1949–50 வரை 1,798 மின்சார விளக்குகளும், 350 மண் எண்ணெய் விளக்குகளும் போடப்பட்டுள்ளன.

உர உற்பத்தியில் இந்த முனிசிபாலிட்டி ஈடுபட்டு 1946 முதல் 1949 முடிய செய்த வேலை விவரமாவது:

| | | பெறுமானம் |
|---|---|---|
| 1946 | ... | 30,1,560 கன அடி |
| 1947 | ... | 30,8,240 ,, |
| 1948 | ... | 28,4,760 ,, |
| 1949 | ... | 34,7,060 ,, |

இவற்றை விவசாய இலாகாவிடம் கொடுத்து விவசாய உற்பத்திக்கு ஊக்கம் அளிப்பது குறிப்பிடுதற்குரியது.

மார்க்கெட்டுகள் மராமத்துக்காக ரூ. 40,000-மும், பஸ் ஸ்டாண்டு தற்காலிக ஷெட்டுக்காக ரூ. 3,000-மும் இந்த முனிசிபாலிட்டி செலவு செய்துள்ளது.

நாகப்பட்டினம் முனிசிபாலிட்டியும் இந்த உர உற் பத்தியில் மிகக் கருத்துடன் இருந்ததால் 1946-ல் 422 டன் னாக இருந்த உற்பத்தி 1950-ல் 2,836 டன்களாகப் பெருகி யுள்ளது.

நாகப்பட்டினம் துறைமுகப்பட்டினமாகும். இங்கிருந்து கப்பல்கள் மலேயாவுக்குப் போகின்றன. இங்கு தேவை யான சுகாதார மேற்பார்வைப் பணிகளை முனிசிபாலிட்டி யார் நடத்துகின்றனர்.

கும்பகோணம் முனிசிபாலிட்டி வகுத்த ஐந்தாண்டு நகர அபிவிருத்தித் திட்டத்தை மக்கள் சர்க்கார் ஏற்றுக் கொண்டுள்ளனர். இந்த நகர சபையின் பராமரிப்பில் 5 முதியோர் கல்வி நிலையங்கள், இரண்டு உயர்தரப் பள்ளிகள், ஒரு தொழிற்பள்ளி ஆகியனவும், 11 வாச சாலைகளும் உள்ளன.

மருத்துவ வசதித் துறையில் ஒரு தாய் நல விடுதி யொன்றை இந்த முனிசிபாலிட்டி 1947-ம் ஆண்டு செப்டெம்பர் மீ 24உ லிருந்து ஆரம்பித்து நடத்துகிறது. இதில் 30 பேர் தங்கி மகப்பேறு மருத்துவ வசதி பெற வாய்ப்புண்டு.

உரத்தயாரிப்புப் பணியில் 1949-ல் 3828 டன்களும், 1950-ல் 3,949 டன்களும் உற்பத்தி செய்யப்பெற்றது.

திருவாரூர் முனிசிபாலிட்டியில், இதர பணிகளுடன் கூட வாசகசாலை, நூல் நிலையம் ஏற்படுத்துவதில் நிரம்பவும் சிரத்தை காட்டப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

மாயூரம் முனிசிபாலிட்டியில், சீர்காழி-கும்பகோணத்துக்குப் போகும் ரோட்டுகள் ரிப்பேருக்கும் ரூ. 38,468-ம் செலவு செய்துள்ளது, இன்னும் 7 இடங்களுக்கு இணைப்புத் தார் ரோட்டுகள் அமைக்கவும் அனுமதிக்கப்பட்டுள்ளது.

முனிசிபாலிட்டி மேற் பார்வையில் 763 மின்சார விளக்குகள், 93 மெர்க்குரி விளக்குகளும் உள்ளன.

இந்த முனிசிபாலிட்டியில் இரண்டு உயர் நிலைப்பள்ளிகள், இவற்றிற்காக வருஷமொன்றுக்கு ரூ. 1,10,582 செலவாகிறது. தற்போது 19 ஆரம்பப் பள்ளிகள் உள்ளன.

இந்த முனிசிபாலிட்டிக்கு கடந்த நாலாண்டுகளுக்குள் சுகாதார, வைத்திய செலவு மட்டும் ரூ. 3,57,715 செலவாகியிருக்கிறது. இதர முனிசிபாலிட்டிகளைப் போல இங்கும் உர உற்பத்தியில் அக்கரை காட்டப்படுகிறது.

மன்னார்குடி நகரம், கோவில் குளத்துக்கு மட்டும் பேர் போனதில்லை. இங்குள்ள முனிசிபாலிட்டி 3 பிரசவ விடுதிகள் நடத்துவதுடன், குளங்கள் மராமத்து வேலையும் செய்து வருகிறது.

# ஹரிஜன முன்னேற்றம்

மக்களுள் பலதுறைகளிலும் தாழ்ந்துள்ள வகுப்பினரின்—முக்கியமாக ஷெட்யூல் வகுப்பு, மலைஜாதி ஆகியவற்றைச் சேர்ந்தவரின்—கல்வி, பொருளாதார உரிமைகளை விசேஷ கவனத்துடன் அபிவிருத்தி செய்து, சமூக அநீதி, மற்றும் அது போன்ற எல்லா இடர்ப்பாடுகளினின்றும் அவர்களை அரசாங்கம் பாதுகாக்கும்.

—இந்திய அரசியல் அமைப்பு ஷரத்து—46

நாம் அனைவரும் இயற்கையன்னையின் குழந்தைகள்; எனவே நம்மில் இன பேதமோ, சாதி பேதமோ, உயர்வு தாழ்வோ பாராட்டுதல் கொடுமையான தவறாகும் என்ற நோக்கத்தில்தான் காந்தியடிகள் "தாழ்த்தப்பட்டவர் அனைவரும் ஹரிஜனங்கள்" என்று அழைத்தார். இந்தியாவிலுள்ள 8 கோடி ஹரிஜனங்களும் முன்னேற்றமடைந்து, சாதி மத உயர்வு தாழ்வற்ற சமுதாயத்தின் சம பங்காளிகளாய் மாறினாலன்றி, நாம் முன்னேற்ற மடைந்தவர்களாக மதிக்கப்படமுடியாது என்று அவர் வற்புறுத்தி வந்தார்.

எல்லோரும் சமம் என்ற கொள்கையை உறுதியாகக் கொண்ட நமது சர்க்கார் பதவியேற்றதும் ஹரிஜனங்களின் முன்னேற்றத்துக்கென ஒரு தனி இலாகாவையே ஏற்படுத்தினர்.

ராஜ்யத்தில் ஹரிஜனக் குழந்தைகளின் கல்விக்காக 1,200 பள்ளிகள் நடத்தப்படுகின்றன. ஹரிஜன மாணவர்கள் பகல் உணவுக்கென வருஷம் ஒன்றுக்கு 12 லட்சம் செலவாகிறது. தவிர ஹரிஜனப் பையன்களின் உதவிச் சம்பளத்துக்கென 6 லட்சமும், ஹாஸ்டல்களின் பராமரிப்புக்கென 13 லட்ச ரூபாயும் செலவாகிறது. அனேக ஹாஸ்டல்கள், பள்ளிகள் முதலியவையும், தக்கர் பாபா வித்தியாலயம் போன்ற கைத்தொழிற் பள்ளிகளும் அரசாங்க உதவி பெற்று நடைபெறுகின்றன.

## களங்கம் நீங்கியது

ஹரிஜனங்களுக்கு ஆலயப்பிரவேசச்சட்டத்தால் இறைவனை வழிபடும் உரிமை கிடைத்தது. சாதிவேற்றுமை தொலைய இந்த சீர்திருத்தம் ஒரு ஆதாரமாயிருந்தது. ஆனால் பொருளாதார நிலையில் அவர்களின் 'தாழ்மை' உயர்ந்தால் தானே அவர்களுக்கு விமோசனம்? இதைத் தீவிரமாக ஆராய்ந்த நமது சர்க்கார் முதலில், அவர்கள் இருக்கும் இடத்துக்குக்கூட பிறர் தயவை எதிர்பார்த்துத் தவிப்பதை மாற்றிவிட்டால்—அதாவது அவர்களுக்கென்று சொந்தமான இருப்பிடம் கிடைத்தால்தான், இதரவகை அபிவிருத்திகளைச் செய்யமுடியும் என்ற முடிவுக்கு வந்தார்கள்.



தவிர, இந்தப் பிரச்னையைத் தீர்க்க 1948-ம் வருஷத்தில் சென்னை மாகாண முதல் அமைச்சர் தலைமையில் பிராசு

தார்கள், குடியானவர்கள், ஹரிஜனங்கள் ஆகியவர்கள் அடங்கிய ஒரு கூட்டம் நடைபெற்றது. ஹரிஜனங்கள் குடியிருந்துவரும் மனைக்கட்டுகளை வாங்கிக் கொடுக்கும் விஷயமாய் தீர விசாரணை செய்ய ஒரு சங்கம் உருவாக்கப் பட்டது. அந்தச் சங்கத்தின் வேண்டுகோள்படி ஹரி ஜனங்கள் குடியிருந்து வரும் மனைக்கட்டுகள் சம்பந்தமான புள்ளி விவரங்கள் தாசில்தார்களிடமிருந்து சேகரிக்கப் பெற்றன.

இந்த விவரங்களின்படி தஞ்சை ஜில்லாவில் 124,619 ஹரிஜனக் குடும்பங்கள் மிராசுதார்களின் மனைக்கட்டு களில் குடியிருந்துவருவதாகத் தெரியவந்தது.

முதலில் மனைக்கட்டுகளை ஹரிஜனங்களுக்குச் சொந்த மாக வாங்கிக் கொடுப்பதென்றும், பாதித் தொகையை சர்க்காரும், பாதியை ஹரிஜனங்களும் கொடுப்பதெனவும் திட்டம் வகுக்கப்பட்டது. எனினும் இந்தத் திட்டம் எதிர் பார்த்த பலன் தரவில்லை.

## உழுவதற்கு நிலமளித்தல்

ஆகவே 1949-ம் வருஷம் நவம்பர் மாதத்தில் எல்லா ஏழை ஹரிஜனக் குடும்பங்களுக்கும், குடும்பம் ஒன்றுக்கு நஞ்சையாயிருந்தால் 3 சென்ட் நிலமும், புஞ்சையா யிருந்தால் 5 சென்ட் நிலமும் இலவசமாக வாங்கிக் கொடுக்கும்படி உத்திரவிடப்பட்டது. அதன்படி 1950–51-ல் 52 கிராமங்களில் ரூ. 1,50,000 செலவில் குடியிருக்கும் மனைகளை வாங்கி வழங்கத் திட்டமிட்டு வேலை நடந்தது.

1949–50-ல் ரூபாய் 5 லட்சம் இந்த வேலைக்கென ஒதுக்கி வைக்கப்பட்டது. ஒவ்வொரு டிவிஷனுக்கும் ஒரு தாசில்தார் இருந்து வேலை செய்கிறார்.

இவர்களின் வேலை விவரங்களாவன :

(1) ஒவ்வொரு கிராமத்திலுமுள்ள ஹரிஜனக் குடும்பங்களையும், அவர்கள் குடியிருந்து வரும் மனைக்கட்டு களையும் குறித்து, ஒரு ஜாபிதா தயாரித்தல்.

(2) அரசாங்கத்துக்குச் சொந்தமான நிலங்களில்

குடியிருப்புக்குத் தகுதியானவற்றை அடமானம் வைத்தல்.

(3) மனைக்கட்டுகள் அரசாங்கத்துக்குச் சொந்தமான நிலமா அல்லது பிறருக்குச் சொந்தமான நிலமா என்று தெளிவுபடுத்தல்.

(4) அரசாங்கத்துக்குச் சொந்தமான நிலங்கள் வேண்டிய அளவு இல்லாவிட்டால், இதர தகுதியான இடங்களைத் தேர்ந்தெடுத்து வழங்குதல்.

சில கிராமங்களில், முக்கியமாக திருத்துரைப்பூண்டி பிரதேசத்தில், நஞ்சை நிலங்களுக்கு மத்தியில் பலர் குடியிருந்து வருகிறார்கள். இந்த இடங்களுக்குச் சரியான பாதைகளோ, இதர சுகாதார வசதிகளோ இல்லை. இம்மாதிரி இடங்களில் 2 அல்லது 3 ஏக்கர் இடமுள்ள பொது நிலத்தைத் தேர்ந்தெடுத்து, அதில் குடியிருப்பு, பாதைகள், தண்ணீர் வசதி செய்துதர ஏற்பாடாயிருக்கிறது.

தஞ்சை ஜில்லாவில் ஹரிஜனப் பிள்ளைகள் கல்வி வசதி பெறுவதற்காக 149 பள்ளிக்கூடங்கள் நடத்தப்படுகின்றன. இப்பள்ளிகளில் 7,000-க்கு மேற்பட்ட சிறுவர்களும் 3,000-க்கு மேற்பட்ட சிறுமிகளும் கல்வி பயிலுகின்றனர். ஏழைகளுக்குத் துணியும், பாட புத்தகங்களும், கற்பலகைகளுங்கூட இலவசமாக வாங்கித் தரப்படுகின்றன. இருநூற்றுக்கு மேற்பட்ட பிள்ளைகளுக்கு இலவச உணவு, சம்பள உதவி முதலியன கொடுக்கப்பட்டுள்ளன.

இவர்களுக்கென ஏழு உணவு விடுதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இவற்றிற்காக வருஷந் தோறும் சுமார் 30,000 ரூபாய் சர்க்காருக்குச் செலவாகிறது.

தவிர, தொழில் துறைக் கல்லூரிகள் உள்பட எல்லாக் கல்லூரிகளிலும் இவர்களுக்கென விசேஷ சலுகைகளும் வசதிகளும் நிர்ணயிக்கப்பட்டுள்ளன.

ஹரிஜனங்களைப் பொது இடங்கள் எல்லாவற்றிலும் அனுமதிக்கும்படியான வகையில் 1947-ம் வருஷத்திலேயே சட்டம் இயற்றப்பட்டுவிட்டது.

## ஜாதி பேதமற்ற ஊர்

ஹரிஜனங்களுக்கு எத்தனைதான் வாழ்க்கை வசதி செய்து கொடுத்தாலும், ஜாதி ஹிந்துக்களோடு சமத்துவமாக ஒரே இடத்தில் வாழ வகையேற்பட்டால்தான், முன்னேற்றத்தின் முழுப் பயனையும் அடையமுடியும். இந்த நோக்கத்தை நிறைவேற்றவே அருந்தவபுரத்தில் காந்திக் கிராமம் நிர்மாணிக்கப்பெற்றது. இந்த சாதனை ஹரிஜன முன்னேற்றப் பாதையில் ஒரு மைல் கல்லாகும்.

அருந்தவபுரம் கிராமத்திலுள்ள 69 ஏக்கர் விஸ்தீரணமுள்ள புறம்போக்கு நிலத்தில் வடக்கும் தெற்குமாக இரண்டு குடியிருப்பு விடுதிகள் அமைக்கப்படுகின்றன. ஒவ்வொரு பகுதியிலும் 15 சென்ட் கொண்ட மனைகள் 100 இருக்கும். இவ்விரு பகுதிகளுக்கு மத்தியில் உள்ள ஒரு பொது இடத்தில் ஒரு மருத்துவசாலை, ஒரு பள்ளிக்கூடம், ஒரு சாவடி அமைக்கப்படும். இரண்டு பகுதிகளுக்கும் நான்கு கிணறுகளும், பள்ளிக்கூடம், மருத்துவசாலை போன்ற ஸ்தாபனங்களின் உபயோகத்திற்கென இன்னொரு கிணறும் அமைக்கப்பெறும்.

இங்கே குடியிருப்பவர்களுக்கு மனைக் கட்டுகள் நீண்ட காலக் குத்தகைக்கு விடப்படுகின்றன. அவர்கள் இதற்காகச் செலுத்தவேண்டிய தீர்வையெல்லாம் வருஷம் ஒன்றுக்கு அணு நாலுதான்!

ஒரு வீடுகட்ட ரூ. 150 ஆகும் என மதிப்பிடப்பட்டு, ரூ. 125 சர்க்காராலேயே வழங்கப் பெறுகிறது. பாக்கி ரூ. 25 மண் சுவர் கட்டவென்றும், இதைக் குடியிருப்பவர்களே அமைத்துக் கொள்வதென்றும் முடிவாகியிருக்கிறது.

மேற்கண்ட இருநூறு மனைகளிலும் ஹரிஜனங்களும் இதர ஜாதிக்காரர்களும் ஒன்ருகக் சேர்ந்து பக்கத்திலேயே வாழ்வார்கள். இந்த நோக்கத்தை முற்போக்குள்ள இந்த ஜில்லா வாசிகள் அனைவரும் வரவேற்றுப் போற்றுவது குறிப்பிடத்தக்கது.

**மற்றும் பலவித உதவிகள்**

இந்த ஜில்லாவில் தனிப்பட்டோருக்குச் சொந்தமான 87·41 ஏக்கர் விஸ்தாரமுள்ள நிலம் ஹரிஜனங்களின் குடியிருப்புக்காக வாங்கப்பட்டது. இதனால் பயன் அடைந்த ஹரிஜனக் குடும்பங்களின் எண்ணிக்கை 1,115 ஆகும்.

குடியிருப்புக்கென அனுமதிக்கப்பெற்ற சர்க்காரின் நிலங்களின் விஸ்தீரணம் 142·93 ஏக்கர்கள். இதனால் பயன் அடைந்த குடும்பத்தினர் 3,383.

தனிப்பட்ட மிராசுதார்களே இலவசமாகத் தமது சொந்த நிலத்தைத் தந்த வகையில்—நில விஸ்தீர்ணம் —36·41 ஏக்கர்கள். இதனால் பயன் அடைந்த குடும்பத்தினர் தொகை 838.

நிலங்களை விலைக்கு வாங்கிய வகையில் ஆன செலவு ரூ. 9,12,152–13–5.

ஹரிஜன க்ஷேமநல இலாகாவின் மேற்பார்வையில் ஹரிஜனங்கள் மட்டுமின்றி, கள்ளர், குறவர், லம்பாடி, ஏனாதிகள், இருளர்கள் போன்றவரின் முன்னேற்றப் பணிகளும் இணைக்கப்பட்டுள்ளன.

1951-ல் ராஜ்யத்தில் ஹரிஜனங்களின் வாழ்க்கைத்தர அபிவிருத்திக்கென ரூ. 64 லட்சமும், பிற்பட்ட வகுப்பினருக்கென ரூ. 7·5 லட்சமும், ஹரிஜன நிதியான ரூ. 1 கோடியிலிருந்து ரூ. 46,47,000-ம், ஆக மொத்தம் 1,10,47,000 ரூபாய் செலவு செய்யத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

ஹரிஜனங்கள், மலை ஜாதியினர் மற்றும் பல பிற்போக்கு வகுப்பினர் ஆகியவர்களுக்கு சர்க்கார் உத்தியோகங்களிலும் கல்வி நிலையங்களிலும் போதுமான இடங்கள் அளித்து, பொருளாதார கலாசார வாழ்வில் விரைவில் முன்னேறத்தக்கவாறு ஊக்கமளித்து வருகிறது.

# தொழில் அபிவிருத்தி

***விவசாயம், கைத்தொழில் அல்லது இதர துறைகளில் உழைக்கும் எல்லாத் தொழிலாளர்களுக்கும் வேலை, ஜீவனத்துக்கேற்ற ஊதியம், கண்ணிய வாழ்க்கைத் தரத்துக்கேற்ற வேலை நிபந்தனைகள், சமூக, கலாசார வசதிகள், ஓய்வின் பூரண நுகர்ச்சி முதலிய சௌகரியங்களை, தகுந்த சட்டம் அல்லது பொருளாதார அமைப்பின் மூலம் அளிக்க அரசாங்கம் முயலும்.***

—இந்திய அரசியல் அமைப்புச் ஷரத்து—43

நாட்டுநிலை திருந்த, மக்கள் வாழ்வு நலமுற்றிருக்க, மூலாதாரமான விவசாயம் மட்டுமின்றி, இதர தொழில்கள் அனைத்தும் வளம் பெற்றால்தான் பயனுண்டு.

நாட்டிலே தொழிலபிவிருத்தி ஒழுங்கான முறையில் ஏற்பட்டு, தொழிலாளர் நலனும் சரிவர கவனிக்கப்பட வேண்டும் என்பதே மக்கள் சர்க்காரின் கொள்கையாகும்.

இந்த அடிப்படையில்தான், கடந்த ஐந்து ஆண்டுகளாக தொழில் வளத்துக்கெனவும் தொழிலாளர் நலனுக்கெனவும், பல்வேறு திட்டங்களை மேற்கொண்டுள்ளனர்.

தொழில் துறையில் நம்நாடு முன்னேறி வருகிறது. நம் ராஜ்யமும் இதில் தேவையான அளவு முன்னேறி யுள்ளது. அதுவும் கடந்த ஐந்து ஆண்டுகளில் காணப் படும் அபிவிருத்தி நிலை பெருமையுடன் குறிப்பிடத்தக்க தாகும்.

தொழில் வளத்தை மட்டுமின்றி, தொழிலாளர் க்ஷேம நலனையும் கவனிக்கத் தனி இலாகா—தொழிலாளர் இலாகா —இருக்கிறது.

முதலில் நம் ராஜ்யத்தில் ஜவுளி ஆலைகள், சர்க்கரை, சிமிட்டி, வனஸ்பதி, ரசாயனத் தொழிற் சாலைகள், மோட்டார் தொழிற்சாலைகள் ஆகியனவும், இதர பெருந் தொழிற் சாலைகளும் கடந்த ஐந்து ஆண்டுகளில் எந்த அள வில், எவ்விதத்தில் முன்னேறி யுள்ளனவென்று பார்ப் போம்.

## புதிய ஆலைகள்

ஜவுளிப் பஞ்சம் ஏற்படாதிருக்க வேண்டுமானால், அதிக நூல் உற்பத்தியாகவேண்டும். இதற்கு அதிகக் கதிர்கள்



வேண்டும். எனவே சுமார் 352,000 கதிர்கள் மில்களிடையே வினியோகிக்கப் பட்டுள்ளன.

ராஜ்யத்தில் ஏற்கனவே சுமார் 80 மில்கள் உள்ளன. சுமார் 6 மில்கள் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அதாவது கோவையில் இரண்டு, மலையாளத்தில் இரண்டு, குண்டூரிலும், பெல்லாரியிலும் ஒவ்வொன்று. இவைகளுக்காகவும் 50,000 கதிர்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.

இதைத்தவிர சிமிட்டித் தொழில் அபிவிருத்தியிலும் சர்க்கார் தீவிர அக்கரை காட்டியுள்ளது.

யுத்தப் பிற்கால அபிவிருத்தித் திட்டப்படி சிமிட்டி உற்பத்தி அதிகரிப்புக்கு அனுமதி அளிக்கப்பட்டது. இதன் காரணமாக ஆண்டொன்றிற்கு 1,030,000 டன் உற்பத்தி செய்ய வேண்டுமென்று மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

1949–50-ல் இந்த ராஜ்யத்திலுள்ள சுமார் 5 சிமிட்டித் தொழிற்சாலைகளில், சுமார் 470,864 டன் உற்பத்தி செய்யப்பட்டது. ஆனால் 393,017 டன்களே செலவாயிற்று.

சுமார் $1\frac{1}{2}$ லக்ஷம் டன் உற்பத்தி செய்யக்கூடிய முறையில் இரு தொழிற்சாலைகள் ஆரம்பிக்க அனுமதிக்கப்பட்டுள்ளது; என்றாலும் பொருளாதார மந்தத்தினால் தாமதிக்கப்படுகிறது.

சர்க்கரைத் தொழில், சமீபகாலமாக ராஜ்யத்தில் அதிதுரிதத்தில் அபிவிருத்தி அடைந்துவரும் தொழிலாகும். தற்போதைக்கு சுமார் 13 சர்க்கரை மில்கள் இருக்கின்றன. இவை மூலம் உற்பத்தியாகும் சர்க்கரை அளவு சுமார் 52,000 டன்கள் ஆகும். இன்னும் 10 மில்கள் ஆரம்பிக்க அனுமதிக்கப்பட்டுள்ளது.

## புதிய தொழில்கள்

தற்போதுள்ள மில்களிலும் சில இன்னும் அதிக உற்பத்தி செய்வதற்கான முறையில் விஸ்தரிக்கப்படுகின்றன.

செயற்கைப் பெட்ரோல், யந்திர ஓட்டத்துக்கு அவசியமானதாகும். இதுகாறும் இத்துறையில் இம்மாகாணத்தில் எதுவும் நடைபெறவில்லை. தற்போது நான்கு கம்பெனிகளுக்கு செயற்கைப் பெட்ரோல் தயாரிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இந்தத் தயாரிப்பு மூலம் வருஷமொன்றுக்கு சுமார் $14\frac{1}{2}$ லக்ஷம் காலன் கிடைக்கலாம்.

வனஸ்பதி தயாரிப்பில் தற்போது ஈடுபட்டுள்ள இரு தொழிற்சாலைகளைத்தவிர, இன்னும் 10 தொழிற்சாலைகளுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

காகிதத்தொழிலும், மோட்டார், சைக்கிள் போன்ற சிறு யந்திரங்களை இணைக்கும் தொழிற்சாலைகளும், அலுமினியம், எஃகு, மின்சார சாலைகள் போன்ற தொழிற்சாலைகள் அனைத்தும் தேவையான அளவுக்கு சர்க்காரால் கவனிக்கப்பட்டு வருகின்றன.

## உதவி நிதி விநியோகம்

முக்கியமான பெருந் தொழில்களை ஏற்படுத்தி வளர்க்க, அரசாங்கம் நிதிக் கார்ப்பொரேஷன் ஒன்றை அமைத்துள்ளது. இதற்கென வரவு செலவுத் திட்டத்தில் மொத்தம் ஒரு கோடி ஒதுக்கியுள்ளது. தொழில் திறமையும், நிதி வசதியும் உள்ளவர்களின் துணை கொண்டு, அரசாங்கத்தின் மேற்பார்வையில் பல தொழில்கள் அபிவிருத்தி செய்யப்படும்.

சிறிய தொழிற்சாலைகளின் அபிவிருத்திக்கென்று தொழில் வளர்ச்சியை முன்னிட்டும் மக்கள் சர்க்காரே பொருளாதார உதவி செய்ய முன் வந்தனர்.

இதற்கெனவே அரசாங்க நிதி உதவி பெறும் தொழில்கள் சட்டம் நிறைவேற்றப்பட்டது. இந்த நிதி உதவி பெற்ற தொழில் ஸ்தாபனங்கள் பலவாகும்.

தஞ்சை ஜில்லாவில் முத்துப்பேட்டை கயிறு தயாரிப்புத் தொழிற்சாலையும், ஓடு தயாரிப்புத் தொழிற்சாலையும் இவ்வுதவியைப் பெற்றுள்ளன.

## வசதிகளை வழங்கல்

தொழிற்சாலை முதலாளி, தொழிலாளி, அரசாங்கம் ஆகிய முத்தரப்பினருக்கும் இம்மாகாணத்தில் உள்ள சுமுகமான உறவு நிலை மிகவும் போற்றத்தக்கதாகும்.

தொழிற்சாலைச் சட்டம், கடைச் சிப்பந்திகள் சட்டம் போன்ற பொது நலத்திற்கான தீவிர அம்சங்களை நிறைவேற்றியுள்ளனர். எட்டு மணி நேர வேலை, வாராந்திர விடுமுறை முதலிய சலுகைகளை எல்லா தொழிலாளரும் கட்டாயமாகப் பெறும் நோக்கத்துடன் இயற்றப்பட்ட

இச் சட்டங்கள், கண்டிப்பான வகையில் அமுல் நடத்தப்படுகின்றன.

தொழில் தகராறுகள் தீர்க்கும் சட்டம், முதலாளிகள் மட்டும் அல்லாமல், தொழிலாளரும் அந்தத் தொழில் ஸ்தாபனத்தில் ஒரு பங்காளி என்பதை எடுத்துக் காட்டுகிறது.

ராஜ்யத்தில் சர்க்காரின் அங்கீகாரம் பெற்றுள்ள தொழிலாளர் சங்கங்கள் சுமார் 551 ஆகும்.

தொழிலாளரின் வாழக்கைத்தர உயர்வுக்கான சம்பளம், கிராக்கிப்படி, குடிவசதி போன்ற பல அம்சங்களிலும் மக்கள் சர்க்கார் பலதரப்பட்ட பணிகளைப் பயனுறச் செய்திருக்கிறது.

இதேபோன்று வேலையில்லாத் திண்டாட்டம் என்ற மாபெரும் பிரச்னையைத் தீர்க்கவும், சர்க்கார் பெரும் சிரத்தையுடன் முயற்சித்துள்ளனர்.

## வேலைதேடிக் கொடுப்பது

படித்தவர்கள், தொழில் தெரிந்தவர்கள் ஆகிய அனைவரும் மத்திய சர்க்காரின் கீழுள்ள வேலைத்தேடிக் கொடுக்கும் ஸ்தாபனத்தின் உதவியை நாடினால் போதும். உடனே அவர்களுக்கு வேலை தேடும் வேலையில் இந்த ஸ்தாபனம் முனைந்து நின்று வெற்றி பெறுகிறது.

மத்திய சர்க்காரின் இந்த இலாகா, நம் ராஜ்யத்திலும் பணியாற்றுகிறது. பிராந்திய வேலைதேடிக்கொடுக்கும் ஸ்தாபனம் ஒன்று சென்னையிலும், மற்றும் 15 ஜில்லா வாரிக் கிளைகளும் உள்ளன.

இந்த ஸ்தாபனத்தின் மூலம் லட்சக்கணக்கானவர்களுக்கு வேலைமட்டும் அல்ல, தொழில் நுணுக்கப் பயிற்சியும் கிடைக்கிறது.

1947-ல் நமது தஞ்சை ஜில்லாவில் இந்த ஸ்தாபனத்தின் கிளை ஆரம்பிக்கப்பெற்றது. 1947-ல் 1,036 மாஜி ராணுவத்தினருக்கும் இதர பேர்களுக்கும் இந்த ஸ்தாபனம் வேலை தேடிக்கொடுத்தது. 1948-ல் 1,245 பேருக்கும்

1949-ல் சுமார் 700 பேருக்கும், 1950-ல் நவம்பர் மாதம் வரை சுமார் 800 பேர்களுக்கு மேலும் இந்த ஸ்தாபனத்தின் மூலம் வேலையில் சேர்ந்துள்ளனர்.

தஞ்சை ஜில்லாவில் உள்ள நாகப்பட்டினம் ஸ்டீல் ரோலிங் மில்ஸ் ஜில்லாவில் பெரிய தொழிற் சாலையாகும். இன்னும் கும்பகோணம் பாத்திரக் கடைகள், கூறைநாடு, துகிலி முதலிய விடங்களில் உள்ள புடவை, துணிமணி நெசவுத் தொழில்களும் குறிப்பிடத்தக்கவையாகும்.

தவிரவும் பிர்க்கா அபிவிருத்தித் திட்டத்துள் அடங்கிய பிராந்தியத்தில் உள்ள 79 கைத் தொழிலாளர்களுக்கு சர்க்கார் இலவசமாகக் கருவிகளைத் தந்துள்ளனர். பல்வேறு தொழில்களில் 19 பேர்களுக்கு இலவசமாகப் பயிற்சியும் அளிக்கப்பட்டது. கடந்த 1947 முதல் 1950 வரை இந்த ஜில்லாவில் 72 குழாய்க் கிணறுகள் தோண்டப்பட்டுள்ளன. இதனால் தண்ணீர் வசதி மட்டுமின்றி தொழில் நுணுக்க வளர்ச்சிக்கும் ஆக்கம் ஏற்பட்டுள்ளது.

# வாக்குரிமை

மக்கள் சபைக்கும், ஒவ்வொரு ராஜ்யத்தின் சட்ட சபைக்கும், வயது வந்தோர் வாக்குரிமை என்னும் அடிப்படையின் கீழ் தேர்தல் நடைபெறும்.

—இந்திய அரசியல் அமைப்பு
ஷரத்து—326

பெற்ற சுதந்திரத்தைப் பேணிக்காத்தல் இந்திய மக்களின் இப்போதைய முக்கியப் பொறுப்பாகும். உண்மையான ஜனநாயக முறை எந்த அளவுக்கு நம் நாட்டில் ஸ்தாபிக்கப்படுகிறதோ, அதற்குத் தகுந்தபடி சுதந்திரமும் நிலைக்கும்; சுய ஆட்சியும் நன்கு நடைபெறும். இந்த உயர்ந்த தத்துவங்களை மனதிற் கொண்டே, இந்திய ஜனத் தலைவர்கள் அரசியல் நிர்ணய சபை நிறுவி, சுதந்திர இந்திய ஜனநாயக அரசாங்க அமைப்புக்கான சட்டங்களை நிறைவேற்றினர்.

*1950-ம் வருஷம் ஜனவரிமீ 26-ந் தேதியன்று* இந்த அரசியல் சட்டம் நிறைவேற்றப்பட்டது. மக்களால் தேர்ந்தெடுக்கப்பெற்ற, மக்கள் பிரதிநிதிகளைக்கொண்ட, மக்கள் சர்க்கார் நிர்வாகம்தான், இந்த அரசியல் சாசனத்தின்

நோக்கமாகும். எனவே மக்களுக்குத்தான் இங்கு பூரண அதிகாரம் உண்டு.

ஜனநாயக அரசியல் அமைப்புக்குள்ள பொறுப்பு அதிக மானதாகும். இதே மாதிரி ஜனநாயக ஆட்சி விரும்பும் மக்களுடைய பொறுப்பும் அதிகமாகியுள்ளது. சுதந்திர மென்னும் குழந்தை, ஜனநாயகமென்னும் தொட்டிலில் தவழ்ந்து வளருவதற்கு, வாக்குரிமை சரியான சந்தர்ப்ப மளிக்கிறது.

## துணிச்சலான தீர்மானம்

நம் தேசத் தலைவர்கள் எடுத்தவுடனேயே வயது வந் தோர் எல்லோருக்கும் ஓட்டுரிமை கொடுக்கத் துணிந்தனர். வயது வந்தோர் ஓட்டுரிமை என்பது தேச ஆட்சியில் எவ்வளவு மகத்தான சக்தி வாய்ந்த தென்பதையும், அதனால் ஏற்படும் நன்மை தீமைகளையும் நம் தலை வர்கள் தெரிந்து கொள்ளாமலில்லை. ஆனால் ஜன நாயக சர்க்காரென்றால், அதில் மக்களில் பெரும்பாலான வர்களின் உண்மைப் பிரதிநிதிகள் நிர்வாகம் நடத்த வேண்டும். இந்த ஒரே நோக்கத்தில்தான், நம் தலைவர்கள் மிகவும் தைரியத்துடன் இம் முறையை அனுஷ்டிக்க முன் வந்திருக்கிறார்கள்.

ஜனநாயக மென்பது மக்களின் சர்க்கார். மக்கள் எல்லோரும் சேர்ந்து ஆட்சி புரியவேண்டும். அப்படிச் செய்வது நடைமுறையில் சாத்தியமானதல்ல. எனவே, மக்கள் தங்களுடைய பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்து அவர் களின்மூலம் ஆட்சி நடத்துவதென்ற சம்பிரதாயம் ஏற் படுத்தப்பட்டுள்ளது. சட்டசபை அங்கத்தினர்களைத் மக்கள் தேர்ந்தெடுத்து விடுகிறார்கள். அந்தச் சட்டசபை அங்கத்தினர்களில் பெரும்பாலானவர்களைக் கொண்ட அரசியல் கட்சியினர், தங்களுடைய தலைவரைத் தேர்ந் தெடுப்பர். அத் தலைவர் ராஜயத்தின் முதல் மந்திரியாக நியமிக்கப்படுவார். ராஜ்ய நிர்வாகத்தில் தமக்கு உதவி புரியச் சிலரை தம் சக மந்திரிகளாய் நியமிக்கவேண்டு

மென்று, முதல் மந்திரி, ராஜ்ய கவர்னருக்கு சிபார்சு செய்வார். இம்மாதிரி மந்திரி சபையமைக்கப்படும். மந்திரிகள் சட்ட சபைக்கும், சட்டசபை மக்களுக்கும் பொறுப்பாவர். இந்த பார்லிமென்டரி முறைகள் பூராவும், இந்திய அரசியல் சட்டத்தில் விவரமாய் நிர்ணயிக்கப்பட்டுள்ளன.

## வாக்காளர் தொகை அதிரித்தல்

இந்த நியதி மூலம், 5 வருஷத்திற்கு ஒரு தடவை பொதுத் தேர்தல் இன்றியமையாததாகிறது. தேர்தலில் வாக்காளராவதற்குச் சில தகுதிகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன. அப்படிப்பட்ட யோகியதாம்ச நிபந்தனைகள் பிரகாரம், 1920-ம் வருஷம் ஜனத்தொகையில் 2 அல்லது 3 சத விகிதமும் 1937-ல் 14 சதவிகிதமும் வாக்காளரானுர்கள். இப்பொழுது வயது வந்தோர் ஓட்டுரிமை வழங்கப்பட்டிருக்கிறது. அதாவது, ராஜ்ய மக்களில் 21 வயது பூர்த்தியானவர்கள் எல்லோரும் வாக்காளர்கள்தான். இந்தியப் பிரஜையாக இருக்கவேண்டியதும், 21 வயது பூர்த்தியாக வேண்டுமென்பதுந்தான் வாக்காளராவதற்கு நிர்ணயிக்கப்பட்டிருக்கும் முக்கிய யோக்கியதாம்சங்கள். இவற்றின்படி ஜனத் தொகையில் ஏறக்குறைய பாதிப்பேர் வாக்காளராகிறுர்கள்.

சென்னை ராஜ்யத்தின் ஜனத்தொகை 1951-ம் வருஷத்து ஜன சங்கியைக் கணக்குப்படி 56,952,332. அதில் ஆண்கள் 28,413,661. பெண்கள் 28,538,671. மொத்த ஜனத்தொகையில் ஆண்கள் 49·9 சத விகிதமும், பெண்கள் 50·1 சத விகிதமும் இருக்கிறுர்கள். 1941-ம் வருஷத்து கணக்குப்படி ராஜ்யத்தின் ஜனத்தொகை 49,847,508. எனவே சென்ற பத்து வருஷங்களில் சென்னை ராஜ்யத்தின் ஜனத்தொகை 7,104,824 அதிகரித்திருக்கிறது. 1941-ல் ஒரு சதுர மைலுக்கு 390 பேர்கள் வசித்தார்கள். 1951-ல் 446 பேர் வசிக்கிறுர்கள்.

1951-ம் வருஷம் பிப்ரவரி மாதம் 28 நாட்களிலும், சர்க்காரால் நியமிக்கப்பட்ட ஜன சங்கியைக் கணக்கெடுப்

பவர்கள் வேலை செய்தார்கள். இதற்கு முன்னால் நடை பெற்ற ஜன சங்கியைக் கணக்கெடுப்பு மாதிரியில்லாமல், இந்தக் கணக்கெடுப்பில் சர்க்காரால் அதிக கவனம் செலுத்தப்பட்டு, அதிகப்படியான புள்ளி விவரங்களும் தயாரிக்கப்பட்டிருக்கின்றன.

## பிரதிநிதிகள் எண்ணிக்கை

தற்போதுள்ள வாக்காளர் ஜாபிதாக்களின் பிரகாரம் சென்னை ராஜ்யத்தில் 271 லட்சம் ஓட்டர்கள் இருக்கிறார்கள். இவர்கள் நம் ராஜ்ய சட்டசபைக்கு 375 அங்கத்தினர்களையும், மத்திய சட்டசபையான டெல்லி பார்லிமென்டில் மக்கள் சபைக்கு நம் ராஜ்யப் பிரதிநிதிகளாய் 75 அங்கத்தினர்களையும் தேர்ந்தெடுக்க வேண்டும்.

சென்னை மேல் சபையில் மொத்தம் 72 அங்கத்தினர்கள் இருப்பார்கள். அவர்களில் ஸ்தல ஸ்தாபனங்களின் மூலம் 24 பேரும், பட்டதாரிகள் தொகுதியிலிருந்து 6 பேரும், ஆசிரியர் தொகுதியிலிருந்து 6 பேரும், தேர்ந்தெடுக்கப்படுவர். சென்னை ராஜ்ய கீழ்ச் சட்டசபை அங்கத்தினர்கள் எல்லோரும் சேர்ந்து, தனியாக 24 பேரை சென்னை மேல் சபைக்குத் தேர்ந்தெடுப்பார்கள். இவர்களைத் தவிர, மேன்மை தங்கிய கவர்னர் அவர்கள் 12 அங்கத்தினர்களை நியமனம் செய்வார்.

டெல்லி பார்லிமென்டில் மேல் சபையில் மொத்தம் 205 அங்கத்தினர்கள் இருப்பர். ' கவுன்ஸில் ஆப் ஸ்டேட் ' எனப்படும் அந்தச் சபையில், சென்னை ராஜ்யத்தின் சார்பாக 27 பேர் அங்கம் வகிப்பார்கள்.

## தவறான முறைகளைத் தவிர்க்க

பொதுவாக, தேர்தல் காலங்களில், இறந்தவர்கள் வந்து ஓட்டுப் போடுவதுதான் மிகவும் விசித்திரமானது. அபேட்சகர்களின் ஆட்கள் இதற்கென்று விசேஷ கவனம் செலுத்தி, ஜாபிதாவிலுள்ள பெயர்களில் இறந்துபோனவர்களுக்குப் பதில் நபர்களைத் தயார் செய்யக்கூடும். அவர்கள்

வந்து இறந்து போனவர்கள் பெயர்களைத் தம்மதென்று சொல்லி ஓட்டுபோட்டு விட முடியும். இந்தக் கெடுதலைத் தடுப்பதற்கு, வரப்போகும் தேர்தலில் ஒரு அடையாள மிடும் முறையைக் கையாளவேண்டுமென்று யோசனை கூறப்பட்டிருக்கிறது. அதாவது, ஒருவர் ஓட்டுப் போடவரும்பொழுது அவருடைய விரலில் ஒரு வித மை பூசப்படும். அந்த மை குறைந்தது ஒரு வாரம் அழியாமலிருக்கும். எனவே, எவரும் தப்பான பெயரில் மீண்டும் ஓட்டுப் போடமுடியாது.

## அகில இந்திய ரீதியில் பரிசிலனை

சென்னை ராஜ்யத்தில் தேர்தல் தொகுதிகள் பிரிப்பதில் ஜில்லா எல்லைகளைமட்டும் கூடுமானவரை அப்படியே வைத்துக்கொள்ள வேண்டுமென்றும், முன்னேற்ற மில்லாத வகுப்பினர்களுக்கு ஸ்தானம் ஒதுக்கப்படும் தொகுதிகள் மட்டும் இரட்டை அங்கத்தினர் தொகுதி களாகவும், மற்றைய தொகுதிகள் ஒற்றை அங்கத்தினர் தொகுதிகளாகவேயிருக்கவேண்டுமென்றும், சென்னை சர்க்கார் சிபார்சு செய்தனர். அவ் விஷயம் சென்னை அசம்பிளி யிலும், கவுன்சிலிலும் நன்கு விவாதிக்கப்பட்டு, சர்க்காரின் சிபார்சு அங்கீகரிக்கப்பட்டது.

இதுபற்றிய எல்லா விஷயங்களையும் அகில இந்திய ரீதியில் சரிவர ஆராய்ந்து, இந்தத் தேர்தலை நடத்த, பிரத்தி யேகமாய் ஒரு தேர்தல் கமிஷனரை மத்திய சர்க்கார் நியமித்திருக்கிறார்கள். அவர் தேர்தலின் அம்சங்கள் ஒவ்வொன்றையும் தாமே கவனித்தும் தக்க ஏற்பாடுகள் செய்து வருகிறார். தேர்தல் தொகுதிகள் நிர்ணயித்தல், தேர்தல் நடத்துவதற்கான சாமான்களைத் தயாரித்தல், முதலியன நடைபெற்று வருகின்றன.

சென்னை ராஜ்யத்தின் வாக்காளர் ஜாப்தா தயாரிப் பதற்கு 29 லட்ச ரூபாய் செலவாயிருக்கிறது. காகித விலை மட்டும் 6 லட்சம். தேர்தல் நடத்த 3 லட்சம் 'பாலட்' பெட்டிகளுக்குமேல் வேண்டியிருக்கின்றன. அவைகள்

எஃகு பெட்டிகளாகவே யிருக்கவேண்டுமென்று தீர் மானிக்கப்பட்டிருக்கிறது. சராசரி ஒரு பெட்டிக்கு 6 ரூபாய் விலையாகிறது. எனவே அந்த வகைக்கு குறைந்தது 20 லட்சம் செலவாகும். இன்னும் தேர்தல் ஸ்தலங்கள், அதற்கு வேண்டிய இதர சாமான்கள், காவல் கட்டுப்பாடுக ளெல்லாம் இருக்கின்றன.

### அஸ்திவார மிடுவதிலும் கூட்டு முயற்சி

இதற்கிடையில், அரசியல் கட்சியினர் பலர் தங்கள கருத்துக்களை அறிவிக்கவும் வாய்ப்பளிக்கப்பட்டது. அர சாங்கம் இதற்கென பல்வேறு அரசியல் கட்சியினரை நேரில் அழைத்து விரிவான ஆராய்ச்சி நடத்தியது. நம் ராஜ்யத்திலுள்ள அரசியல் கட்சியினர் பலரும் அதில் கலந்துகொண்டது பாராட்டத்தக்கதாகும். ஜனநாயக வளர்ச்சிக்கு இத்தகைய காரியங்கள் எவ்வளவு அவசிய மானவை என்பதைப்பற்றி அதிகம் கூற அவசியமில்லை.

### பொதுஜனத் தொடர்பு

ஜனநாயகத் தன்மையில் வளரும் அரசாங்கம், அவ்வப் போது தன்னுடைய அலுவல்கள் சம்பந்தமாகவும், பொது நலவிஷயங்கள் சம்பந்தமாகவும், பொதுமக்களுடன் உறவு பூண்டு, அவர்களுக்குத் தேவையான விவரங்களை அறிவிக்க வேண்டியது அவசியம். இத் துறையில் செய்தி இலாகா தன்னால் இயன்ற அளவு தொண்டாற்றி வந்துள்ளது.

### ஜில்லா விவரங்கள்

| | |
|---|---|
| தஞ்சை ஜில்லாவின் ஜனத்தொகை ... | 2979754 |
| தஞ்சை ஜில்லாவின் ஓட்டர்கள் தொகை. | 1397294 |
| இந்த ஜில்லாவுக்கான சட்டசபைத் தொகுதி தொகுதிகள் ... ... ... | 14 |
| மத்திய மக்கள் சபைக்கு ஜில்லாப் பிரதி நிதிகள் ... ... ... ... | 4 |

# அமைதியும் அபிவிருத்தியும்

> தேசிய வாழ்க்கை சம்பந்தமான எல்லா ஸ்தாபனங்களிலும், சமூக, பொருளாதார, அரசியல், நீதி முறை பொருந்தி விளங்கு தற்குரிய ஒரு சமுதாயத்தை ஏற்படுத்தி, அதைத் திறமையுடன் பாதுகாக்கும் வகை யில் மக்களின் நலத்தைப் பேணி வளர்க்க அரசாங்கம் முயற்சி செய்யும்.
>
> —இந்திய அரசியல் அமைப்பு ஷரத்து—38

மக்கள் சர்க்கார் நிர்வாகத்துக்கு மிகவும் உதவியாகவும், மக்களுடைய ஜீவனம் நிர்ப்பயமாகவும் பாதுகாப்பாகவும் இருக்கவேண்டிய சாதனம் போலீஸ் இலாகாவாகும். குறிப்பாக சமீபத்தில் இந்த ஜில்லாவில் போலீஸாரின் சேவை மிகப் போற்றக்கூடியது.

மிராசுதாரர்களுக்கும், குடியானவர்களுக்கும் இடையே இருந்த நல்லுறவை ஒரு சில சுய நலமிகள் கலைத்து, பகைமை முற்றிடச் செய்ததால், தஞ்சை ஜில்லா முழுதும் குழம்பித் திகைத்த விஷயம் அனேகருக்குத் தெரிந்திருக்கும்.

இதேமாதிரி ஆந்திர ஜில்லாக்களிலும், தெற்குப்பிராந்திய ஜில்லாக்களிலும் மக்களிடையே சச்சரவு மனப்

பான்மையைக் கிளப்பி அராஜகநிலை ஏற்படுத்தி, நாடு பூராவும் நாசவேலைகளைச் செய்வதில் ஒரு சில சுய நலமிகள் அக்கரை கொண்டனர்.

முன்னெல்லாம் போலீஸார் என்றால் யாரோ எவரோ என்று பயந்தொதுங்கிய மக்கள், இன்று அவர்களுடன் தோளோடு தோள் நின்று ஒழுங்கை நிலைநாட்ட மன முவந்து முன்வருவது குறிப்பிடத்தக்கது.

முன்னர் போலீஸார் அன்னிய ஏகாதிபத்தியத்தின் கருவிகள். இன்றோ பொதுஜன சர்க்காரின் ஊழியர்கள்; மக்கள் நலப் பாதுகாப்பாளர்கள்.

இம்மாதிரி போலீஸாரைப் பற்றி மக்கள் உயர்வு மனப்பான்மை கொள்ளும்படியான ரீதியில், போலீஸார் நடந்து கொள்வதே ஒரு விசேஷமாகும்.

### நாசவேலையை நசுக்க

நாசவேலையில் ஈடுபட்டு நாட்டிலே குழப்பத்தையும், விபரீதங்களையும் உண்டுபண்ணுவதில் ஊக்கமாயிருந் தோரை அடக்கிச் சீர்ப்படுத்த, போலீஸ் படை நன்கு திருத்தப்பெற்று விரிவாக்கவும் திட்டமிடப்பட்டது. கொள்ளைக்காரர்கள், திருடர்கள் போன்ற சமூக விரோதிகளை கிராம வாசிகளே பிடித்துப் போலீஸார் வசம் ஒப்படைத்து நீதியையும் நிர்வாகத்தையும் நிலை நாட்ட உதவி புரிந்தது குறிப்பிடத்தக்கது. குறைந்த காலத்துக்குள் இந்தப் போலீஸ் படை நாச சக்திகளை அடக்கிவிட்டது.

மதுவிலக்கு மக்கள் வாழ்வு நலமுற வந்ததொரு வரப் பிரசாதமாகும். ஆனால், கிடைத்த பொக்கிஷத்தை ஜாக் கிரதையாகப் பாதுகாக்க வேண்டும். இதற்கும் போலீ ஸாரின் முயற்சியும் ஆதரவும் இல்லையேல் மதுவிலக்கு வெற்றிகரமாக நடைபெறுவது அசாத்தியமாகிவிடும். இந்தத் துறையிலும் போலீஸார் அக்கரையும் ஆர்வமும் கொண்டு பணியாற்றும் ரீதியில், மக்கள் சர்க்கார் வகை செய்துள்ளனர். மதுவிலக்குச் சட்டத்தை அமல் நடத்தும்

பொறுப்பு சிறிது சிறிதாக இவர்களிடம் ஒப்படைக்கப்பட்டு வருகிறது.

போலீஸ் படையினருக்குத் துணையாக பாதுகாப்புப் படையினர் என்போர் சேர்த்துக்கொள்ளப்பட்டனர். பொது மக்களிலே சேவை மனப்பான்மையுள்ளவர்கள் இதில் சேர்ந்து, போலீஸ் பயிற்சி பெறலாம். அமைதி காப்பதிலும் ஒழுங்கை நிலைநாட்டுவதிலும் இதனால் விசேஷ நன்மை ஏற்பட்டது.

## சிறைச்சாலை சீர்திருத்தம்

சிறையிலிருக்கும் கைதிகளுக்குப் பல வசதிகளை சர்க்கார் அளித்துள்ளனர். மிருகங்களைவிடக் கேவலமாக நடத்தப்பட்டு வந்தனர் 'ஸி' வகுப்பைச் சேர்ந்த கைதிகள். ஜனநாயக சர்க்கார் அந்த 'ஸி' வகுப்பையே அடியோடு நீக்கிவிட்டனர். அதோடன்றி, கைதிகள் பெறும் சலுகைகளையும் அதிகரித்துள்ளனர். பொதுஜன அமைதிக்குப் பங்கம் ஏற்படுவதைத் தடுப்பதற்காக ஒரு சிலரைப் பாதுகாப்புக் கைதிகளாக வைத்துள்ளனர். ஆனால் இவர்களுக்குச் சகல விதமான வசதிகளையும் சர்க்கார் செய்து தருகின்றனர்.

தவிர, 1947-ம் ஆண்டு 15-ந் தேதியன்று நம் நாடு சுதந்திரம் பெற்ற பேரானந்த வைபவத்தை முன்னிட்டு, அரசியல் கைதிகள் உள்பட சுமார் 4,000 கைதிகளுக்கு அரசாங்கம் விடுதலையளித்தனர். மற்றும் பல கைதிகளுக்குச் சிறை தண்டனைக்குரிய காலம் குறைக்கப்பட்டது.

உணவு உள்பட பல்வேறு கட்டுப்பாடு உத்திரவுகளை மீறி நடப்போரையும், லஞ்சம் வாங்குதல், கொடுத்தல் ஆகிய ஒழுங்கீனமான காரியங்களில் ஈடுபடுவோரையும் கடுமையாக அரசாங்கம் தண்டித்து வருகின்றது. இது பற்றிய விவரங்களை பத்திரிகைகள் மூலம் அறிவிக்கப்படுகின்றன.

கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் கைத்தறித்தொழில் அபிவிருத்தி அடைய வழி வகுத்தனர். கூட்டுறவு அதாவது நம்மிடையே ஐக்கியமிருப்பின் மக்களும் சர்க்காரும்

ஒன்றுபட்டு உழைப்பின் சாதிக்க முடியாதது எதுவுமே யில்லை. உதாரணமாக கும்பகோணத்தில் கைத்தறி நெசவுத் தொழிலாளர் சங்கங்களின் மூலம் அடைந்துள்ள உற்பத்தி அதிகரிப்பு இருமடங்காகும். எனினும் இத் துறையில் இன்னும் அதிக அபிவிருத்தி ஏற்பட்டால் தான் துணிப் பஞ்சம் நீங்கும் என்பதை அறிந்துள்ள சர்க்கார், இதற்கெனப் பெருமுயற்சி எடுத்து வருகின்றனர்.

## தேசிய மயமாகும் தொழில்கள்

மக்கள் சர்க்கார் இம்மாதிரி பல துறைகளிலும் கடந்த ஐந்து ஆண்டுகளில் அபிவிருத்தித் திட்டங்களை நிறை வேற்றி யிருப்பதைப் போல, இன்னும் இருதுறைகளில், அதாவது பஸ் போக்குவரத்தை தேசிய மயமாக்கும் நோக்கத்திலும், மின்சார நிலையங்களைத் தேசிய மயமாக்கு வதிலும் மிக அக்கரை காட்டியுள்ளனர். பெரிய அளவு அபிவிருத்தித் திட்டங்கள் நிறைவேற இவையே சாதகமான வையாகும்.

தற்போது சென்னை நகரில் மட்டும் பஸ் போக்கு வரத்து சர்க்கார் நிர்வாகத்தில் நடைபெறுகிறது. இது, மக்களுடைய சாதாரண வாழ்க்கையில்கூட சவுகரிய மும், திருப்தியும் நிலவியிருக்கவேண்டும் என்ற சர்க்கார் கொள்கையின் சின்னமாகும். இதே மாதிரி, ராஜ்யம் பூராவும் உள்ள நிலையங்களும் தேசிய மயமானவுடன், ஏற்படும் பலனும் பன்மடங்காகும்.

## உலகம் பாராட்டும் பரிசோதனை

மக்கள் அரசாங்கம் செய்து முடித்த காரியங்களில் மகத் தான சாதனை மது விலக்கு. எளிய மக்கள் 'குடி' என்னும் கொடிய பழக்கத்தின் இரும்புப் பிடியிலே இறுகித் தவித்தபோது, அவர்களைக் கைதூக்கிவிட்டு, மாக்களை மக்களாக வாழும்படி செய்த பணி இது. அரசாங்கம் மது விலக்கால் தனது வருவாயில் பெரும் பகுதியை இழந்தது. போருக்குப் பின் வாழ்க்கை பலவழியிலும் பாழ்பட்டுக்

கிடந்ததை சீர்திருத்த, நிறைய வருமானம் உடனேயே அரசாங்கத்துக்கு வேண்டியிருந்தது.

நெருக்கடி நிறைந்த அந்தக் காலத்தும், நிலேதடுமாருது உறுதியுடன் மதுவிலக்கை நிறைவேற்றிவிட்டது நமது அரசாங்கம். வருவாயில் பெரும் பகுதியை இழந்துவிட்டால் அரசாங்கம் நடப்பதே ஆபத்தாய்விடும் என்று பயந்தனர் பலர். உள்ளும் புறமும் எதிர்ப்பு இருந்தது. வீண் முயற்சியில் வருவாயை இழந்துவிடுகிருேம் என்றனர் பலர்.

எதுவாயிருந்தாலும், குடியைக் கெடுக்கும் குடியைக் கொண்டு அரசாங்கம் பணம் தேடுவது கேவலம். மக்களின் வாழ்க்கையையே அவர்களிடமிருந்து திருடிவிடுகிறது குடி. திருட்டுத் தொழிலே அனுமதித்து, அதற்கு வரிபோட்டு அரசாங்கம் வருவாய் தேடிக் கொள்வதா? அதுவும் புத்தர் பிறந்த நம் நாட்டில், காந்தி பிறந்த நம் நாட்டில், இது வரை இருந்து வந்ததே நமக்கு அவகேடு. நமது அரசாங்கமே மற்ற அரசாங்கங்களுக்கு வழிகாட்டியாக நின்று, முதன்முதலில் பூரண மதுவிலக்கை நிறைவேற்றி வைத்தது. இந்த மாபெரும் பரிசோதனே வெற்றி பெற்றுள்ளதைக் கண்டு, உலக நாடுகள் பலவும் சென்னே ராஜ்யத்தைப் பாராட்டுகின்றன.

## பொழுது போக்கு வசதிகள்

குடியின் மோகத்தை இலேசில் அகற்ற முடியாதல்லவா? அதற்காக கிராமங்களில் சாயங்கால நேரங்களில் பஜனே ஏற்படுத்தி, கூட்டங்கள் நடத்தி, படக் காட்சிகளேக் காண்பித்து, குடியில் பழக்கப்பட்டவர்களே அதை மறக்கும்படி செய்தது அரசாங்கம்.

மருந்துக்கும், வர்ணந் தீட்டுதல் முதலிய கைத்தொழில்களுக்கும், பழக்கமாக வந்த வழிபாட்டுப் பிரார்த்தனேகளுக்கும் தக்க இடத்தே எல்லாம் மது முதலிய பொருள்களே விற்க, உபயோகிக்க அனுமதி தரப்பட்டுள்ளது. அனுமதி வைத்திருப்பவர்கள் சட்ட விதிகளின்படி சரிவர நடந்து

கொள்கிருர்களா என்பதை அடிக்கடி சோதனையிட்டுக் கண்காணிக்கப்படுகிறது.

தஞ்சையைப் பொறுத்த வரையில், மதுவிலக்குக் குற்றச்சாட்டுகள் மிகக் குறைந்த அளவிலேயே இருக்கின்றன. குற்றங்களை அகற்ற முயற்சி எடுக்க வேண்டுமேயொழிய மதுவிலக்கையே எடுத்துவிடுவது சரியான வழியல்ல. அப்படியென்ருல், திருட்டுக் குற்றங்கள் அதிகரித்துவிட்டால், திருடுவது நீதிக்குப் புறம்பல்ல என்று தீர்மானித்துச் சட்டம் இயற்றிவிட வேண்டியது தான்!

குடித்துப் பழகியவர்கள் இலேசில் அதை மறந்துவிட முடியாது. இதற்காக குடி தடுப்புப் படையினரும், கிராம சங்கங்களும் விளையாட்டுப் பந்தயங்கள், நாடகம், சினிமா, ரேடியோ முதலிய வசதிகளையும் அளித்து வருகின்றனர்.

## மாஜி கள்ளிறக்கும் தொழிலாளர் நிலை

இதிலே ஒரு முக்கியமான விஷயம் 'மரமேறுந் தொழிலாளரின்' பிரச்னையாகும். இவர்களுடைய ஜீவனம் இனி எப்படி என்ற பிரச்னை பெரிதாக இருந்தது. இந்தப் பெரிய பிரச்னையையும் மக்கள் சர்க்கார் சமாளித்து, வெற்றி காணத் தயங்கவில்லை.

தஞ்சை ஜில்லாவில் சுமார் 11,600 பேர்கள் (மரமேறுவோர்) வேலையிழந்தனர். இவர்களின் ஜீவனத்துக்கான வேறு வேலைகள் கொடுப்பதற்கெனப் பல துறைகளில் கூட்டுறவு சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டன.

இந்தக் கூட்டுறவுச் சங்கங்கள்மூலம் குடிசைத்தொழில்களை அமைத்து வேலையிழந்த தொழிலாளர்களுக்குப் பயிற்சியும் தொழிலும் கொடுக்க வகை செய்யப்பெற்றது. பனைவெல்லத் தயாரிப்புக் கூட்டுறவு சங்கம், பால் சப்ளை சங்கம் போன்ற பலவும் இத்துறையில் ஏற்பட்டன.

பனைவெல்லத் தயாரிப்புக் கூட்டுறவு சங்கங்கள் தற்போது சுமார் 25-க்கு மேல் பதிவு செய்யப்பட்டுள்ளன. இவற்றில் சுமார் 501 அங்கத்தினர்கள் (291 மாஜி மர

மேறுந் தொழிலாளர்களும், 210 இதரர்களும்) இருக்கிறார்கள். இதன் மூலம் உற்பத்தியான வெல்லம் சுமார் 4,347 மணங்கு; விலை மதிப்பு சுமார் 28,326 ரூபாய் ஆகும்.

விவசாயப் பருவத்தில் மரமேறிகள் அந்தத் தொழிலுக்குப்போய் விடுகிறார்கள். மற்றக் காலத்தில்தான் இந்தத் துறையில் ஈடுபடுகிறார்கள்.

சுமார் 17 பால் சப்ளை சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டு, சுமார் 1,465 பேர்கள் இதில் அங்கத்தினர்களாக இருக்கிறார்கள்.

மாஜி மரமேறுந் தொழிலாளர் குடியேற்றத்துக்கென பல ஏக்கர்கள் அனுமதிக்கப்பெற்றன. இதற்கெனவும் சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன. பூதலூரில் இவர்களுக்கென வீடுகள் கட்டும் திட்டமும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கும்பகோணம் சர்க்கிளில் மட்டும் பனைவெல்ல உற்பத்தி பெரிதும் முன்னேறியுள்ளது. 1947–48-ல் 11 சங்கங்கள் மூலம் 15,004 ரூபாய் பெறும்படியான வெல்லம் தயாரிக்கப்பெற்றது. 1948–49-ல் 30 சங்கங்கள் 44,345 ரூபாயும், 1949–50-ல் 43 சங்கங்கள் 94,169 ரூபாயும் பெறும்படியான வெல்லம் தயாரிக்கப்பட்டது.

எனவே, இதர ஜில்லாக்களில் மதுவிலக்கு வெற்றிகரமாகவும், மரமேறுந் தொழிலாளர் பிரச்னையைத் தீர்க்கவும் எவ்வளவு தீவிரமாக முயற்சி செய்யப்படுகிறதோ, அவ்வளவுதூரம் இந்த ஜில்லாவிலும் செய்யப்படுகிறது.

### மாதர் நலம்

மதுவிலக்கு கிராம வாசிகளுக்கு, குறிப்பாக கிராமப் பெண்களுக்கு, பெரிய நன்மையும் மகிழ்ச்சியும் அளிக்கும் ஒரு சாதனையாகும்.

ஆனால் கிராமப் பெண்மணிகள் என்றதும் நமக்கு அவர்களுடைய அவல நிலைமை நினைவுக்கு வருகிறது. அவர்களுக்கு ஒரு சுகமும் இல்லை. படிப்பு இல்லை. பொது அறிவுபெற வசதியில்லை. ஒரு சிறு நோய் என்றால் அதைக்

கவனிக்கவும் தெரியாது. இப்படியாக அவர்கள் எத்தனையோ கொடுமைகளுக்குள்ளாகித் தவிப்பதைக் கண்ட மக்கள் சர்க்கார், அவர்கள் முன்னேற்றத்துக்கென ஒரு தனி இலாகாவையே ஏற்படுத்தினர்.

இந்த இலாகாவின் குறிக்கோள் மாதர்களிடம் இயற்கையாகவே உள்ள நிர்மாண சக்தியைத் தக்கவாறு பயன் படுத்த வேண்டும் என்பதே. இதனுல் கிராம மாதர் தங்கள் குடும்பத்திற்கும், பொதுவாக நாட்டிற்கும் அளவிறந்த நன்மை செய்யலாம் என்பதைக் கடந்த கால அனுபவம் உணர்த்தி விட்டது. சமூக சேவையில் பயிற்சிதரல், அனுதைப் பெண்களை ஆதரித்தல், சிறு கைத்தொழில் பயிற்சிதரல், எழுதப் படிக்கக் கற்றுக்கொடுத்தல் ஆகிய பல்வேறு அம்சங்களை குறிக்கோள்களாகக்கொண்டு, இவ்விலாகா பணியாற்றி வருகிறது.



இந்த இலாகாவின் வேலைகள் பெரும்பாலும் கிராமாந்திரங்களில் நடைபெறவேண்டி யிருப்பதால், ஜில்லாவாரியாக இதன் கிளைகள் உள்ளன.

தஞ்சை ஜில்லாவில் தஞ்சை நகரம், நாகப்பட்டினம், அம்மாப்பேட்டை, சாலியமங்கலம், ஆகிய நான்கு ஊர்களில் இதன் கிளைகள் இருந்து வருகின்றன.

தஞ்சைக் கிளை ஆபீஸில், மாதிரி நிலையம் ஒன்றும், தெற்குத் தெரு, கீழ்வாசல் சேரி, மானம்பூச்சாவடி சேரி, பூக்காரத் தெரு, ராப்தாபாளையம் சேரி ஆகியவற்றில் 'கிளைகளும்' உள்ளன.


நாகூர் ஆண்டவர் பள்ளிவாசல்
சிற்பம்—கும்பகோணம் ராமஸ்வாமிகோயில்
கலைவாழும் தஞ்சை
தஞ்சை அரண்மனையில் சித்திரம்
சரஸ்வதி மஹாலுக்குச் செல்லும் வழி
அறிவாலயம்:
நம்முன்னோரின் அறிவுச் செல்வம் – ஓலைச் சுவடிகள்


நவீன சிகிச்சை
ஆஸ்பத்திரி வசதிகள் விஸ்தரிப்பு
ரத்ததானம்
கூட்டுறவு முயற்சி
தொழில் பள்ளியில்:
புதிய வீடுகள்
பயனுள்ள பயிற்சி

வருஷம் ஒன்றுக்கு இந்தக் கிளையில் 130 பெண்மணிகள் வந்து பயிற்சி பெறுகிறார்கள். சுமார் 86 பேர்கள் எழுதப் படிக்கக் கற்றுக்கொண்டிருக்கிறார்கள். தோல் வேலையும், பொம்மை செய்தலும் பலரை வசீகரித்துள்ளன.

## பயனுள்ள பயிற்சி

பெண்மணிகளுக்கு எழுதப் படிக்கச் சொல்லித்தர பயிற்சி கொடுக்கவேண்டுமல்லவா? இதற்கென்றும், எட்டாம் வகுப்புடன் நிறுத்திவிட்ட பெண்மணிகள் மேலே படிப்பதற்கெனவும், இந்த இலாகா சார்பில் 'தஞ்சையில் கிராமப் பெண்மணிகள் கல்லூரி' அமைக்கப்பட்டுள்ளது. இந்தப் பயிற்சி முடிய இரண்டு வருஷங்களேயாகும்.

பொது அறிவுப் பாடங்களும் சுகாதார ஞானமும், உணவு போஷாக்கு சக்தி அறிவும், வீட்டு வேலைகளும், தாய்மை, குழந்தை வைத்தியம் ஆகியனவும் நடைமுறை பாட திட்டங்களாகும். ஹிந்தியும், சங்கீதமும் சமீப காலத்தில் இணைக்கப்பட்டுள்ளன. தற்போது இந்தக் கல்லூரியில் 18 பெண்மணிகள் கல்விகற்று வருகின்றனர். நாகப்பட்டினம் கிளையில் 3 நிலையங்கள் உள்ளன. ஆபீஸிலேயே உள்ள மாதிரி நிலையம், தோட்டித் தெருவில், நாகூரில், செம்படவப் பெண்களுக்கென குப்பத்தில் ஆக 3 சென்டர்கள் பணியாற்றுகின்றன.

வருஷம் ஒன்றுக்கு சராசரி 120 பேர் வருகின்றனர். நாகூர் செம்படவப் பெண்மணிகள் நன்றாக எழுதப்படிப்பதில் அக்கரை கொண்டுள்ளனர். சுமார் 48 பேர்கள் எழுதப்படிக்கக் கற்றுக்கொண்டனர்.

அம்மாப்பேட்டையிலும் இதே மாதிரி இரண்டு சென்டர்கள் உள்ளன. சராசரி 50 பேர்கள் வீதம் வரும் பெண்மணிகளில், 18 பேர்கள் எழுதப்படிக்கக் கற்றுக்கொண்டனர். நூல் நூற்பதிலும், படிப்பதிலும் இங்குள்ளோர் சிரத்தை காட்டுகிறார்கள். சுமார் 27 பெண்கள் நூல் நூற்பு மூலம் பணம் சம்பாதித்துச் சேமிக்கவும் செய்திருக்

கிறார்கள். சாலியமங்கலம் பிர்க்காவைப்பற்றி முன்னரே கூறப்பட்டுள்ளது. இங்குள்ள மாதர் நல இலாகா கிளையிலும் 3 சென்டர்கள் உள்ளன.

நீதியும் நிர்வாகமும் பிரிக்கப்பட்டு, நம் ராஜ்ய நிர்வாக முறையிலேயே ஒரு பெரும் மாறுதலை உண்டாக்கும் திட்டம் 1949-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 2-ம் தேதி முதல் ஆரம்பமாகி, 16 ஜில்லாக்களும் அமல் நடந்து வருகிறது. விரைவில் இந்த ஜில்லா உள்பட எல்லாப் பிரதேசங்களுக்கும் விஸ்தரிக்கப்படும்.

## சமுதாய இழிவுகள் நீங்க

நம் நாட்டின் பண்பாட்டுக்கும், பண்டைய பெருமைக்கும் களங்கமாக இருந்த பல்வேறு பழக்க வழக்கங்களை அறவே நீக்க, மக்கள் அரசாங்கம் மறக்கவில்லை. பன்னெடு நூற்றாண்டுகளாக சமுதாயத்தில் நிலைத்து விட்ட சம்பிரதாயங்களை எதிர்த்துப் போராடுவது, சுலபமான காரியமல்ல. அதுவும் மதத்தின் பெயரால், மக்களின் நம்பிக்கையின் வலியால் நிலைத்து விட்டிருக்கும் காரியங்களைச் சீர்திருத்தும்போது, வெகு ஜாக்கிரதையாக இருக்கவேண்டியது மிக அவசியம். அவற்றால் ஒரு சிலருக்கு சௌகரியங்கள் ஏற்படுவதும் தவிர்க்க முடியாததாகும். பொதுவாக சமுதாயத்தின் முன்னேற்றத்துக்காகவும், நம் நாட்டுப் பண்பாட்டின் சிறப்பை நிலைநாட்டுவதற்காகவும் ஒரு சில முக்கிய சீர்திருத்தங்களை வெகு துணிச்சலோடும், தீர்க்க தரிசனத்தோடும் நம்மக்கள் அரசாங்கம் செய்துள்ளனர்; அவற்றுள் முக்கியமானவை, தேவதாசி முறை, குற்றபரம்பரைச் சட்டம், இருதாரமுறை, உயிர்ப் பலியிடல் முதலியவற்றை ஒழிக்கும் சட்டங்களாகும். வெளி நாட்டார் முன்னிலையில் மேற்சொன்ன பழக்கங்கள் நம்மை எவ்வளவு தூரம் சேவலப் படுத்தின என்பதை அதிகம் சொல்ல வேண்டியதில்லை. இவைபோன்றே இந்துமத ஆலயங்கள், அற நிலையங்கள் ஆகியவற்றைத்தக்கவாறு பாதுகாத்து நிர்வகிக்கவும் ஒரு சட்டம் இயற்றப்பட்டுள்ளது.

# ஐந்தாண்டுத் திட்டம்

> * ஆண் பெண் உள்ளிட்ட எல்லாப் பிரஜைகளும் ஜீவனோபாயத்துக்காகப் போதிய வழிவகைகளைச் சமமாகப் பெறவேண்டும்.
> * பொது நலத்தை முன்னிட்டு, சமூக சொத்து சுதந்திரங்களின் சொந்தமும் கட்டுப்பாடும் வகுக்கப்படவேண்டும்.
> * செல்வமும் பொருள் உற்பத்தி சாதனங்களும் பொதுஜனங்களுக்குப் பாதகமாகாத ரீதியில் ஒரு சிலரிடம் சேர்ந்துவிடாதபடி, பொருளாதார அமைப்பு இயங்கி வரும்படி பார்த்துக் கொள்ளவேண்டும்.
>
> இந்திய திட்டக் கமிஷனின் கொள்கைகள்

காலம் என்பது எல்லாவற்றையும் கடந்து நிற்பது. காலச்சக்கரத்தை யார்தான் தடைசெய்ய முடியும்? ஆயினும் அதன் நியதியை உணர்ந்து, அதற்கேற்ப தங்கள் வாழ்வை ஆராய்ந்து அமைத்துக்கொள்வோரும் இல்லாமலில்லை. அத்தகையவர்கள் காலத்தோடு சேர்ந்து முன்னேறும் ஆற்றலைப் பெறுகின்றனர்.

சென்ற காலத்தை நினைவில் வைத்துக்கொண்டு, நிகழ் காலத்தில் கடமைகளைச் செய்தவண்ணமே, எதிர்

காலத்தைப்பற்றியும் சிந்திக்கும் திறமை, மனிதர்களுக்குள்ள ஒரு சிறப்பான ஆற்றலாகும். மிருகங்கள் அன்றாட வாழ்க்கையைப்பற்றிமட்டும் கவலைப்படுகின்றன. நேற்று பற்றிய நினைவும், நாளைய பற்றிய எண்ணமும் இல்லாத நிலை, நாகரிகம் வளராததன் அறிகுறி.

பொதுவான இந்த உண்மைகள் தனி மனிதனுக்கு மட்டும் பொருந்துவன அல்ல. மொத்த சமுதாயத்துக்கும், சிறப்பாக நம் நாட்டிற்கு, அப்படியே பொருந்தும்.

மக்கள் பிரதிநிதிகள் 1946-ம் ஆண்டு அரசாங்கத்தை ஏற்றபோது, எல்லாவித அதிகாரங்களையும் அவர்கள் பெற்றிருக்கவில்லை. ஆங்கில அதிகாரவர்க்க அமைப்பும், ஆட்சிமுறையும் அப்போது இருந்து வந்தன. அவற்றுக்குட்பட்டே மக்கள் அரசாங்கம் செயலாற்ற வேண்டியிருந்தது. அதன் பிறகு 1947-ம் ஆண்டு ஆகஸ்ட்டு மாதம் 15-ந் தேதியன்று இந்தியா சுதந்திரம் அடைந்ததும், அநேக புதிய பிரச்னைகளும் பொறுப்புகளும் ஏற்பட்டன. அவற்றை உடனடியாகத் தீர்ப்பதில் தங்கள் முழுகவனத்தையும் அரசாங்கம் செலுத்த வேண்டியதாயிற்று. இவை தவிர, இரண்டாவது மகா யுத்தத்தின் விளைவாக உலகமெங்கும் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டிருந்தது.

மக்கள் அரசாங்கம் கடந்த ஐந்தாண்டுகளாக இத்தனை இடையூறுகளுக்கிடையேயும், பல்வேறு துறைகளிலே சிறந்த காரியங்களைச் சாதித்திருப்பதை, இது வரை கூறிவந்த விவரங்களால் அறியலாம். நிகழ்கால பிரச்னைகளைத் தீர்ப்பதோடு இந்த அரசாங்கம் நின்றுவிடவில்லை. எதிர்கால க்ஷேமத்துக்காக அவசியமான திட்டமொன்றை அவர்கள் திறம்பட வகுத்துள்ளனர். அதற்கு ஐந்தாண்டுத் திட்டம் என்று பெயர். இந்திய நாட்டின் எல்லாத்தேவைகளையும் சரிவர ஆராய்ந்து, அவற்றைப் படிப்படையாகத் தீர்க்க வழிகோலப்பட்டது. இங்குள்ள இயற்கைச் செல்வங்களையெல்லாம் நன்கு பயன்படுத்துவதற்கான வழி துறைகள் விவரிக்கப்பட்டன. சாகுபடியாகாமல் கிடக்கும் தரிசு நிலம், நிலத்துக்கடியிலுள்ள உலோகவகைகள், நதிகளில்

ஓடும் ஏராளமான நீர், சோம்பிக்கிடக்கும் அளவற்ற மனித சக்தி முதலியவற்றைத் தக்கவாறு உபயோகித்து, நாட்டின் செல்வ நிலையைப் பெருக்கி, மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்த முயற்சி மேற்கொள்ளப்பட்டது. அகில இந்திய ரீதியில் தயாரான இந்தத்திட்டம், நம் சென்னை ராஜ்யத்திற்கு மிகச் சிறந்த எதிர்காலத்தை உருவாக்க முனைகிறது. இதை நிறைவேற்ற ஐந்தாண்டுகளுக்கு 137 கோடி ரூபாய் செலவாகுமென மதிப்பிடப் பெற்றிருக்கிறது.

மக்கள் சர்க்கார் ஏற்படாததற்கு முன்பு, கல்வி, சுகாதாரம், விவசாயம், கூட்டுறவு முதலிய தேசிய அபிவிருத்தித் திட்டங்களுக்கு 10,61,84,000 ரூபாய் செலவிடப்பட்டு வந்தது. ஜனப்பிரதிநிதிகள் ஆட்சி வந்ததும், இந்தச் செலவு 42,22,50,000 ரூபாய் ஆயிற்று. எனவே, தேசீய அபிவிருத்தித் திட்டங்கள் முன்னை விட இப்போது நான்கு மடங்கு அதிகரித்துள்ளன. இவற்றுள் முக்கியமாக, நீர்ப்பாசனத்துறையிலே பிரமிக்கத்தக்க அபிவிருத்தி காணப்படுகிறது. 150 வருஷ ஆங்கில ஆட்சியில் சுமார் 18 கோடி ரூபாய் மாத்திரமே, இந்த ராஜ்யத்தின் நீர்ப்பாசனத் திட்டங்களுக்காகச் செலவிட்டார்கள். ஆனால், கடந்த ஐந்தாண்டுகளில் ஏறக்குறைய 20 கோடி ரூபாய் இதற்காக மக்கள் சர்க்கார் செலவிட்டுள்ளனர். இந்த ஆண்டில் மட்டும் சுமார் 10 கோடி ரூபாய் செலவிட உத்தேசித்திருக்கிறார்கள். இதன் விளைவாக, நாடெங்கும் அநேக நீர்ப்பாசனத்திட்ட வேலைகள் துரிதமாக நிறைவேறி வருகின்றன. சிறப்பாக, வறண்ட இடங்களிலும், ஜமீன் இனும் பிரதேசங்களிலும் இவை விசேஷமாக அங்கீகரிக்கப் பட்டுள்ளன.

தவிர மற்ற ராஜ்யங்களோடு ஒத்திட்டுப்பார்த்தால், சென்னை ராஜ்யம் பலவகையிலும் முன்னேறியிருப்பது நன்கு விளங்கும்.

அஸ்ஸாம், கிழக்கு பஞ்சாப் ஆகியவை உள்பட எல்லா ராஜ்யங்கள் சேர்ந்து, நீர்ப்பாசனம், மின்சாரம் ஆகிய

வற்றிற்கு 32 கோடி ரூபாய் செலவிடுகின்றனர். அவற்றுள் 13 கோடி ரூபாய் அதாவது மூன்றில் ஒரு பங்குக்குமேல், நம் ராஜ்யம் செலவழிக்கின்றது. பீஹார், மத்தியப் பிரதேசம், ஒரிஸ்ஸா, உத்தரப் பிரதேசம், மேற்கு வங்காளம் ஆகிய ராஜ்யங்கள் சேர்ந்து 11 கோடி ரூபாய் செலவழிக்கின்றன. இவை யெல்லாவற்றையும் விட இரண்டு கோடிக்கு மேலாக, நம் ராஜ்யம் ஒன்றே செலவிடுகிறது. உத்தரப் பிரதேசத்தை விட 3 மடங்கும், பீஹாரைவிட 6 மடங்கும், நம் ராஜ்யம் செலவிடுகின்றது. பம்பாய் ராஜ்யம் இந்த வகையில் செலவழிக்கும் ரூபாய் 8 கோடியேயாகும்.

நம் ராஜ்யத்தில் தேசீய அபிவிருத்திக்காகும் செலவில் சுமார் 50 சத விகிதம் நீர்ப்பாசனம், மின்சாரம் ஆகியவற்றுக்கே செலவிடப்படுகிறது. இதற்காக வங்காளத்தில் 7 சத விகிதமும், பீஹாரில் 12 சத விகிதமும், பம்பாயில் 29 சத விகிதமும், மத்தியப் பிரதேசத்தில் 30 சத விகிதமும், ஒரிஸ்ஸாவில் 22 சத விகிதமும், உத்தரப் பிரதேசத்தில் 41 சத விகிதமும் செலவிடப்படுகின்றன.

அடுத்த ஐந்தாண்டுகளில் கீழ்க்காணும் முறையில் தேசீய அபிவிருத்தித் திட்டங்களுக்காக அரசாங்கம் செலவிடும்:—

| | கோடி ரூபாய். |
|---|---|
| 1. நீர்ப்பாசன, மின்சார திட்டங்கள் | 80·4 |
| 2. விவசாயம், கிராமாபிவிருத்தி ... | 21·9 |
| 3. கைத்தொழில்கள் ... ... | 2·1 |
| 4. ரஸ்தா அபிவிருத்தி ... ... | 5·0 |
| 5. கல்வி, சுகாதாரம், இருப்பிட வசதிகள், பிற்பட்ட வகுப்பினர் முன்னேற்றம் முதலான மற்ற சமூக நிர்மாண வேலைகள் ... ... | 27·6 |
| ஆக மொத்தம் ... | 137·0 |

நீர்ப்பாசன, மின்சாரத் திட்டங்களுக்காக எல்லா ராஜ்யங்களுக்குமாகச் சேர்த்து மொத்தம் 191 கோடி ரூபாய் செலவிட உத்தேசித்துள்ளனர். இதில் சென்னை ராஜ்யம் ஒன்றே 80 கோடி ரூபாய் செலவிடும். மற்ற ராஜ்யங்களெல்லாம் சேர்த்து 111 கோடி செலவிடும். இதில், மற்றொரு முக்கிய விஷயம் கவனிக்கத்தக்கது. அதாவது, அந்தந்த ராஜ்யங்கள் நிறைவேற்றும் திட்டங்கள் அல்லாமல், பொதுவாக சில பெரிய திட்டங்களை மத்திய சர்க்காரே நிறைவேற்ற முடிவு செய்துள்ளனர். அவற்றிற்காக 176 கோடி ரூபாய் செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது. அத்தகைய திட்டங்களால் பஞ்சாப், பீஹார், மேற்கு வங்காளம், ஒரிஸ்ஸா ஆகிய ராஜ்யங்களுக்கே அதிகமான பலன் ஏற்படும். நம் ராஜ்யத்துக்கு அது போன்ற உதவி அதிகம் இல்லை. எனினும் இதை ஒரு பெருங் குறையாகக் கருதாது அபிவிருத்தித் திட்டங்களை நடத்த நமது ராஜ்ய சர்க்கார் தீவிரமாயுள்ளனர்.

செலவிடுவதில் மட்டும், நம் ராஜ்யம் முன்னணியில் நிற்கவில்லை. சிறந்த பலனைக் காண்பதிலும் அது முன் நிற்கிறது. அடுத்த ஐந்தாண்டுகளில் உத்தரப் பிரதேசம் 800,000 டன், பீகார் 874,000 டன், மேற்கு வங்காளம் 787,000 டன், பஞ்சாப் 650,000 டன், பம்பாய் 367,000 டன் தானியம் அதிகமாக உற்பத்தி செய்யும் என்று உத்தேசிக்கப்பட்டுள்ளது. சென்னை ராஜ்யம் 834,000 டன் உணவுப் பொருள் அதிகம் விளைவிக்கும். எனவே, பீகாருக்கு அடுத்தபடியாக, அதிக உற்பத்தி செய்யும் ராஜ்யம் சென்னையேயாகும்.

இந்த ஐந்தாண்டுத் திட்டத்தின், ஒரு சிறப்பான அம்சம், அனுபவ சாத்தியமானதாக இருப்பதேயாகும். நாட்டின் எதிர் கால வாழ்வில் நோக்கங்கொண்ட அதே நேரத்தில், மக்களின் நிகழ் கால நிலையையும் சர்க்கார் மறக்கவில்லை. ஜனங்களுக்கு அதிக கஷ்டமின்றியே, இந்தத் திட்டத்திற்குத் தேவையான நிதியைச் சேகரிக்க உத்தேசித்துள்ளனர்.

சர்க்கார் வருமான விவரம் வருமாறு :—

| | | |
|---|---|---|
| | | கோடி ரூபாய். |
| 1. | நிலவரி மூலம் சுமார் ... ... | 30 |
| 2. | அரசாங்கச் செலவில் சிக்கனம் செய்வது மூலம் ... ... | 5 |
| 3. | டெபாசிட் செலவினுல் மிகுதி யாகும் தொகை ... ... | 8 |
| 4. | அரசாங்கக் கடன் வசூல் மூலம் ... | 17 |
| 5. | ரிசர்வ் நிதியிலிருந்து திருப்பிப் பெறும் வகையில் ... ... | 27 |
| 6. | அதிகப்படி வரிவிதிப்பின் மூலம் ... | 20 |
| 7. | மத்திய சர்க்காரிடமிருந்து மானியம் ... ... ... | 30 |
| | ஆகமொத்தம் ... | 137 |

முன்பெல்லாம் நாட்டில் அமைதி நிலைநிறுத்தும் பொறுப்பைமட்டுமே அரசாங்கம் வகித்து வந்தது. சுருங்கச் சொன்னுல் போலீஸ் ராஜ்யமாக இருந்தது. ஆனுல் இன்றோ மக்கள் சர்க்கார் பராமரிப்பு ஆட்சியை நடத்து கின்றனர். அதாவது, பொது ஜன சர்க்காரின் வருமானமும் செலவும், மக்களின் சமூக, கலாசார, பொருளாதார க்ஷேமத்தை லட்சியமாகக் கொண்டே நிர்ணயிக்கப்படுகின்றன. சர்க்கார் வசூலிக்கும் பணம் முழுவதும்,மக்களின் பல்வேறு செளகரியங்களுக்கே திரும்பி வருகிறது. அதற்காக பல்வேறு சமூக நல வேலைகள் துரிதமாக நிறைவேற்றவே சர்க்கார் முயன்று வருகின்றனர். கடந்த ஐந்தாண்டுகளில் சிறந்த அபிவிருத்தியை ஏற்படுத்திய மக்கள் சர்க்கார் அடுத்த ஐந்தாண்டுகளில் மேற் சொன்ன திட்டத்தை வெற்றியோடு நிறைவேற்றி, நாட்டின் செல்வ வளத்தைப் பெருக்கி, பொது ஜனங்கள் சுபிட்சமாக வாழ வகை செய்யும் என்பதில் ஐயமில்லை.

# அபிவிருத்திப் பட்டியல்

[தஞ்சாவூர் ஜில்லா விவசாய சம்பந்தமான வேலைகளுக்கு மட்டும் தஞ்சை விவசாய ஜில்லா, பட்டுக்கோட்டை விவசாய ஜில்லா என்று இரு ஜில்லாக்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. உற்பத்தி உபகரண உதவி விவரங்கள் இரு ஜில்லாக்களையும் இணைத்துத் தொகுக்கப்பட்டு கீழே தரப்படுகின்றன.]

| | ஏக்கர்கள். |
|---|---|
| தஞ்சை ஜில்லாவின் மொத்த சாகுபடி நில விஸ்தீரணம் ... | 2,142,645 |
| நெல் சாகுபடி நில விஸ்தீரணம் ... | 1,720,000 |
| நிலக்கடலை ... | 72,500 |
| ராகி ... | 20,040 |
| எள் ... | 16,300 |
| தென்னை ... | 37,150 |
| பச்சைப்பயறு ... | 87,200 |
| உளுந்து ... | 24,000 |
| வரகு ... | 28,500 |
| காய்கறி ... | 9,500 |
| வாழை ... | 12,000 |
| கரும்பு ... | 1,560 |

[சர்க்காரால் விநியோகிக்கப் பெற்ற விவசாய உபகரணங்கள் - கருவிகள், உரவகைகள் விவரம்.]

| | | |
|---|---|---|
| சர்க்கார் கடந்த 4 வருஷங்களில் விவசாயிகளுக்கு கருவிகள் வாங்கக் கடன் உதவி செய்த வகையில் செலவானது ... | ரூ. | 4,41,745 |
| உர வகைகள் வாங்கக் கடன் உதவி செய்த வகையில் செலவானது ... | ரூ. | 7,97,400 |
| விவசாய இலாகா மூலம் விநியோகிக்கப்பட்ட உர வகைகள்— | | |
| பிண்ணாக்கு உரம் ... | டன். | 30,081 |
| ரஸாயன உரம் ... | ,, | 13,627 |
| விநியோகிக்கப்பெற்ற பொறுக்கு விதைகள் | ,, | 2,968 |
| இந்த விதைகள் மூலம் சாகுபடியான விஸ்தீரணம் [சுமார்] ... | ஏக்கர். | 150,000 |
| ஷை விதைகள் மூலம் அதிகமாக உற்பத்தியான தானிய அளவு ... | டன். | 12,753 |
| ஷை அதிக உற்பத்தி தானியத்தின் விலை மதிப்பீடு [சுமார்] ... | ரூ. | 23,73,330 |
| வண்டிப்பட்டை, வண்டி அச்சுகள், மண்வெட்டிகள், அரிவாள், பாணக்கோல், களைக்கொட்டு முதலியவற்றின் தொகை ... | | 72,141 |
| இரும்புக் கலப்பைகள் ... | | 9,923 |
| கலப்பை முதலிய உபகரணங்கள் ... | | 2,340 |
| இதர இரும்புக் கருவிகள் ... | டன் | 1,680 |
| பயிர்களைப் பூச்சி அரிக்காமல் தடுக்கும் வேலைக்காக, விவசாயிகளுக்கு அளிக்கப்பெற்ற மருந்துகளின் அளவு ... | டன் | 600 |

| | |
|---|---|
| ஷ மருந்துகளின் விலை மதிப்பீடு ... ரூ. | 14,050 |
| குப்பை உரத் தயாரிப்பு ... ... டன். | 18,445 |
| தஞ்சை, கும்பகோணம், மாயூரம் முனிசிபாலிட்டிகள் தயாரித்த உரவகைகள் ... டன். | 10,000 |
| விவசாயிகளுக்கு விவசாய இலாகா அளித்த குப்பை உர அளவு ... ... ... ... டன். | 40,000 |
| கடந்த நாலாண்டுகளில் அதிக உற்பத்தித் திட்டப்படி பரிசு பெற்றவர்கள் தொகை ... ... | 30 |
| | ரூபாய்கள். |
| ஷயார்களுக்கு சர்க்கார் அளித்த பரிசு மதிப்பீடு ... | 1,500 |
| புதிதாக வெட்டப்பட்ட கிணறுகளின் தொகை ... | 1,257 |
| புதுப்பிக்கப்பட்ட கிணறுகளின் தொகை ... ... | 372 |
| கிணறுகள் வெட்டுவதற்கான சர்க்கார் அளித்த | ரூ. அ.பை. |
| மொத்தத் தொகை ... ... ... | 2,17,417 8 0 |

## நீர்ப்பாசன அபிவிருத்தி.

| | |
|---|---|
| வெண்ணாறு, காவேரி நீப்பாசனப் பிராந்தியத்தில் உள்ள வடிகால் சீர்திருத்த வேலைகளுக்குச் செய்த செலவு ... ... ... ... | ரூபாய்கள். 29,63,000 |
| காவேரி டிவிஷனில் 61 வாய்க்கால்கள் மராமத்து செலவு ... ... ... ... ... | 79,000 |
| வெண்ணாறு டிவிஷனில் 43 வாய்க்கால்கள் மராமத்துச் செலவு ... ... ... ... | 75,000 |
| விசேஷமாக மேற்கொள்ளப்பட்ட சிறு திட்டங்கள் தொகை ... ... ... ... ... | 51 |
| அவற்றில் நிறைவேறிய திட்டங்களின் தொகை | 33 |
| அவற்றிற்கான செலவு தொகை ... ... ... | 15,00,000 |
| இந்தத் திட்டங்களினால் அதிகப்படியாக சாகுபடியாகும் விஸ்தீரணம் ... ... ... ... | ஏக்கர்கள். 18,556 |
| 1946 லிருந்து 1950 முடிய வெட்டப்பட்ட கிணறுகளின் தொகை ... ... ... ... | 1,257 |
| புதுப்பிக்கப்பட்டவை ... ... ... ... | 372 |
| மொத்தத்தில் கிணறு வெட்டுச் செலவுக்கான தொகை ... ... ... ... ... | ரூபாய்கள். 2,17,417 |

## ரஸ்தா அபிவிருத்தி.

| | |
|---|---|
| கொள்ளிடத்தின் குறுக்காக ஆணிக்காரன் சத்திரத்திற் கருகே ஒரு பெரும் கற்பாலம் அமைக்க மதிப்பீட்டுச் செலவு ... ... ... ரூ. | 28,50,000 |
| பாலத்தின் நீளம் சுமார் ... ... மைல். | 13 |
| பாலத்துள் அடங்கிய ரோட்டுப் பாதை அகலம் அடி. | 22 |
| பாலத்தின் கணவாய்கள் தொகை ... ... | 14 |
| | ரூபாய்கள். |
| ஷ பால அமைப்புச் செலவில் சர்க்கார் மட்டுமின்றி, முறையே தஞ்சை, தென் ஆற்காடு ஜில்லா போர்டுகள் அளிக்கும் தொகை .. | 12,00,000 |
| ஜில்லா ரஸ்தாக்களைச் செப்பனிட கப்பிச் செலவு .. | 2,80,843 |
| ஷக்கு போக்கு வரத்து செலவு ... ... ... | 3,47,411 |
| கீழ்த்தஞ்சை டிவிஷனில் மட்டும் 1946-49 முடிய ரஸ்தா அமைப்புக்கான செலவு ... ... | 10,00,000 |

| | |
|---|---|
| 1946-49;ல் மண் ரோடுகள் கப்பி ரோடுகளான வகையில் நீளம் ... ... ... மைல். | 77 |
| | ரூபாய்கள். |
| திருத்துரைப்பூண்டி-வேதாரண்யம் செல்லும் பாதையில் [13 மைல்களுக்கு மேல்] கப்பிபோட ... | 1,73,600 |
| மாயூரம் முனிசிபாலிட்டி எல்லையில் 2 மைல் காங்கரிட்போட ஆன செலவு ... ... ... | 1,31,000 |
| கிராம சாலைகள் அமைப்பு வகையில் கூத்தூர்-ஆத்தூர், உபயவேதாந்தபுரம்-பொறக்குடி, போலகம்-அண்ணமண்டபப் பூந்தோட்டச்சாலை— இவற்றை இணைக்க அனுமதித்த செலவு ... | 33,000 |
| வருஷந்தோறும் சிறு சிறு பாலம், வாய்க்கால் மதகுகள் அமைக்க ஆகும் செலவு ... ... | 1,24,000 |
| யுத்த பிற்காலச் சீரமைப்புத் திட்டப்படி அமைக்கப் பெற்ற பெரும் பாலங்கள் : கதிராமங்கலம் சமீபத்தில் காவேரியின் குறுக்கே ஒரு பாலம் ... | 37,000 |
| கஞ்சனம்-மஞ்சவாடி அருகில் புலவனாற்றில் ஒரு பாலம் ... ... ... ... ... | 23,000 |
| கோனேரிராஜபுரம் கிராம ரஸ்தாவில் நாட்டாற்றின் குறுக்கே ஒரு பாலம் ... ... ... ... | 19,000 |
| கீர்த்திமானாற்றில் ஒரு பாலம் ... ... ... | 13,300 |

## கிராமங்களுக்கு மின்சார வசதிகள்

[மின்சார வசதி அளிக்கப்பெற்றுள்ள கிராமங்களின் விவரம்.]

கீழ்த் தஞ்சைத் தொகுதியில்—

| | |
|---|---|
| தஞ்சை நகரவட்டம் ... ... ... ... | 4 |
| அறந்தாங்கி-மன்னார்குடி வட்டம் ... ... | 22 |
| மாயூரம் வட்டம் ... ... ... ... | 41 |
| நன்னிலம் வட்டம் ... ... ... ... | 54 |
| நாகப்பட்டினம் வட்டம் ... ... ... | 42 |
| பட்டுக்கோட்டை வட்டம் ... ... ... | 9 |
| சீர்காழி வட்டம் .. ... ... ... | 8 |
| திருத்துரைப்பூண்டி வட்டம் ... ... ... | 23 |
| கும்பகோணம் வட்டம் ... ... ... | 47 |
| ஆக மொத்தம் ... | 250 |

## கல்வி அபிவிருத்தி

| | |
|---|---|
| ஆரம்பப் பள்ளிகள் [தற்போதுள்ளவை] ... | 1,850 |
| இவற்றில் பயிலுவோர் [தற்போதுள்ளவை] ... | 202,000 |
| கட்டாயக் கல்வி முறை அமுலில் உள்ள கிராமங்களின் தொகை ... ... ... ... | 79 |
| ஜில்லா போர்டு நடுத்தரப் பள்ளிக்கூடங்கள் ... | 24 |
| தொழிற் கல்வி பயிற்றுவிக்கும் நடுத்தரப்பள்ளிகள் தொகை ... ... ... ... ... | 5 |
| ஷெக்கு சர்க்கார் அளித்த 1946-லிருந்து 50 வரை அளித்த மானியத் தொகை ... ... ரூ. | 46,011 |

## சுகாதாரம்.

| | |
|---|---|
| புதிதாகத் திறக்கப்பெற்றுள்ள கிராம ஆஸ்பத்திரிகள் [1946-50] ... ... ... ... | 11 |
| திருத்தி அமைக்கப்பெற்றுள்ள வைத்திய சாலைகள். | 5 |
| விரிவுபடுத்தப்பெற்றவை ... ... ... | 7 |
| ஜில்லாவிலுள்ள பெரிய ஆஸ்பத்திரிகள் அதிகரிக்கப்பட்டுள்ள படுக்கைகள் ... ... ... | 160 |
| தஞ்சை ஜில்லாவில் உள்ள அறந்தாங்கி, கும்பகோணம், நாகப்பட்டினம் ஜலவசதி திட்டங்களுக்கான செலவு ... ... ... ரூ. | 22,118 |

## கிராமாபிவிருத்தி

| | |
|---|---|
| அருந்தவபுரம் காலனி அமைக்க அனுமதிக்கப்பட்ட செலவு ... ... ... ரூ. | 35,000 |
| அமைக்கப்பெற்ற வீடுகள் தொகை ... ... | 150 |
| ஷை காலனியில் குடிதண்ணீர் வசதிக்கான செலவு ரூ. | 37,000 |
| கிராமாபிவிருத்தித் திட்டத்தின் கீழ் உள்ள சாலியமங்கலம் பிர்க்காவில் மட்டும் சாலைகள் அமைக்கச் சர்க்காருக்கான செலவு ... ... ரூ. | 5,33,365 |
| தஞ்சை ஜில்லாவில் கிராமாபிவிருத்தித் திட்டத்துக்குள்பட்ட கிராமங்கள் தொகை ... ரூ. | 180 |

## ஹரிஜன முன்னேற்றம்

| | |
|---|---|
| ஹரிஜன சிறுவர் சிறுமியர்களுக்கான பாடசாலைகள் [தற்போதுள்ளவை] .. ... ... ... | 149 |
| இந்தப் பள்ளிகளில் பயிலும் சிறுவர் சிறுமியர் ... | 10.000 |
| ஜில்லாவிலுள்ள ஹரிஜன ஹாஸ்டல்கள் தொகை. | 7 |
| இந்த ஹாஸ்டல்களின் பராமரிப்புக்காகச் சர்க்கார் வருஷந்தோறும் செலவு செய்யும் தொகை ரூ. | 30,000 |
| 1949-50-ல் ஹரிஜன மாணவர்களுக்கு அளித்த உபகாரச் சம்பளம் மூலம் சர்க்காருக்கான செலவு ... ... ... ... | ரூபாய். 6,460 12 0 |
| பகற் சாப்பாட்டுக்கான செலவு [1949-50-ல்] ... | 1,52,156 3 9 |
| சர்க்காரால் கட்டிக் கொடுக்கப்படும் வீடுகளுக்குச் சர்க்கார் அளிக்கும் மானியம் [தனி ஒரு வீட்டுக்கு] ... ... ... ... ... | 125 |
| ஹரிஜனக் குடியிருப்புக்கு அளிக்கப்பட்ட மனைக் கட்டுகள் [சர்க்காருக்குச் சொந்தமானவை, தனிப்பட்டோர் தாமாக வழங்கியவையும், தனிப்பட்டோரிடமிருந்து சர்க்கார் வாங்கிய வகையிலும்] விஸ்தீரணம் ... ... ... ஏக்கர். | 265 |
| இதனால் குடியிருப்பு வசதிபெற்ற ஹரிஜனக் குடும்பங்கள் தொகை ... ... ... ... | 5,336 |
| மனைக் கட்டுகளை வாங்கிய வகையில் சர்க்காருக்கான செலவு ... ... ... ரூ. | 1,12,152 13 5 |

## மதுவிலக்கு

| | |
|---|---|
| வேலையிழந்த மரமேறும் தொழிலாளர் தொகை ... | 11,600 |
| தற்போதேற்பட்டுள்ள பனைவெல்லக் கூட்டுறவுச் சங்கங்கள் ... ... ... | 25 |
| இவற்றில் வேலைபெற்றுள்ளவர் தொகை... ... | 501 |
| இவற்றில் உற்பத்தியான வெல்லம் ... மணங்கு | 4,347 |
| இதன் மதிப்பு ... ... ... ... ரூ. | 28,326 |
| பால் சப்ளை சங்கங்கள் ... ... ... ... | 17 |
| இவற்றில் வேலை பெற்றுள்ளோர் ... ... | 1,465 |
| கும்பகோணம் சர்க்கிளில் உள்ள 43 சங்கங்களில் கடந்த 1948 முதல் 50 வரை தயாரான பனை வெல்ல மதிப்பு ... ... ... ரூ. | 1,33,518 |

## வரிவஜா விவரம்

| | | |
|---|---|---|
| 1946—47 ... ... ... ... | ரூ. | 1,72,795 |
| 1947—48 ... ... ... ... | ,, | 2,00,766 |
| 1948—49 ... ... ... ... | ,, | 1,86,215 |
| 1949—50 ... ... ... ... | ,, | 2,75,082 |
| ஆக மொத்தம் | ,, | 8,34,858 |

# முக்கிய குறிப்புகள்

## பொது விவரம்

*தஞ்சை ஜில்லா விஸ்தீரணம் [சதுர மைல்கள்] 3,742*

*தாலூகாக்களின் விவரம்:—கும்பகோணம், மாயூரம், சீர்காழி, நன்னிலம், திருத்துறைப்பூண்டி, அறந்தாங்கி, பாபநாசம், தஞ்சை, பட்டுக்கோட்டை, நாகப்பட்டினம், மன்னார்குடி.*

*கிராமங்களின் தொகை .. .. 2,631*

*கிராம அபிவிருத்தி இலாகா மேற்பார்வையிலுள்ள பிர்க்காக்கள் ... ... ... 3*

*சாலியமங்கலம், தலைஞாயர், வேதாரண்யம்.*

## ஜனத்தொகை

| | |
|---|---|
| *தஞ்சை ஜில்லாவின் 1941-ம் வருஷ ஜனத்தொகை .. ..* | *2,563,375* |
| *தஞ்சை ஜில்லாவின் 1951-ம் வருஷ ஜனத்தொகை .. .. ..* | *2,979,754* |
| *இவற்றில் ஆண்களின் தொகை .. ..* | *1,469,804* |
| *பெண்களின் தொகை ..* | *1,510,850* |
| *தஞ்சை ஜில்லாவின் கிராம வாசிகளின் தற்போதைய தொகை .. .. ..* | *2,700,000* |
| *தஞ்சை ஜில்லாவின் நகரவாசிகளின் தொகை.* | *275,000* |
| *கடந்த 10 வருஷங்களில் அதிகரித்துள்ள மொத்த ஜனத்தொகை .. .. ..* | *416,379* |
| *தஞ்சை ஜில்லாவின் தற்போதைய ஓட்டர்களின் தொகை ... .. .. ..* | *1,397,294* |
| *தஞ்சை ஜில்லாவுக்கான சட்டசபைத் தொகுதிகள்:—* | *14* |
| *ஒற்றை அங்கத்தினர் தொகுதிகள்* | *9* |
| *பன்மை அங்கத்தினர் தொகுதிகள் ..* | *5* |

## கல்வி

*சர்க்கார் கல்லூரி:—கும்பகோணம்.*

*சம்ஸ்கிருதக் கல்லூரி:—திருவையாறு.* *2*

*உபாத்திமைப் பயிற்சிப் பள்ளிகளின் தொகை.* *3*

*சர்க்கார் பயிற்சிப் பள்ளி, தஞ்சை.*

*செயின்ட் தெரிசா பயிற்சிப்பள்ளி, தரங்கம்பாடி.*

*ஸி. எஸ். எம். பயிற்சிப்பள்ளி, ஷ*

*சர்க்கார் ஆதாரக் கல்விப் பயிற்சிப் பள்ளிகள்* *2*

*நாகப்பட்டினம், வேதாரண்யம்.*

*ஆதாரக் கல்விப் பயிற்சிப் பள்ளி, [பெண்கள்]:—தஞ்சை.* *1*

*ஜில்லா போர்டு உயர்நிலைப்பள்ளிகள்* *23*

*ஷ பள்ளிகள் உள்ள ஊர்களாவன:—அய்யம்பேட்டை, கொடவாசல், கூத்தாநல்லூர், குத்தாலம், நன்னிலம், ஒரத்தநாடு, பாபநாசம், பட்டுக்கோட்டை, திருத்துறைப்பூண்டி, திருவாரூர், கீவளூர், ஆயக்காரம்பலம், பேரளம், வேதாரண்யம், அம்மாப்பேட்டை, மணல்மேடு, கொரடாச்சேரி, ராஜாமடம், முத்துப்பேட்டை, அறந்தாங்கி, கீழ்ப்பெரும்பள்ளம், வல்லம், நாச்சியார்கோயில்.*

*முனிசிபல் உயர்நிலைப் பள்ளிகள்* *4*

*கும்பகோணம் 2, கொரநாடு 1, மாயவரம் 1.*

சர்க்காரின் மானிய உதவி பெறும் மிஷினரி உயர்தரப் பள்ளிகள் 7

தரங்கம்பாடி, கும்பகோணம் 2, நாகப்பட்டினம், சீர்காழி, மன்னார்குடி, தஞ்சாவூர்.

சர்க்காரின் மானிய உதவி பெறும் தனிப்பட்ட உயர்தரப் பள்ளிகள் 20

கருந்தட்டாங்குடி, கும்பகோணம் 3, மன்னார்குடி, நாகப்பட்டினம், பொறையார், சீர்காழி, தஞ்சை, திருவையாறு, மாயூரம், ராஜகிரி, விஷ்ணுபுரம், நாகூர், உமையாள்புரம், ஆயங்குடிபள்ளம், அதிராம் பட்டணம், திருவிடைமருதூர்.

| | |
|---|---|
| முதியோர் கல்வி நிலையங்கள் .. .. | 41 |
| தொழிற் கல்விப் பள்ளிகள் .. .. .. | 5 |

ஜில்லா போர்டு கைத்தொழிற் பள்ளி :—தஞ்சை.
செயின்ட் பிரான்ஸிஸ் ஜேவியர் தொழிற் பள்ளி :—தஞ்சை.
செயின்ட் மேரீஸ் தொழிற் பள்ளி :—கும்பகோணம்.
முனிசிபல் ஆர்ட் ஸ்கூல் :—கும்பகோணம்.
செயின் சிசிலி தொழிற்பள்ளி :—கும்பகோணம்.

விவசாயம்

| | |
|---|---|
| தஞ்சை ஜில்லாவில் உணவு தானிய சாகுபடியாகும் நிலப்பரப்பு ஏக்கர் .. .. | 2,142,645 |

விவசாய டிமான்ஸ்டிரேட்டர்கள் 5

ஸ்தலங்கள் :—கும்பகோணம், மாயூரம், சீர்காழி, நன்னிலம், கொடவாசல்.

விவசாய ஆராய்ச்சிப் பண்ணைகள் 2

ஆடுதுறை, பட்டுக்கோட்டை.

வாழை ஆராய்ச்சிப்பண்ணை. 1

ஆடுதுறை.

பஞ்சாயத்துக்கள்

| | |
|---|---|
| பெரிய பஞ்சாயத்துக்கள் .. .. .. | 24 |
| சிறிய பஞ்சாயத்துக்கள் .. .. .. | 628 |

முனிசிபாலிட்டிகள் 6

தஞ்சை, கும்பகோணம், மாயூரம், மன்னார்குடி, நாகப்பட்டினம், திருவாரூர்.

சுகாதார ஸ்தாபனங்கள்

| | |
|---|---|
| சர்க்கார் மேற்பார்வையிலுள்ள ஆஸ்பத்திரிகள் .. .. .. .. | 8 |

சர்க்கார் தலைமை ஆஸ்பத்திரி—தஞ்சை.
சர்க்கார் ஆஸ்பத்திரி :—கும்பகோணம், மாயூரம், மன்னார்குடி, நாகப்பட்டினம், பட்டுக்கோட்டை, திருவாரூர், திருத்துறைப்பூண்டி.

லோகல்பண்ட் ஆஸ்பத்திரிகள் 35 :—

ஆடுதுறை. அதிராம்பட்டணம், பேட்டை, அம்மையப்பன், அறந்தாங்கி, ஆவுடையார்கோவில், அய்யம்பேட்டை, ஏனங்குடி, கந்தர்வகோட்டை, கீவளூர், கொடவாசல், கூத்தாநல்லூர், குத்நாலம், மணல்மேடு, மிமிசால், முத்துப்பேட்டை, நன்னிலம், நாச்சியார்

கோவில், நீடாமங்கலம், ஒரத்தநாடு, பொறையார், பாபநாசம் பேரளம், பெரும்பண்ணையூர் சங்கரம்பந்தல், சுவாமிமலை. சீர்காழி, திருக்காட்டுப்பள்ளி, திருக்பனந்தாள், திருவையாறு, திருவிடைமருதூர், வலங்கைமான், வலிவலம், வேதாரண்யம் வைத்தீசுவரன் கோவில்.

## தென் இந்திய ரயில்வே வைத்திய சாலைகள்

| | |
|---|---|
| மாயூரம், தஞ்சை, திருவாரூர் .. | 3 |

## மிஷினரி வைத்திய சாலைகள் 1

| | |
|---|---|
| சென்ட்ஆனிஸ் ஆஸ்பத்திரி—கும்பகோணம். | |
| மாதர்கள், குழந்தைகளுக்கான வைத்தியசாலைகள் .. | 3 |
| நாகப்பட்டினம், திருத்துரைப்பூண்டி, கும்பகோணம். | |
| இந்திய வைத்திய [ஆயுர்வேத, சித்த] சாலைகள் .. | 28 |

## மாதர்நல இலாகா வட்டாரங்கள் 4

நாகப்பட்டினம், அம்மாப்பேட்டை, சாலியமங்கலம், தஞ்சை.

## ஹரிஜன க்ஷேமாபிவிருத்தி

| | |
|---|---|
| ஹரிஜனப் பள்ளிக்கூடங்கள் | 149 |
| மொத்த மாணவர்கள் [சிறுவர் 7587 சிறுமிகள் 3378] .. .. | 10.965 |

## 1950–51-ம் ௵ முடிய மின்சார வசதி பெற்றுள்ள கிராமங்கள்

### அறந்தாங்கி

கூத்தாநல்லூர், பூவனூர், உள்ளிக்கோட்டை, மேலவாசல், நீடாமங்கலம், பெரம்பூர், ஆத்திக்கடை, கமலாபுரம், கோட்டையூர். ஆவிக்கோட்டை, பாமினி, சேரங்குளம், காரணவார், ஆலச்சேரி, பூதமங்கலம், லக்ஷ்மாங்குடி.

### மன்னார்குடி

நகர வார்டுகள் 2-ம், கொரடாச்சேரி, வேளுகுடி, வடபாதிமங்கலம், மாயூரம் 9 வார்டுகள், குத்தாலம், தரங்கம்பாடி, திருமணஞ்சேரி, கிழையூர். அஞ்சரவத்தலை, தொழுதலாங்குடி, நல்லாத்தான்குடி. அரிவளூர், ஆக்கூர் ஆனதாண்டவபுரம் சித்தாக்காடு எரவஞ்சேரி, கடலங்குடி கோமல், கோனேரி ராஜபுரம், மங்கநல்லூர். நீடூர், பெருமாள் கோயில், மேலையூர். செம்பனார் கோயில் மூலையூர். முப்படுகை, திருவழுந்தூர், வாதிராஜபுரம், ஆர்யபுரம் கொத்தாங்குடி, சம்பநாதபுரம். சோழச்சக்கரநல்லூர், திருக்கச்சூர், வடகரை, பொறையார், எருக்கட்டாஞ்சேரி, எலந்தங்குடி, குமாரமங்கலம், கொல்லுமாங்குடி, கள்ளப்பநல்லூர், காளஹஸ்திநாபுரம், முழையூர், பழவராயப்பட்டு அச்சுதமங்கலம், அம்மையப்பன், ஆனைக்குப்பம், ஏனான்குடி, அதிலையூர்.

### நன்னிலம்

கமலாபுரம், கணலாஞ்சேரி, கொடவாசல், குழிக்கரை, பெருந்துறைக்குடி, மருதவாணஞ்சேரி, முடிகொண்டான் மூலங்குடி, நன்னிலம், பேரளம், நல்லமாங்குடி, புட்டகரம் சென்னநல்லூர் மாப்பிள்ளைக்குளம், திருகண்டேசுவரம், சேங்காலிபுரம், மணவாளன்

பேட்டை, ஸ்ரீவாஞ்சியம், திட்டச்சேரி, திருக்கண்ணபுரம், திருப்புகளூர், விற்குடி, விஷ்ணுபுரம், வடமட்டம், பவித்திர மாணிக்கம், அரசவானன்குடி, செம்மங்குடி, திருக்களம்பூர், திருவீழிமழலை, கொத்தல்குடி, கூத்தனூர், பூந்தோட்டம், கொளித்திரமங்கலம், உத்திரங்குடி, மருங்கூர், தேதியூர், திருமருகல், பிரத்ரர்மன் வடுககுடி, கடகம் பாடி, மானவநல்லூர், கீரனூர், வண்டம்பாளை, திருக்கண்ணமங்கை, பூதகுடி, குவளைக்கால்.

திருவாரூர்

திருவாரூர் நகர வார்டுகள் 4.

ஆலங்குடி, விஜயபுரம், கொடிக்கால்பாளையம், அலிவலம், தொப்புளான் புலியூர், புலிவலம், திருக்குவளை, எட்டுக்குடி, கூடூர், உளனி, மாவூர், கொளப்பாடு, மானக்குடி, ஆலத்தம்பாடி, அப்பரக்குடி, தென்னவராயநல்லூர், வலிவலம், குன்னியூர், பின்னவாசல்.

பட்டுக்கோட்டை

பட்டுக்கோட்டை, நகரம், அதிராம்பட்டினம், அணைக்காடு, மதுக்கூர், நாட்டுச்சாலை, மூவலூர், துவரங்குறிச்சி.

சீர்காழி

சீர்காழி நகரம், வைத்தீஸ்வரன்கோயில், தாடாளன் கோயில், ஆணிக்காரன்சத்திரம், ஐவேலி, கதிராமங்கலம், விளாந்திரம், வல்லம், எல்லப்பட்டி.

திருத்துரைப்பூண்டி

திருத்துரைப்பூண்டி நகர வார்டுகள் 14.

முத்துப்பேட்டை உதயமார்த்தாண்டபுரம், ஆலங்காடு, இடையூர், மணலி மாங்குடி, பாண்டி, சேங்கந்தி, தலைஞாயர், பாளையங்குடி, தில்லைவிளாகம், கொடியாலத்தூர், நெடும்பலம், சித்தமல்லி, வேதாரண்யம், தோப்புத்துறை, கருப்பன்பள்ளம், வைமேடு, திருக்கரைவாசல், காட்டுமேடு ஜாம்பவனோடை, வடகாடு, வேளூர், செருகளத்தூர், புன்னைவடப்பட்டி, கீழவலையூர், கப்பமங்கலம், மூலங்குடி, பதவக்கோட்டை, கடலங்குடி.

கும்பகோணம்

கும்பகோணம், தாராசுரம், சாக்கோட்டை, சுந்தரப்பெருமாள் கோயில், பாபநாசம், ராஜகிரி, பண்டாரவாடை, அய்யம்பேட்டை, திருவையாறு, ராயம்பேட்டை கணபதி அக்ரஹாரம், விரமாங்குடி, சோமேஸ்வரபுரம், தேவன்குடி, மிலட்டூர், திருக்கங்காவனூர், மாரியம்மாகோயில், பூண்டி, திருப்புவனம், அம்மாப்பேட்டை, வலங்கைமான், திப்பிராஜபுரம், நாச்சியார்கோயில், திருவிடைமருதூர், தேப்பெருமாநல்லூர், வேப்பத்தூர், ஆடுதுறை, மருதாநல்லூர், இரும்புத்தலை, சடமங்கலம், காளஞ்சேரி, உக்கடை, சுவாமிமலை, திருநாகேசுரம், நரசிங்கம்பேட்டை, திருவாடுதுறை, மட்டையந்திடல், வல்லத்தூர், மடக்குடி, திருவிசலூர், அம்மா சத்திரம், கல்யாணபுரம், கண்டியூர், திருப்பயனம், தில்லைஸ்தானம், ஈச்சங்குடி, திருச்சேறை, இஞ்சிக்கொல்லை.

நாகப்பட்டினம்

நாகப்பட்டினம் நகரம், வெள்ளிப்பாளையம், நாகூர், ஆண்டான் பேட்டை, புத்தூர், சிக்கல், பொறவாச்சேரி, கீவளூர், பாப்பாகோயில், வேளாங்கண்ணி, கருவேலங்கடை, ஆடிப்பள்ளம், எக்ஸ்டென்ஷன், குறிச்சி, புலியூர், அலியூர், மஞ்சக் கொல்லை, அடியக்காமங்கலம், குமரன்குடி, ஓடச்சேரி, செங்கமங்கலம்.

தஞ்சை

தஞ்சை நகரமும் சுற்றுப்புறமும்,

திருக்காட்டுப்பள்ளி, ஓம்பத்துவேலி, பழமார்னேரி, தொழூர்.

MADRAS : PRINTED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS,




REG. NO. 86 '51—50000 HELIO, PHOTO-ZINCO PRESS, C.S.O. MADRAS